துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

# வள்ளல்களின் வரலாறு


சென்னைத் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர்

உயர்தரப் பாடசாலைத் தமிழாசிரியர்

எஸ். எஸ். அருணகிரிநாத முதலியார் அவர்கள்

எழுதியது



ரா. லோகநாதம் பிள்ளை

305, வால் டாக்ஸ் ரோட்டு,

சென்னை.

1927 [விலை அணா 10

# அட்டவணை

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| | **I. அரிச்சந்திரன்** | |
| 1. | சுயம்வரம் | 1 |
| 2. | வசிஷ்டர் சபதம் | 5 |
| 3. | வள்ளற் றன்மை | 13 |
| 4. | துன்பப் பெருக்கு | 23 |
| 5. | அடிமைப்படல் | 28 |
| 6. | வள்ளற்றன்மையும் வாய்மையும் | 34 |
| | **II. கன்னன்** | |
| 1. | முன்னோர் வரலாறு | 44 |
| 2. | கன்னன் மன்னனாதல் | 50 |
| 3. | இந்திரனும் கன்னனும் | 62 |
| 4. | குந்தியும் அவள் மைந்தனும் | 69 |
| 5. | கொடையும் கொடைவலியும் | 76 |
| 6. | முடிவுரை | 89 |
| | **III. குமணன்** | |
| 1. | அரிச்சுவடிப் புலவர் | 90 |
| 2. | நகர் நீங்குதல் | 98 |
| 3. | குமணனது கொடைத்திறம் | 103 |
| | **IV. பாரி** | |
| 1. | முல்லைக்குப் பொற்றேர் அளித்தது | 113 |
| 2. | புகமுடம் பெய்தல் | 121 |
| 3. | கபிலரும் பாரி மக்களும் | 129 |
| 4. | பாரி மகளிரின் மணவினை | 140 |

# முன்னுரை

—※—

வரையாது கொடுத்து வறுமையுற்ற வள்ளல்கள் பலர் நிறைந்தது நம் இந்திய நாடு. நமது புராண இதிகாசங்களி லும், கன்ன பரம்பரையிலும், சரித்திரத்திலும் கொடைமட மிருந்த வள்ளல்களின் வரலாறுகள் மல்கிக் கிடக்கின்றன. அவர்களில், ஆரியருள் இருவரும் (அரிச்சந்திரனும் கன்ன னும்) தமிழருள் இருவரும் (பாரியும் குமணனும்) மிக்க கியாதிபெற்றவர்களாவர். இந்நால்வரின் வரலாற்றினை எனது நண்பர் திருவாளர் ரா. உலோகநாதம் பிள்ளையவர்கள் திருவாளர் எஸ். எஸ். அருணகிரிநாத முதலியார் அவர் களைக் கொண்டு இச் சிறு நூலில் வெளியிட்டிருக்கின்றனர். வாய்மையும் வள்ளன்மையும் குன்றிய இந் நாட்களில் இத் தகைய நூல்களே அவசியமாகும். இக் குறையை நிரப்ப வெளிவந்துள்ள இவ் வள்ளல்களின் வரலாற்றைக் காண எனக்கு உள்ளங் கொள்ளா உவகை உண்டாகின்றது.

இதன் ஆசிரியரின் புகழ் இப்போது தமிழ் நாட்டில் பரவியிருக்கும் நிலைமையில் அவரைப் பற்றிச் சொல்லுதல் மிகையாகும். மாணவர்க்கும் மற்றையோர்க்கும் உதவு மாறு எழுதிய இந் நூல் இனிய நடையில் தெள்ளிய சொற்களோடு துலங்குகின்றது. திருவாளர் ரா. உலோக நாதம் பிள்ளையவர்கள் வெளியிட்டுள்ள கதாவாசகங்களுள் இவ் வள்ளல்களின் வரலாறு தலைசிறந்து விளங்குமென்பது எனது நம்பிக்கை.

சென்னை,
27-9-27.

ம. சண்முகசுந்தரம், எம் ஏ., எல். டி.

# வள்ளல்களின் வரலாறு

## I. அரிச்சந்திரன்

### 1. சுயம்வரம்

பரதகண்டமென்று கூறப்படும் நந்தம் இந்திய தேயத்தில் தோன்று தொட்டுக் கோசலநாடெனப் பெயர் வாய்ந்த ஒரு நாடு சிறப்புற்றிருந்தது. அந் நாடு வளம் மிக வோங்கியதாய்ச் சரயுநதியின் பாய்ச்சலால் செழிப்புற்றிருந்தது. ஆங்குப் பூந்தாது நிறைந்த நறுமலர்ச் சோலைகளும், தீங்கனி வாய்ந்த தோப்புக்களும் நிறைந்திருந்தன. அன்றியும், புண்ணிய தீர்த்தத் தடாகங்களும், வழிபடுவோர்க்கு வீட்டினை யளிக்கவல்ல புனித ஸ்தலங்களும் அந் நாட்டில் மிகுந்திருந்தன. கால மழை செவ்வனே பெய்ததால், தானிய வகைகள் ஒன்றுக்கு ஆயிரமாக விளைந்து வறுமை நோயை அறவே அகற்றின. ஆதலின், அந் நாட்டிலுள்ளோர், பசிப்பிணி அறியாது, இல்லறத்தை நல்லறமாகக் கைக்கொண்டு, நல்லன வியந்து அல்லன கடிந்து, செல்வச் சிறப்புடன் இனிது வாழ்ந்திருந்தனர்.

இத்தகைய நாட்டின் நடுநாயகமாகவும் தலைநகரமாகவும் விளங்கியது அயோத்தி என்னும் அணிநகரமேயாம். அஃது ஆழ்ந்த அகழியும் உயரிய மதிலும் சூழப்பெற்றது; பகைவரை நாசப்படுத்தவல்ல பல அரண்களையும் உடையது.

அங்கு வானுலகைத்தையளாவிய கோபுரங்களும், தேவாலயங்களும எண்ணிறந்து பொலிந்தன ; அரண்மனைகள் இந்திர பவனம் போல் எழில் வாய்ந்து விளங்கின ; நால்வகைச் சேனைகளின் ஆர்ப்பு அடங்கியதில்லை ; எற்றவர்க்கு இல்லையென்னும் சொல் உணராச் சிரிய குடிகளே வாழ்ந்திருந்தனர்.

இத்தகைய நகர்க்கிறைவன் சூரிய வம்சத்துதித்த திரிசங்கு சக்கரவர்த்தியின் புதல்வனும் கதாநாயகனுமான அரிச்சந்திரன் என்பவனே. இவன் பகைவர் அஞ்சும் தோள் வன்மை பெற்றவன் ; அடுத்தவரைக்காக்கும் அருள்சேர் மனத்தினன் ; இலக்குமி கேள்வனைப் போன்ற எழில் வாய்ந்தவன் ; மன்னுயிரையெல்லாந் தன்னுயிரெனப் புரக்கும் கடப்பாடுடையவன் ; எவர்வரினும் இன்மொழி புகன்று எற்றதைச் சலிப்பின்றி ஈயவல்ல மேம்பாடுடையவன். ஆதலால், பழுமரத்தை நாடிய பறவைகள் போலப் பலரும் அவனைவக்கேகித் தத்தம் வேண்டுகோள் நிறைவேறப் பெற்று மனமகிழ்வர்.

பரந்தகீர்த்தி வாய்ந்த மன்னர் மன்னனாகிய அரிச்சந்திரன், பல சிற்றரசர்கள் தன்முன் வணங்கி நிற்ப, மந்திரி பிரதானிகளிடை வீற்றிருந்து செவ்வனே செங்கோல் நடாத்தி வந்தான்.

ஒருநாள் சில தவச்சிரேஷ்டர்கள் அரிச்சந்திரனுடைய அவைக்களத்தை நண்ணினர். அரசன் தன் இருக்கை விட்டெழுந்து அவர்களை வணங்கினான். அம் முதியோர்களும் அவனை ஆசிர்வதித்துத் தமக்கிட்ட ஆசனங்களில் அமர்ந்தனர். அரிச்சந்திரன் பிறகு அவர்கள் வாய் மொழியால் அயல் நாட்டில் உள்ள விநோதங்களை அறிந்து மகிழ்ந்தான். மற்றும் அவன் அம் முனிவர்கள் மூலமாகக் கன்னமாபுரத்தை அரசாண்டு வந்த சந்திரதயன் என்பவனுடைய அருந்தவப்

புதல்வி சந்திரமதி யென்பாள் பலரும் வியக்கும் வனப்பு வாய்ந்தவளென்றும், விவாகம் ஆகாதவளென்றும் உணர்ந்தான்.

அரிச்சந்திரன் சந்திரமதியினுடைய எழிலையும் குணாதிசயங்களையும் ஆராய்ந்தறிந்து அவளையே தான வதுவை செய்துகொள்ளவேண்டுமென்று அவாக் கொண்டான். ஆதலின், அவன் தன் விருப்பத்தை அத் தவச்சிரேஷ்டர்களிடம் புகன்றான். அவர்களும் அவனுடைய விருப்பத்தின்படி கன்னமாபுரத்தை யடைந்து, சந்திரதயனுடைய சபையை நண்ணி, அவன் புதல்வியை மணம் பேசச் சம்மதித்தனர்.

உடனே அம் முனிவர்கள் அரிச்சந்திரனிடம் விடை பெற்று அயோத்தியை நீத்து, கன்னமாபுரத்தையடைந்து, சந்திரதயனுடைய அவைக்களத்தைச் சார்ந்தனர்.

சந்திரதயன் அவர்களை இன்முகத்துடன் வரவேற்றுத் தக்கபடி உபசரித்து அவர்கள் நாடி வந்ததைப்பற்றி வினவினான். உடனே அவர்கள் மன்னர் மன்னனாகிய அரிச்சந்திரனைப் பற்றிச் சொல்லி அவனது குணாதிசயங்கட்கு இணையானவள் சந்திரமதியே யென்றுங் கூறினர். கீர்த்தி வாய்ந்த அரிச்சந்திரனுடைய பெருமையை உணர்ந்த சந்திரதயன் உவகை மேற்கொண்டான். மேலும், தன் மகள் அரிச்சந்திரனைக் கணவனாக அடைவாளாயின், அவளும் தானும் இயற்றிய நல்வினைப்பயன் பலித்ததென்று அவன் கருதினான். ஆகவே, அரிச்சந்திரனைத் தன்னுடைய மருமகனாக்கிக்கொள்ள அவன் சம்மதித்துத் தன்னுடைய எண்ணத்தை முனிவர்களிடம் கூறினான்.

சந்திரதயனுடைய அவைக்களத்தில் நடந்தேறிய விஷயங்களை அறிந்த தாதி யொருத்தி ஓடிச்சென்று சந்திரமதி

யிடம் அரிச்சந்திரனைப்பற்றி விவரமாகக் கூறினாள். இதைக் கேட்டவுடன் அவளும் அரிச்சந்திரனுக்கே மாலையிட விருப்பங்கொண்டாள்.

பின்னர், சந்திரதயன் தன் அருந்தவப் புதல்வி சந்திரமதிக்குச் சுயம்வரமென்று அரசர்களெல்லோருக்கும் ஓலை போக்கினான். சந்திரமதிக்குச் சுயம்வரமென்றுணர்ந்த அரசர்களெல்லோரும், அவளை மணந்து கொள்ளவேண்டுமென்று பேரவாக்கொண்டு தத்தம் நால்வகைச் சேனைகளுடன் நாடு நகரங்களைக் கடந்து கன்னமாபுரத்தை யடைந்தனர்.

கன்னமாபுரத்திலிருந்து மீண்ட முனிவர்கள் மூலமாகச் சந்திரதயனுடைய கருத்தை உணர்ந்த அரிச்சந்திரன் பேருவகை யெய்தினான். உடனே அவன் தன்னுடைய பரிவாரங்கள் புடைசூழப் பொற்றேர்மீது ஆரோகணித்துக் கன்னமாபுரத்தை யடைந்தான்.

சுயம்வர நாளும் வந்தது. கன்னமாபுரி முழுவதும், விசித்திர அலங்காரங்கள் பொலிவுற்று விளங்கின. வாயில்கடோறும மகரதோரணங்களும், பொற்கலசங்களும ஏனைய மங்கலப் பொருள்களும் பொலிந்தன. மங்கல கீதம் எங்கும் ஒலித்தது. அன்னிய அரசர்களின் முரசொலியும், சேனைகளின் ஆர்ப்பும் கடலோசையை வென்றன. காலில் வீரக்கழலும, மார்பில் இரத்நாரமும், தோளில் வாகுவலயமும், சிரசில் கிரீடமும் தரித்து அரசர்களெல்லோரும் சுயம்வர மண்டபத்தில் குழுமியிருந்தனர். குறித்தகாலம் நெருங்கியதும், சந்திரமதி, தாதியர்கள் புடைசூழ, விண்மீன் நடுவிற் செல்லும் தண்மதிபோல, நறுமலர்மாலையைக் காத்தேந்திச் சுயம்வர மண்டபத்தை யடைந்தாள். அரசர் ஒவ்வொருவருடைய விருத்தாந்தத்தையும் தாதியர் கூறக் கேட்டுச் சந்திரமதி அன்னமென நடந்து சென்றாள். கடைசியாக

அவள் அரிச்சந்திரனை நெருங்கி, முன்னரே மனத்தோற்றத் தெழுந்த அவனைக் கண்ணாரக் கண்டு, அவனுடைய கழுத்தில் மலர்மாலையைச் சூட்டினாள். அவளுடைய செய்கையைக் கண்ட ஏனைய அரசர்கள் அருமணி யிழந்த நாகம் போன்று புழுங்கிய மனத்தராயினர். தான் விழைந்தவாறே முடிந்தமைக்கு அரிச்சந்திரன் பெருமகிழ் வெய்தினான். சந்திரதயனும் அளவிறந்த உவகை பூப்ப, அரிச்சந்திரனை அன்புடன் ஆசீர்வதித்தான். அன்றே, மறையவர் வேதமோத, மங்கல வாத்தியங்கள் முழங்க, ஆன்றோர் ஆசி கூற, அழற் கடவுள் சான்றாக, அரிச்சந்திரன் சந்திரமதியைத் திருமணம் செய்து கொண்டான்.

சின்னாட் கழிந்தபின்னர், அரிச்சந்திரன், தன் மனைவியுடன், நால்வகைச் சேனைகளும் புடை சூழப் பொற்றேர்மீதிலமர்ந்து, அயோத்தியை நண்ணிச் செவ்வனே செங்கோல் செலுத்தி வந்தான்.

பிறகு, திருவினும் மிக்க உருநலம் வாய்ந்த சந்திரமதி கண்டோர் காமுறும் வனப்பு வாய்ந்த ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள். புத்திரப்பேறுண்டான பெருமகிழ்வால் அரிச்சந்திரன், அநேக தான தருமங்கள் இயற்றி, ஏற்றவர்களுக்குப் பொன்னும், மணியும், ஆடையும் அளவின்றி அளித்தான். பெருமகிழ்ச்சியே அரசன் அவைக்களத்தில்! பேருவகையே அயோத்திமா நகரில்!!

## 2. வசிஷ்டர் சபதம்

சுடர்விட்டுப் பிரகாசிக்கும் பொற்கலசங்கள் பொருந்திய நீண்ட பல கோபுரங்களும், நவமணிகள் இழைக்கப் பெற்ற அழகிய மண்டபங்களும் அமராவதி நகரில் செறிந்து கிடந்தன. அங்கு முனிவர்களின் வேத சாலை

களும், யாக சாலைகளும், தேவ மாதர்கள் பயிலும் நடன சாலைகளும் கணக்கற்றிருந்தன. அந் நகரில் வசிந்த தேவர்கள் துன்பம் என்பதை உணராதவராய்த் தத்தம் இன்னுயிரனைய மனைவிமார்களுடனும், குறைவற்ற செல்வச் சிறப்புடனும் காலங் கழித்து வந்தனர். ஆதலின், தேவலோகத்தில் அமரர்க்கிறைவன் நகரில் வசித்திருந்தவர்களும், பூலோகத்தில் அயோத்தியில் வசித்திருந்த மக்களும் ஒன்றுபட்டிருந்தன வென்று கூறுவது மிகையாகாது.

பன்மணிகள் பதித்த வெள்ளைப் பளிங்கினுலாய சபா மண்டபத்தில், பொற்சிங்காதனத்தி லமர்ந்து அமரர்க்கிறைவன் அரசு செலுத்தி வந்தான். இலக்குமி போன்ற வனப்பு வாய்ந்த இந்திராணி அருகிலிருந்து அழகு செய்ய, இரு மருங்கிலும் தேவமாதர்கள் வெண்கவரி யிரட்ட, கின்னரர் முதலிய தேவர்கள் வாச்சிய முழக்க வீற்றிருந்த தேவேந்திரனைத் திகருப் பாலகர்களும மனைய முனிசிரேஷ்டர்களும் வந்து கண்டனர். அமராவதிக் கிறைவன் தன்னைக்கண்ட எல்லோர்க்கும் அழகிய ஆசனங்கள் அளிக்க அவர்களும் அவற்றில் அமர்ந்தனர்.

பிறகு, தேவேந்திரன் அவர்களெல்லோரையும் நோக்கி, 'தவச்சிரேஷ்டர்களே! நான் உங்களை ஒரு விஷயத்தைக் குறித்து வினவ விரும்புகின்றேன். அதாவது, கடல் சூழ்ந்த பூலோகத்தில் அரசுபுரியும் மன்னர்களில் எவன் சகல சாஸ்திர விற்பன்னனாய் அறநெறியைக் கடைப்பிடித்து, வாய்மையைக் கனவிலும் மறவாது புரக்கும் கடப்பாடுடையோன்?' என்று கேட்டான்.

உடனே சகல வேதங்களையும் கசடறக் கற்றறிந்த தவச் சிகாமணியாகிய வசிஷ்டர், தேவர்கோனை நோக்கி, 'அமரர்க் கிறைவனே! மண்ணுலகத்தில் கோசல நாட்டினணிநகராகிய அயோத்தி யென்னும் திருப்பதியைப்

பரிபாலித்து வரும் அரிச்சந்திரனே மன்னுயிரைத் தன்னுயிர் போல ஓம்பும் தன்மையுடையவன், பகைவரை அடக்க வல்ல ஆற்றலுடையவன், அறநெறியைக் கடைப்பிடித் தொழுகும் சீரிய குணமுடையவன், வாய்மை நிறைந் தவன், எவர் வரினும் சலிப்பின்றி எதையும் கொடுக்கவல்ல வள்ளல்' என்று பதிலுரைத்தார்.

அவ்வாறு அரிச்சந்திரனைப் புகழ்ந்து கூறிய வசிஷ்டர் மொழியைக் கேட்டுக் காதி மைந்தராகிய விசுவாமித்திரர், கோபங் கொண்டார். முற்காலத்தில் வசிஷ்டரால் தாம் ஒரு சமயம் தோல்வி யடையப்பட்டதின் நினைப்பு அப்பொழுது அவர் மனத்தில் தோன்ற, அவர் வசிஷ்டருடைய வாய் மொழியைப் பொய்ப்படுத்த உறுதிகொண்டார்.

அதனால், அவர் வசிஷ்டரை நோக்கி, 'வசிஷ்டரே! அந்த அரிச்சந்திரனே கொடியன்; மகா பாதகன்; பொய் மையைப் புகலும் புல்லியன்; வஞ்சகம் நிறைந்தவன். இத் தகைய குணக்கேடுடைய ஒருவனை நீர் இச் சபையின்கண் இவ்வளவு புகழ்ந்துரைத்தீர்! இதனால் உமக்கு என்ன பிரயோசனம் உண்டாகக் கூடும்?' என்று கேட்டார்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட வசிஷ்டர், ஆச்சரிய மும் கோபமும் அதிகரிக்க, விசுவாமித்திரரைப் பார்த்து, 'நீர் சொல்லுவது அடாது. சகல நற்குணங்களும் ஒருங்கு திரண்டு ஒருருவாய்ப் போந்த அவ்வரிச்சந்திரனை இவ்வாறு இச் சபையில நீர் இழித்துக் கூறுவது கொடுமையினுங் கொடுமை. உம்முடைய தவமகிமையின் செருக்கால் இவ் வாறு கூறுவது உமக்கே கேட்டை விளைவிக்கும்' என்று கூறினார்.

உடனே விசுவாமித்திரரும் கோபத்துடன், மறுமொழி கூறப்புகும்போது தேவேந்திரன், சட்டெனத் தன் இருக்கை

விட்டெழுந்து அவ்விருவர்களையும் நோக்கி, 'மாதவத்தீர்! சகல சாஸ்திரங்களையும் அற நெறிகளையுங் கற்றுணர்ந்த தாங்க ளிருவரும் இவ்வாறு ஒருவர்மீதொருவர் சீற் றங்கொண்டு கடுமொழி கூறுவது தகாது. தாங்களே இவ் வாறு ஏனையவர்களைப்போலச் சண்டையிடுவது அடாது. நீங்கள் ஒவ்வொருவரும் கூறியவற்றி னுண்மையைப் பரி சோதிப்போம். அப்போது யார் தோல்வி யடைகிறார் களோ அவர் வெற்றி பெறவோர்க்கு ஏதேனும் செய்தல் அவசியம். என்ன சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டுத் தன் ஆசனத்தில் அமர்ந்தான்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட வசிஷ்டர், 'நான் அரிச் சந்திரனைப் பற்றிக் கூறியவைகளில் ஒன்றாவது தவறென விசுவாமித்திரர் நிரூபித்தால், அக்கணமே, நான் என்னு னுடைய தவமகிமையை யெல்லா மிழந்து, தேவலோகத்தை நீத்துத் தாழ்ந்தவர்களோடு வசிப்பேன். இது நிச்சயம்' என்று சபதங் கூறினார்.

அவருடைய உரையைக் கேட்ட நாரதமுனிவர் விசுவாமித்திரரை நோக்கி, 'விசுவாமித்திரரே! வசிஷ்ட முனிவர் செய்த சபதம் சாதாரணமானதன்று. அரிச்சந் திரனுடைய குணங்களைத் தீர உணர்ந்து அவன் நீதி நெறி பிறழான் என்ற நம்பிக்கையினாலேயே அவ்வாறு கூறினார். ஆதலின், இனி நீர் அவருடைய மொழிகளை மறுக்க உத்தே சிக்கிறீரா?' என்று கேட்டார்.

கௌசிகமுனிவர் நாரதர் முதலியோரைப் பார்த்துத் தம்முடைய வாய்மொழியே உண்மையெனத் தாம் நிரூ பிப்பதாகவும், அப்படிச் செய்யத் தவறினால் தம்முடைய தவத்தில் பாதியை அவ்வரிச்சந்திரனுக்குக் கொடுத்து விடுவ தாகவும் சபதம் செய்தார்.

அங்கு நடந்தேறிய விஷயங்களைத் தாம் தம் இயற்கைக் குணப்படி அரிச்சந்திரனிடத்தில் தெரிவிக்கவில்லையென நாரதர் வாக்குறுதி கொடுத்தார். கௌசிக முனிவரும், தம்முடைய சபதத்தை நிறைவேற்றுவதன் நிமித்தம், தேவேந்திரனிடம் விடைபெற்று மகாமேருச்சாரலருகி லிருந்த பூஞ்சோலையை யடைந்து தம்முடைய பன்னக சாலைக்குள் புகுந்தார்.

அவர் வருகையை யறிந்த அநேக முனிவர்கள் அவரைக் காணும்பொருட்டு அப் பன்னகசாலைக்குள் வந்து குழுமினர்.

குழுமிய அம் முனிவர்கள் கௌசிகமுனிவரை நோக்கி, 'ஐயன்மீர்! தேவலோகத்தில் அமரர்கோனது சபையில் புதிய விஷயங்கள் ஏதேனும் நிகழ்ந்தனவோ' என வினவினார்கள்.

அவர்களுடைய கேள்விக்குப்பதிலாகத் தேவலோகத்தில் நிகழ்ந்த அவ் வாக்குவாதத்தைப்பற்றி ஒன்றுங் கூறாது, தம்முடைய எண்ணத்தைமட்டும் பூர்த்தி செய்துகொள்ள நிச்சயித்துக் கௌசிக முனிவர், அவர்களை நோக்கி, 'தவச் சிரேஷ்டர்காள்! துறவறம் பூண்டொழுகும் நம்மவர்க்குப் பிரதானமான யாகாதி கிருத்தியங்களை முன்னிட்டே நான் இங்கு வந்தேன். தேவலோகத்தில் ஒருவித விநோத விஷயமும் நிகழவில்லை. ஆனால், முக்கியமான ஒரு யாகத்தை நிறைவேற்ற நான் விரும்புகின்றேன். அதற்கு உங்களுடைய உதவியையும் நாடுகின்றேன்' என்று கூறினார்.

அவருடைய வார்த்தைகளைக் கேட்ட மாதவத்தோர் தங்களாலியன்ற உதவியைக் கௌசிகருக்குச் செய்யச் சித்தமா யிருப்பதாக அவரிடம் கூறினர்.

உடனே கௌசிகர் அவர்களை நோக்கி, 'மாதவத்தீர்! நான் கூறிய யாகத்தைச் செய்து முடிப்பதற்குத் திரளான

திரவியம் வேண்டும். அவ்வளவு திரவியத்தையும் அயோத்தி நகராளும் மன்னர் மன்னனிட மிருந்து நாம் அடைதல் வேண்டும். அதனால், நீங்கள் சென்று அரிச்சந்திரனிடம் என்னுடைய கோரிக்கையை விளம்பி அவனுடைய கருத்தைத் தெரிந்து வாருங்கள்' என்று கூறினார்.

முனிவர்களும் கௌசிகருடைய விருப்பத்தின்படி நடக்க இசைந்து அவரிடம் விடைபெற்றுப் பல குன்றுகளையும் வனங்களையுங் கடந்து அயோத்தியை யடைந்து அரிச்சந்திரனுடைய அவைக்களத்தை நண்ணினார். தூய்மை நிறைந்த அரிச்சந்திரன் அவர்களை வரவேற்றுத் தக்க ஆசனங்களிலிருத்தி அவர்கள் நாடி வந்தவற்றை வினவினான்.

அம் முதியோர்கள் அவனை நோக்கி, 'மன்னர் மன்ன! நாங்கள் கௌசிக முனிவரால் அனுப்பப்பட்டவர்கள். அவர் அரியதோர் யாகம் இயற்ற மனங்கொண்டுள்ளார். அதனை முட்டின்றி முடிப்பதற்குத் திரண்ட பொருள் வேண்டி யிருக்கின்றது. அப் பொருளைச் சலிப்பின்றி ஈய வல்ல வள்ளல நீயே யென்று கௌசிகர் துணிந்து எங்களை நின்னிடம செல்லுமாறு அனுப்பினார்' என்று மொழிந்தனர்.

அவ்வுத்தமர்களுடைய வேண்டுகோளைக் கேட்ட அரிச்சந்திரன் பெருமகிழ் வெய்தி, அவர்கள் விரும்பும் திரளான திரவியத்தைக் கொடுக்கச் சித்தமாயிருப்பதாகக் கூறிப் பொருள் கொண்டுவருமாறு தன் பணியாளர்களுக்குக் கட்டளையிட்டான்.

உடனே முனிவர்கள், அரிச்சந்திரனை நோக்கி, 'மன்ன! நின்னுடைய வாக்குறுதியே போதும். நாங்கள் இன்னும் யாகத்தைத் தொடங்கவில்லை. தொடங்கியதும் நாங்கள் விழைந்த பொருளை நின்னிட மிருந்து பெற்றுக் கொள்ளு

கின்றோம். நீயும் நின்குடியும் நீடூழி வாழ்க' என ஆசிர் வதித்து, அரசனிடம் விடைபெற்று, மதில் சூழ்ந்த அயோத்தியை நீத்தனர்.

பிறகு, அம்முனிவர்கள் கௌசிகர் வசித்த பன்னசாலையை யடைந்து அவரிடம் அரிச்சந்திரன் பொருள் கொடுக்கச் சம்மதித்ததைக் கூறித் தத்தம் இடங்களுக் கேகினர்.

சில மாதங்கள் கழிந்தன. அரிச்சந்திரனுக்கு எத்தகைய துன்பம் செய்தாவது தன்னுடைய வாக்கைக் காப்பாற்றத் தீர்மானித்த கௌசிகர் அவனைக் காணும்பொருட்டு அயோத்தியை யடைந்து அரசனுடைய சபைக்குட் போந்தார்.

அவரைக் கண்டதும அரிச்சந்திரன் சிங்காதனத்தினின்று மெழுந்து அவரை வரவேற்று உபசரித்தான். பின்னர் அவர் நாடியது யாது என்று வினவினன்.

உடனே கௌசிகர் அவனை நோக்கி, 'அரசர்க்கரசே, புண்ணியம் நிறைந்ததும், மிகப் பொருட்செலவுள்ளதுமான பெரியதோர் யாகம செய்ய யான் தீர்மானித்திருக்கின்றேன். அதற்கு வேண்டிய பொருளை நாடியே நின்னிடம் வந்தேன். முன்னர், நீ இங்கு வந்த முனிவர்களிடம் வாக்குறுதி கொடுத்த பொருளைக்காட்டிலும் இன்னும் அதிகமாகப் பொருள் வேண்டியிருக்கிறது' என்றார்.

அவருடைய வார்த்தைகளைச் செவியிலேற்ற அரசர்க்கரசன், 'தேவரீர் விழைபும் எதையும் கொடுக்கச் சித்தமாயிருக்கின்றேன். "இவ்வளவு பொருள் வேண்டும்" என்று கூறினல் இக்கணத்திலேயே அவ்வளவு பொருளையும் தங்களுக்கு அளிக்கின்றேன்' என்று கூறினன்.

அவனுடைய வாய்மொழியைக் கேட்ட கௌசிகர், ‘அரிச்சந்திர! அம் முனிவர்களுக்குக் கொடுக்கச் சம்மதித்ததைக் காட்டிலும் பன் மடங்கு வேண்டியிருக்கின்றது. அவ்வளவும் கொடுக்க நீ சம்மதிக்கின்றாயா?’ என்று கேட்டார்.

உடனே அரிச்சந்திரன், ‘ஒரு தடையுமின்றி இப்போதே தருகின்றேன். தேவரீர் அதைப்பற்றிக் கவலையுறல் வேண்டாம்’ என்று பதிலளித்தான்.

அரிச்சந்திரனுடைய நற்குணப் பொலிவையும், வள்ளற்றன்மையையுங் கண்டு கௌசிகர் தம் மனத்தினுள் வியந்து, அவனை நோக்கி, ‘மன்னர் மன்ன, நீ வாக்குறுதி கொடுத்ததே போதும். நான் விரும்பும்போது அப் பொருளை எடுத்துச் செல்லுகின்றேன். அதுவரையில் அவற்றை நின்னிடமே அடைக்கலமாக வைத்துப் போகின்றேன்’ என்று மொழிந்து, அவனை ஆசீர்வதித்து அவைக்களத்தை விட்டகன்றார்.

அயோத்தியைக் கடந்து சென்ற கௌசிகர் தம்முடைய பன்னகசாலையை யடைந்து தீதில் குணத் தரிச்சந்திரனுக்கு எவ்வாறு துன்பம் இழைத்து அவனை அல்வழிச் செல்லுமாறு தூண்டலாம் என்று சிந்தித்தார். பிறகு அவர் தம்முடைய தவ மகிமையால் பிரம சிருட்டிக்கு வேற்றுமையின்றி ஏராளமான கொடிய விலங்கினங்களையும், பறவைச் சாதிகளையும் படைத்தார்.

அவைகளைக் கண்ட கௌசிகர் களிப்புற்று, அவைகளுக்குக் கோசல நாட்டில் புகுந்து, நகரம், வீடு, வாயில், கழனி முதலியவற்றை நாசமாக்கும்படி கட்டளையிட்டார்.

அவருடைய உத்தரவின்படி, மதங்கொண்ட யானைகளும், கொடிய வரிப் புலிகளும், சிங்கங்களும் எண்ணிறந்தனவாய்க் கோசல நாட்டிற் புகுந்தன. மேலும் மான்கள்,

குதிரைகள், பன்றிகள் முதலியன கழனிகளிற் புகுந்து பயிர்களை யெல்லாம் நாசஞ்செய்தன. அளவற்ற கிளிகள், மயில்கள் முதலிய பட்சிகள் பறந்து சென்று விளைச்சல்களை யழித்தன. பல மாந்தர்கள், யானையின் தந்தங்களால் குத்தப்பட்டு உயிரை நீத்தனர். பதுங்கிப் பாயும் புலிக ளுக்கு இலக்கானோர் பலர். பறவைகளைத் தடுக்கச் சென்று பாடுபட்டோர் அநேகர்.

கடைசியாகக் கோசல நாட்டில் இருந்த எண்ணிலாக் கழனிகள் நாசமுற்றன. தினைப்புனமும் நறுமணங் கமழும் சோலைகளும் இருந்தவிடம் தெரியாமல் அழிந்தன. அன்பு வாய்ந்த குடிமக்கள் பலர் தத்தம் உறவினரை நீத்து மடிந்த னர். தடாகங்களும் கால்வாய்களும் தூர்ந்துபோயின.

உடனே குடிக ளெல்லோரும் விரைந்து சென்று அயோத்தியில், அரிச்சந்திரன் சபையில், தங்களுக்கு நேர்ந்த இடையூற்றைக் கூறி முறையிட்டாற்றினர்.

தம்முடைய நாட்டில் வதியும் அன்பு பூண்ட மக்கள் அனைவரும் அல்லற்பட்டுத் தன்னிடம் வந்ததைக் கண்ட அரிச்சந்திரன், அவ்வாறு நேர்ந்தமைக்கு அதிசயித்தான். பின்பு, அமைச்சர்களுடன் ஆலோசித்துக் குடிகள் தனக்குச் செலுத்தவேண்டிய ஆறிலொரு கடமையை இரண்டு வரு டத்திற்கு அவர்கள் செலுத்தவேண்டியதில்லை யெனக் கட் டளை யிட்டான். பின்னர் அவர்களுக்கு ஆறுதல் கூறி அவர் களுடைய ஊர்களுக்குச் செல்லுமாறு உத்தரவளித்தனன்.

## 3. வள்ளற்றன்மை

குடிமக்கள் அகன்ற பின்பு அமைச்சர்களுடன் அரிச் சந்திரன் ஆலோசித்தான். காட்டில் வசிக்கும் கொடிய விலங்குகள் நாட்டிற் புகுந்து கேடு விளைவிப்பதற் குக் காரணந் தோன்றாமையால், தன்னுடைய பரிவாரங்க

ளோடு சென்று அவைகளை வேட்டையாடுவதே தகுதி யென அவன் தீர்மானித்தான்.

உடனே நால்வகைச் சேனைகளுமார்ப்ப, மன்னர் மன்னன், தனது தேவி சந்திரமதியுடன் வேட்டையாடற்குச் சென்றான்.

சேனைவீரர்களின் வேல்களினாலும், வாளாயுதங்களினாலும் குத்துண்டும் வெட்டுண்டும் பல மிருகங்கள் மாண்டன : வேடர்களின் வில்லினின்றும் விடுபட்ட அம்புகள் தைத்துச் சில மாய்ந்தன ; அவர்கள் கட்டிய வலைகளிற் சிக்கிச் சிலச் சில தத்தளித்தன ; கவணினின்றுஞ் செல்லுகின்ற தற்கள் பட்டுப் பூமிமீது விழுந்தவை பற்பல.

எங்கும் எதிரிகள் சூழ்ந்து எதிர்த்து வரவே மிருகங்கள் ,யாவும் பயந்து ஓட ஆரம்பித்தன. அவைகளை வேடர்களும் குதிரை வீரர்களும் பின்பற்றிச் சென்றனர்.

கடைசியாக விலங்கினங்கள் நாசமுற்றதும் அரிச்சந்திரன், தன்னுடைய சேனைவீரர்கள் புடை சூழத் திருவனைய பெருந்தேவி அருகிருப்ப, ஒரு நறுமணங் கமழும் சோலைக்குள் புகுந்து ஆங்கிருந்த வாவிக்கரையில் கூடாரமடித்து இளைப்பாறினன்.

அரிச்சந்திரனுடைய கணைகளுக்கு இலக்காகாமல் தப்பியோடிய சில மிருகங்கள், தங்களை யனுப்பிய கௌசிகரிடம் அடைக்கலம் புகுந்தன. நலிந்துவந்த அவைகளைக் கண்ட கௌசிகர் கோபங் கொண்ட சிங்கமெனக் கர்ச்சித்து நிகழ்ந்தவற்றை உணர்ந்தார். பிறகு கொடிய பன்றி யொன்றைச் சிருட்டித்து அரிச்சந்திரனுடைய சேனையை அதம் செய்து வரும்படி கட்டளையிட் டனுப்பினார்.

அப் பன்றியோ மிக்க பலம் வாய்ந்தது. மதங் கொண்ட யானை போல அப் பன்றி கூரிய கொம்புடன் அரிச்சந்திரனுடைய சேனையைத் தாக்கியது; முன் வந் தோரைப் பற்களால் கடித்தும், பலங்கொண்ட குளம்புக ளால் துவைத்தும் நாசப்படுத்தியது. வேகமிக்க அப் பன்றியைக் கொல்ல முடியாது சேனைவீரர்கள் நாற்புறமும் சிதறினர்.

அவ் விநோத விடயத்தைக் கேள்வியுற்ற அரிச்சந்தி ரன், சிங்கமெனக் கர்ச்சித்தெழுந்து, தன் வில்லிற் கணை தொடுத்துத் தன்னை நோக்கி வந்த அப் பன்றியை எய் தான். அக் கொடுங்கணை நெற்றியில் ஊடுருவப்பெற்ற அப் பன்றி தன் வீரமெல்லாம் குன்றி, மயங்கிக் கௌசிகர் வசித்திருந்த சோலைக்குள் ஓடியது.

அப் பன்றி ஓட்டம் பிடிக்கவே அரிச்சந்திரன் தன் கூடாரத்தை யடைந்து இளைப்பாறினன். ஆங்கிருந்த பொய்கையில் தாமரைமலர்கள் தளையவிழ்ந்து தேனைச் சிந்தின; ஆம்பல் மலர்கள் விளக்குகள் போல விளங்கின; வரால்கள் துள்ளி விழுந்தன; சங்கினங்கள் முத்தமீனும் பெருமை வாய்ந்திருந்தன. அச் சோலைகளில், வண்டினம் மின்னிசை பாட மயில்கள் ஆடின. பல மலர்ச்செடிகள் ஏராளமாகப் புட்பித்து நறுமணம் வீசின. அப்போது சூரியனும் மேற்கடலி லாழ்ந்தான். இளந் தென்றலும் இனிது வீச வாரம்பித்தது. அன்றிரவை அரிச்சந்திரன் அச் சோலையிலேயே கழித்தான்.

மறுநாட் காலையில் அரிச்சந்திரன் திடுக்கிட்டு விழித் தெழுந்தான். அவன் முகத்தில் விசனக்குறி தோன்றியது. பொலிவற்ற அவனுடைய முகத்தைக் கண்ட சந்திரமதி அதிசயித்து அதைப்பற்றி வினவினள்.

அதற்கு அரிச்சந்திரன், தான் கொடியதோர் கனாத் தோற்றத்தைக் கண்டதாகவும், அதனால் என்ன தீங்கு நேரிடுமோவென்று சஞ்சலப்படுவதாகவும் கூறினான். அவன் மூலமாக அத் துர்க்கனாவைப்பற்றி யறிந்த அமைச்சரும் துன்புற்றனர்.

அல்லற்பட்டுத் தன் முன் ஓடிவந்த மாயப்பன்றியைக் கண்ட கௌசிகர் கொதித்தெழுந்தார். எவ்வகையிலேனும் அரிச்சந்திரன் அறநெறி பிறழ வேண்டுமென்று அவர் விரும்பினார். அதனால், அவர் அழகமைந்த இரு பெண் மணிகளைச் சிருட்டித்தார். அவர்கள் அவரைப் பணிந்து நின்றனர்.

தம் இணையடிகளைப் பணிந்து நின்ற அவ்விரு கன்னிகைகளையும் நோக்கி, 'பெண்மணிகாள்! இச் சோலையில் அயோத்தி மன்னன் அரிச்சந்திரனென்பான் தங்கியிருக்கின்றான். அவனிடம் சென்று நும் சாகசத்தாலும், இனிய கீதத்தாலும், அவனிட மிருக்கும் வெண் கொற்றக் குடையைப் பெற்று வாருங்கள். இன்றேல் அவனை மணந்து வாருங்கள்' என்று கூறினார்.

வனப்பு மிக்க அக் கன்னிகைகள் வீணையைக் கையி லேந்தி அரிச்சந்திரன் முன்னர் அன்னமென நடந்து சென்றனர்.

அவர்களைக் கண்ட அரிச்சந்திரன் அவர்களை நோக்கி, 'பெண்மணிகளே! நீங்கள் யார்? எக் காரணம் பற்றி இங்கு வந்தீர்கள்?' என்று வினவினான்.

அவர்கள் அவனை நோக்கி, 'மன்னர் மன்ன! நாங்கள் இவ் வனத்தில் சஞ்சரிக்கும் ஒரு தாழ்ந்த கூட்டத்தினரைச் சேர்ந்தவர்கள்; பாடல்களில் தேர்ந்தவர்கள்;

தங்களிடம் பரிசுபெற வந்தோம்' என்று கூறி வீணையை மீட்டிப் பாட ஆரம்பித்தனர்.

சிறிது நேரத்திற்குள் எங்கும் இன்னிசை மயமாயது. யாழொலியும் குரலொலியும் ஒன்றுபட்டு ஓரொலியாயது; யாவரும் மெய் மறந்தனர்.

அவர்களுடைய இனிய பாடல்களைக் கேட்ட அரிச்சந்திரனும், அமைச்சர்களும் 'தங்களை யறியாது தலையை யசைத்தனர்.

பின்பு அரசன் அப் பெண்மணிகளுக்கு வேண்டிய பொன்னும், மணியும், துகிலும் கொடுக்கும்படி கட்டளையிட்டான்.

அதைக் கேட்ட அவ் வணிதையர்கள் அரசர் பெருமானை நோக்கி, 'மண்டலாதிப! தாங்கள் எங்களுக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டவைகளை நாடி நாங்கள் வந்திலம். அதோ தாங்கள் வைத்துள்ள வெண்கொற்றக் குடையை மட்டும் எங்களுக்கு அளித்தாற்போதும்' என்றனர்.

அவர்களுடைய வேண்டுகோளை அறிந்த அரிச்சந்திரன் அவர்களை நோக்கி, 'பெண்மணிகாள்! உங்களுக்கு வேண்டிய அளவு பொன்னும், மணியும் வெறுக்கக் கொடுக்கின்றேன். இச் சந்திரவட்டக்குடை என் முன்னோர் வழியில் எனக்குக் கிடைத்திருக்கிறது. இதை எப்படி என்றால் கொடுக்க முடியும்!' என்றான்.

உடனே அப் பெண்மணிகள், 'சரி, அப்படி அதைக் கொடுக்க முடியாதென்றால், எங்கள் இருவரையும் தாங்கள் மணந்துகொள்ள வேண்டும்' என்றனர்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட அரிச்சந்திரன் அதிசயித்து, 'பெண்மணிகாள்! இத்தகைய பரிசிலை நீங்கள்

விரும்புவது தகாது. மேலும் முன்னரே எனக்கு ஒரு மனையாள் இருக்கின்றாள். அதனால், உங்களை நான் மணப்பது எவ்வாறு பொருந்தும்? ஒருவிதத்திலும் பொருந்தாது. ஆகையால், நான் அளிக்கும் பெருஞ் செல்வத்தைப் பெற்றுச் செல்லக்கடவீர்கள்' என்று கூறினான்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட அம் மாதர்கள் மனஞ்சலித்துத் தங்களுடைய கோரிக்கைகளில் ஏதேனும் ஒன்று நிறைவேறினால் போதுமென்று மன்றாடினார்கள்; அரிச்சந்திரனையும் வள்ளற்றன்மை யற்றவனெனக் குறை கூறினார்கள். அமைச்சர்கள் பற்பல இதமான வார்த்தைகள் கூறியும் அவர்கள் அவற்றைக் கேளாதவராயிருந்தபடியால், காவலர்களைக் கொண்டு அவர்களை அப்புறம் அகற்றும்படி மன்னர் மன்னன் கட்டளையிட்டான்.

'அருகிலிருந்த காவலர்கள் அம் மாதர்களை உறுக்கிப் பார்த்துப் பயமுறுத்தி வெருட்டினார்கள். அவர்களும் அச்சமேற்கொண்டு வீணையை அவ்விடமே கிடத்தி ஓட்டம் பிடித்தனர்.

அவ்வாறு ஓடிய அப் பெண்மணிகள் கௌசிகரது இணையடிகளில் தாழ்ந்து நிகழ்ந்தவற்றைப் புகன்றனர். உடனே கௌசிகர் கடுங்கோபங்கொண்டு அக்கணமே விரைந்து அரிச்சந்திரனைக் காணச் சென்றனர்.

கௌசிகர் வருகையைக் கண்ட அரசர் பெருமான் எழுந்து எதிர் சென்று அவருடைய பாதங்களிற் பணிந்தான். பணிந்தவனைச் சிறிதளவும் கடைக்கண்ணோக்காது கௌசிகர் அவனது சிரசின்மீது சீற்றத்துடன் உதைத்தார். நவமணிகள் பதிக்கப்பெற்றிருந்த கிரீடம் சிறிது தூரத்தில் சென்று விழுந்தது.

உடனே அரிச்சந்திரன் கௌசிகருடைய பாதங்களைப் பற்றி மெல்லென வருடி அவருடைய பாதங்கள் கன்றியதோ என வருந்தினான்.

பின்னர் அவன் கௌசிகரை நோக்கி, 'மாதவத்தீர்! தங்களுக்கு யான் ஒரு குற்றமும் செய்திலனே; திடீரெனத் தாங்கள் சினந்து என்னை உதைத்ததற்கு யான் வருந்தவில்லை. தங்களுக்கு என்மீது இவ்வளவு கோபம் உண்டானதற்குக் காரணம் இன்னதென்று எனக்குத் தெரிவிக்கவேண்டும்' என்றான்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட கௌசிகர், 'நீ ஒரு குற்றமும் இயற்றவில்லையா? நன்று! நன்று! என்னுடைய விலங்கினங்களை நாசப்படுத்தினை; என்னுடைய மக்களான அவ்விரு பெண்மணிகளையும் பயமுறுத்திப் பரிசில் ஈயாது அனுப்பிவிட்டனை. வெகு நன்று! வெகு நன்று!'' என்று உரைத்தார்.

'சுவாமீ! அவைகள் தங்களுடைய விலங்கினங்கள் என்று நான் அறிந்திருப்பின் அவ்வாறு செய்திருக்கமாட்டேன். அப் பெண்மணிகள் நான் ஈந்தவற்றை எடுத்துச் செல்ல மறுத்து அடாதவற்றை விழைந்தனர். ஆதலின், என்றன்மீது எவ்வாறு குற்றம் சாரும்? மேலும் அறிவற்ற சிறியோர் இயற்றும் குற்றங்களை அறிவுற்ற பெரியோர் மன்னித்து அவர்களை நல்வழிப்படுத்துவது பெரியோர்களுடைய கடமையல்லவா?'

அவ் வார்த்தைகளைக் கேட்ட கௌசிகர், 'சரி, அப்படியாயின் என் மக்களிருவரையும் நீ மணந்து கொண்டால், நீ அறியாமற் செய்த பிழைகளை இதுபொழுதே மன்னித்து விடுகின்றேன். யாது சொல்லுகின்றனை?' என்று வினவினார்.

உடனே அரிச்சந்திரன் அவரை நோக்கி, 'ஐயனே! நான் அவர்களை எவ்வாறு மணந்துகொள்ளுவது? இஃது இயலாத காரியம். இதை முன்னிட்டுத் தாங்கள் எனக்குக் கொடிய சாபம் கொடுக்கினும், அச் சாபத்தை அனுபவிக்க யான் சித்தமாயிருக்கின்றேன்,' என்று பதிலளித்தான்.

அவனுடைய வாய்மொழியைக் கேட்ட கௌசிகர் சிறிது ஆலோசித்தார். நற்குண நற்செய்கைகள் செறிந்துள்ள அவனை எவ்வாறு ஏமாற்றுவதென்பது அவர் சிந்தனை.

பிறகு, அவர் அவனை நோக்கி, 'அரிச்சந்திரா! நீ மிகவும் வல்லமை பெற்றவன். என்னைப் பலவாறு புகழ்ந்துரைத்து உன்னுடைய காரியத்தை முடித்துக் கொள்ளுகின்றாய். யான் கொடுக்கும் சாபத்தையும் ஏற்றுக் கொள்ளுகின்றேன் என்கின்றாய். உன்னுடைய சாமர்த்தியமே மெச்சத்தக்கது' எனக் கூறினார்.

அப்போது அரிச்சந்திரன், 'சுவாமி, நான் மன்றாடுவது நியாயத்தைப்பற்றியேயாம். அப் பெண்களை மணந்து கொள்ள என்னால் முடியாது. அதற்கு ஈடாக, எதைக் கேட்டாலும் சரி, கொடுக்கச் சித்தமாயிருக்கின்றேன். என் நாடு நகரத்தையும் இழக்க யான் பின் வாங்கமாட்டேன்' என்று புகன்றான்.

உடனே கௌசிகர் அவனை நோக்கி, 'மன்னர் மன்ன! அம் மாதரை மணப்பதற்குப் பதிலாக உன்னுடைய நாடு நகரங்களை எனக்குக் கொடுத்துவிடுவாயா? சரி, அப்படியே கொடு பார்ப்போம்' என்றார்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட அரிச்சந்திரன், கௌசிகரை நோக்கி, 'மாதவத்தீர், நான் சொன்ன சொல் தவறேன். நீங்கள் விழைவதுபோல என்னுடைய நாடு நகரங்

களைத் தங்களுக்குத் தாரைவார்த்துத் தத்தம்செய்து விடுகின்றேன். இனி, வேறேது வேண்டுமானாலும் கொடுக்கத் தடையில்லை' என்று கூறி அருகிலிருந்த வாவியின் நீரைக் கொணர்வித்து அங்ஙனமே தத்தம் செய்தான்.

பின்னர், கௌசிகர் அரிச்சந்திரனிடமிருந்து வெண் கொற்றக் குடையையும், வாளாயுதத்தையும், முத்திரை மோதிரத்தையும் பெற்றுக்கொண்டார். பிறகு, கௌசிகர் அரசனும், தேவியும், திருமகனும் அணிந்திருந்த பன்மணி ஆபரணங்களையும், உயர்ந்த ஆடைகளையும் பெற்றுக்கொண்டு, தம் வசமிருந்த காவித் துகிலை அவர்களுக்கு அளித்தார். அரிச்சந்திரனும் சலிப்பின்றிக் கௌசிகர் விரும்பிய ஒவ்வொன்றையும் அளித்ததுமல்லாமல், தன்னருகிலிருந்த சேனைவீரர்கள் யாவரும் கௌசிகருடைய கட்டளைக்குட்பட்டு நடக்க வேண்டுமென்றும் அவர்களுக்கு ஆக்ஞாபித்தான்.

பிறகு, கௌசிகர் மன்னனை நோக்கி, 'அரிச்சந்திரா! முன்னர் அயோத்தியில் நீ எனக்குக் கொடுப்பதாக வாக்களித்த திரண்ட பொருள்களைக் கொடுத்த பின்னர் இந்நாட்டைவிட்டு அகலுவை. அன்றியும் "யாமிடம் அயோத்தியில் அடைக்கலமாக வைத்த பொருள் நீங்களா" என்று கூறி நீ நாடு நகரங்களை எனக்குத் தாரைவார்த்துத் தரவில்லை, அதனால், அத்திரண்ட பொருள் நீ எனக்குத் தாரைவார்த்த நாடு நகரங்களோடு சேர்ந்துவிட்டது. யாகத்தின் நிமித்தம் நீ எனக்கு வாக்களித்த பொருளைச் சீக்கிரம் கொடுப்பாய்' எனக் கூறினார்.

அதைக் கேட்ட அரிச்சந்திரன் அவரை நோக்கி, 'ஆம், தேவரீர் கூறியது உண்மையே. நான் அப்பொருளை உங்களுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டவனே. ஆனால்,

அப் பொருளை நான் இவ்விடத்தில் எப்படிக் கொடுக்க முடியும்? இன்னும் சின்னாட்களில் அப் பொருளைத் திரட்டித் தங்களுக்கு அனுப்புகின்றேன்' என்று பதிலளித்தான்.

கடைசியாகக் கௌசிகர் அரிச்சந்திரனுக்கு நாற்பத்தெட்டுநாள் தவணை கொடுத்தார். அவன் தனக்குத் தந்த நாடுகளிலிருந்து அத் திரவியத்தைத் திரட்டக் கூடாதென்று கூறி, அந்நிய நாட்டில் திரவியத்தைச் சேகரித்துக் குறிப்பிட்ட கெடுவுக்குள் அனுப்பவேண்டு மென்று அவர் கண்டிப்பாகக் கட்டளையிட்டார்.

பிறகு, அரிச்சந்திரன், தன் மனைவியும் புதல்வனும் பின் வர, அமைச்சன் சத்தியகீர்த்தியுடன் நாட்டைவிட்டுச் செல்லத் திருபினான்.

உடனே கௌசிகர் அவனை யழைத்து, 'அரிச்சந்திரா! எல்லாம் சரியே. ஆனால், இப்பொழுது நான் அயோத்திக்குச் சென்றால் அங்குள்ள குடிமக்கள் என்மீது வன்மங் கொண்டு எனக்குத் துன்பம் செய்யக்கூடும். என்னைத் தங்கள் அரசனாக ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுக்கவுங் கூடும். ஆகையால், நீயும் அயோத்திக்கு வந்து என்னைச் சிங்காதனத் தேற்றிப் பின்னர் நீ இந் நாட்டைக் கடக்கவேண்டும். ஆகையால், என்னுடன் அயோத்திக்குப் புறப்படு' என்று கூறி, பொற்றேர்மீதேறிச் சேனைகள் புடைசூழ அயோத்தியை நோக்கிச் சென்றார்.

அரிச்சந்திரன், தன் இன்னுயிரனைய மனைவியும் அருமந்த புதல்வனும் தன்னோடு கால் நடையாக வருவதைக் கண்டு மனங்கவன்று, தன்னுடைய ஊழ்வலியென்று மனம் நொந்து கௌசிகரது தேரைப் பின்பற்றிச் சென்றான்.

அவர்கள் அழகிய மதில்கள் சூழ்ந்த அயோத்தியை அடையவே குடிமக்கள் அனைவரும் பொற்றேரில் வரும்

கௌசிகரையும், பின்னால் நடந்துவரும் தம்முடைய அரசரையுங் கண்டனர். பேராச்சரியமும் பெருந் துயரமும் ஒருப்படித்தாயலைக்க அவர்கள் தத்தளித்து நின்றனர். பலர் கௌசிகரது கொடுமைக்கும் வன்மைக்கும் அவரைக் கடிந்து பேசினர்.

பின்னர்ச் சபா மண்டபத்தை யடைந்ததும், அரிச்சந்திரன், ஆங்குக் குழுமிய அமைச்சர்கள், சேனாவீரர்கள், குடிமக்கள் முதலியோருக்கு நடந்தவற்றைக் கூறினான். 'இன்று முதல் கௌசிகரே அரசாங்கத்தை நடத்துவார்' என மொழிந்து தனக்கு அடங்கி நடந்ததே போல அவருக்கும் அடங்கி நடக்கும்படி கேட்டுக்கொண்டான். அவர்களும் தம் இறைவனது விருப்பத்தின்படி நடப்பதாக வாக்களித்தனர்.

பின்னர் அரசர்க்கரசன், கௌசிகரது பாதங்களிற் பணிந்து அவரிடம் விடைபெற்று, தன் இல்லாளும் புதல்வனும் சத்தியகீர்த்தியும் உடன் வர, அயோத்தி நகரைக் கடந்து சென்றான்.

அவன் அவ்வாறு செல்வதைக் கண்ட குடிமக்கள் அனைவரும் வாய்விட்டரற்றித் தாமரையிலைத் தண்ணீரெனத் தத்தளித்தனர்; வள்ளற்றன்மை மிக்க அரசனைப் புகழ்ந்து கௌசிகரை வெறுத்துரைத்தனர்.

## 4. துன்பப் பெருக்கு

நகர் நீங்கிய அரசர் கோமான், அன்புடைய் சத்திய கீர்த்தியோடும் மனைவி மைந்தனோடும், ஒரு பூஞ் சோலையை யடைந்தான். அதுவரையில் தன்னுடன் வந்த குடிமக்களுக்குத் தேறுதல் கூறி அனுப்பினான். ஆனால், மற்றும் பல சேனாவீரர்களும், அமைச்சர்களும் கௌசிகரை எதிர்த்து அவரைப் புறமுதுகிட்டோடும்படி செய்தல்

நன்மை எனக் கூறினர். ஆயினும், அரிச்சந்திரன் அவர்களுடைய சீற்றத்தை மாற்றி அவர்களைச் சாந்தப்படுத்தினன்.

அப்போது கௌசிகர், சேனாவீரர்கள் யாது கூறுகிறார்களென்று அறிய எண்ணி, அச் சோலையில் மறைந்திருந்தார். அவர்களுடைய கடுமொழிகளைக் கேட்ட அவர் சீற்றங்கொண்டு அரசன்முன் வந்து நின்றார்.

அவரைக் கண்ட அரசர்பெருமான், 'தேவரீர் எதற்காக என்னைத் தேடி இவ்விடம் வந்தீர்? இனி என்னால் செய்யக்கூடியது ஏதேனும் உண்டோ?' என்று அவரது இருபாதங்களையும் பற்றி வினவினன்.

அதைக் கேட்ட கௌசிகர் அவனை நோக்கி, 'அரிச்சந்திரா! நீ என்னுடைய மிருகங்களைக் கொன்று என் மக்களிருவர்களுடைய பாடல்களைக் கேட்டுப் பரிசில் அளியாது வெருட்டினை. நீ எனக்குக் கொடுத்த நாடு நகரத்தை உனக்குக் கொடுக்கின்றேன்; பெற்றுக்கொள். இன்றேல், இப்பொழுது உன்னுடைய சேனாவீரர்கள் கூறியவைகளுக்கு நீயே உத்தரவாதியாவாய்' என்றார்.

அப்போது அரிச்சந்திரன், 'தேவரீர் இவ்வாறு கோபித்தல் நியாயமாகாது. அற்பராகிய யாங்கள் இழைக்கும் பிழையைத் தாங்கள் பொருட்படுத்துவது தகுமா? எல்லாந் தெரிந்த தாங்களே இவ்வாறு கோபித்தால் நாங்கள் எவரிடத்திற் சென்று முறையிடுவோம்' என்று பணிவுடன் பகர்ந்தான்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட கௌசிகர் பலவாறு யோசிக்கத் தொடங்கினர். 'திரளான திரவியத்தையும், நாடு நகரங்களையும், அட்டியின்றிக் கொடுத்துவிட்டான். இனி, எது வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராயிருக்கின்

றான். மேலும், வாக்களித்த திரண்ட பொருளையும் கொடுப்பதாகத் தவணை வைத்திருக்கின்றான். ஆதலின், அவனை மன்னித்தல் தகுதி' என அவர் தீர்மானித்தார்.

அதனால், கௌசிகர் அரிச்சந்திரனை நோக்கி, 'அரிச்சந்திரா! இச் சமயம் நீ செய்த குற்றத்தைப் பொறுத்தேன். ஆனால், நீ எனக்கு வாக்களித்த பொருளை எப்பொழுது தருவாய்?' எனக் கேட்டார்.

அதைக் கேட்ட அரிச்சந்திரன், 'தேவரீர் அப் பொருளைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டா. நான் வாக்களித்தபடி அக் கெடுவுக்குள் அனுப்புகின்றேன். என்னுடன் யாரேனும் ஒருவரை அனுப்பினால் நன்மையாயிருக்கும்' என்று கூறினான்.

கௌசிகரும் அதற்கிசைந்து சுக்கிரனைக் கூப்பிட்டு, அவனை அரசனுடன் செல்லுமாறு கூறினார். அச் சுக்கிரனுடன் நிகழ்ந்தவை யாவும் கூறி, எவ்வளவு தீமை அரிச்சந்திரனுக்குச் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து தம்முடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்யும்படி கூறினார். அவனும் அவர் கருத்தின்படி நடக்கச் சம்மதித்து அரிச்சந்திரனைப் பின்பற்றிச் செல்ல ஆரம்பித்தான்.

அப்போது, அரிச்சந்திரன், தன்னுடன் சலிப்பின்றி வரும் சத்தியகீர்த்தியைக் கண்டு தன்னைப் பின் தொடர வேண்டாமென்று கூறினான். ஆனால், அவ்வுத்தமனோ, சுயநலங் கருதாத கொள்கையனாய்த் தன் தலைவன் படுந் துயரத்தைத் தானும் பகிர்ந்துகொள்ளவே விரும்பினான். சத்தியகீர்த்தியின் விருப்பத்திற்கு அரிச்சந்திரன் சம்மதித்தான்.

பின்னர் அவர்கள் கொடும் பாலைவனத்தைக் கடக்க நேர்ந்தது. சுடுமணலின் வெப்பமும், சூரியன் கொடுமை-

யும் அதிகமாக, அவர்கள் சொல்லொணுத் துயருற்றனர். பால் மணமாருத தேவதாசன், நடக்கமுடியாது வருந்த, ஒப்பற்ற குணம் வாய்ந்த சத்தியகீர்த்தி அவனைத் தன் தோளில் தூக்கிக்கொண்டு சென்ருன். இதுகாறும் நடந்தறியாத சந்திரமதி படும்பாட்டைக் கண்ட அரிச்சந்திரன் அனலிடு மெழுகென மனமுருகினுன்.

மேலும், கௌசிகருடைய மாயையால் அவர்கள் செல்லும் வழி முழுதும், பலவித கொடிய சீவராசிகள் அவர்களுக்கு எண்ணிறந்த துன்பங்களை விளைவித்தன. சீறி வரும் நாகத்தைக்கண்டு சந்திரமதி மருண்டோடினுள். கரடு முரடான பாறைகளின்மீதும் முட்புதர்கள் செறிந்த காடுகளின் மீதும் அவர்கள் செல்ல நேர்ந்தது. இத்தகைய சங்கடங்களை யெல்லாங் கண்டு அரிச்சந்திரன் வருந்தினுன்.

கடைசியாகக் குறுக்கே சென்ற ஓர் ஆற்றைக் கண்டு அரிச்சந்திரன் அங்கிருந்த ஒரு மணற்றிட்டில் தங்கி யிளைப் பாறினுன். அப்போது சத்தியகீர்த்தி அவ் வனத்தில் கிடைத்த காய் கனிவர்க்கங்களைப்பறித்து வந்து அரசன்முன் வைத்தான். அரசனும் அவைகளிற் சிலவற்றைச் சுக்கிரனிடம் கொடுத்து உண்ணுமாறு வேண்டினுன். அவனே கோபங்கொண்டு தனக்கு இன்னமுது வேண்டுமேயன்றிக் காய் கனிகள் வேண்டியதில்லையென்று கடிந்துரைத்தான். அங்ஙன முரைத்தும், அரிச்சந்திரன், தன்னுடைய துர்ப்பாக்கிய நிலைமையைக் கூற, சுக்கிரனும் மனமிளகி, அவைகளைத் தின்று பசியாறினுன்.

பிறகு, அன்றிரவை அங்கே கழிக்க எண்ணி அவர்கள் அம் மணற்றிட்டில் படுத்துறக்கங்கொண்டனர். ஆனுல், திடீரென்று கௌசிகருடைய மாயையினுல், இருண்ட மேகங்கள் செறிந்து மின்னல் மின்னி இடியிடித்துத் தாரைதாரையாக

மழை பெய்ய ஆரம்பித்தது. அனைவரும் நனைந்து அவசரத்துடன் எழுந்து குளிரினால் வருந்தி அப்புறம் சென்றனர். அன்றிரவு முழுவதும் இவ்வாறு அல்லற்பட்டு மறுநாள் அருணோதயத்தில் கங்கையாற்றின் கரையை யடைந்தனர்.

அந்த ஆற்றின் வனப்பைக் கண்ட அவர்கள் தங்களுடைய துன்பங்களை எல்லாம் மறந்தனர். பின்னர் அங்கிருந்த ஒரு நந்தவனத்தை யடைந்து அங்கு இளைப்பாறினர்.

அப்போது சுக்கிரன் மன்னனை நோக்கி, 'மன்னர் மன்ன! நீ இவ்வாறு வருந்தப்படவேண்டாம். நீ கௌசிகருக்குக் கொடுத்த நாடு நகரத்தை மறுபடியும் வாங்கிக்கொள்ளத் துணிந்துவிடு. உடனே உன் துன்பங்களெல்லாம் ஓடி மறையும். நான் சொல்லுகிறபடி நீ நடந்தால் உனக்கு நன்மை உண்டாகும். பிடிவாதம் வேண்டாம்' என்றான்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட அரிச்சந்திரன், 'ஐயன்மீர்! நான் முதலில் கொடுத்தவற்றை மறுபடியும் வாங்கேன். அதனால், எத்தகைய தீங்குவரினும் வருக. அதற்கு வருந்தேன்' என்று கூறினான்.

பிறகு, அவர்கள் யமுனைநதிக்கரையை யடைந்தனர். அங்குள்ள செழுமை வாய்ந்த கழனிகளையும், மூங்கிற் புதர்களையும், மற்றும் நறுமணங் கமழும் அழகிய மலர்களையும் கண்டு களித்தனர்.

அச் சமயம், அங்கு கௌசிகர் விரைந்து வருவதைக் கண்ட அரிச்சந்திரன் அச்சமேற்கொண்டு, எதிர் சென்று அவர் இணையடிகளிற் பணிந்து, 'சுவாமீ! என்னுடைய

சேனுவீரர் ஏதேனும் குற்றம் புரிந்தனரோ? திருவாய் மலர்ந்தருளல்வேண்டும்' என்று இறைஞ்சினுன்.

அதைக் கேட்ட கௌசிகர், 'அரிச்சந்திரா! நீயும் நின் மனைவியும், நின் புதல்வனும் இக் கொடுங் கானகத்தில் துன்புறுவது என் மனத்தை மிகவும் வாட்டுகின்றது. ஆதலின், நீ எனக்கு ஒன்றும் கொடுக்கவில்லையென்று கூறிச் சென்று சுகமே உன் அரசாங்கத்தை மேற்கொள்வாயாக' என்றார்.

கௌசிகர் மொழிகளைக் கேட்ட அரிச்சந்திரன், 'தேவரீர் கூறியபடி நான் ஒருபோதும் செய்யேன். நான் முன்னர்த் தங்களுக்கு வழங்கிய அந் நாட்டைத் திரும்பவும் பெறேன். இத் துன்பங்களுக்கு நான் ஒரு கணமும் அஞ்சேன். இஃது உண்மை' என்று பதிலளித்தான்.

அவனுடைய உறுதிமொழிகளைக் கேட்டுக் கௌசிகர் மன வருத்தங்கொண்டார். எவ்விதத்திலும் அறநெறி தவருத பண்பினையுடைய அரிச்சந்திரனை வெல்லுவது அரிதென அவர் நமபினர். ஆயினும், தம்முடைய சபதத்தை நிறைவேற்ற எண்ணி அவர் அவ்விடத்தை விட்டகன்ருர்.

பிறகு, அவருடைய மந்திரவலியால் அரிச்சந்திரன் முதலியோர் இருந்த கானகம் தீப்பிடித்துக்கொண்டது. வேகத்துடன் பரவும் தீக்கிலக்காகாமல், அவர்கள் வெகு சிரமத்தோடு தப்பி அப்புறம் சென்றனர்.

## 5. அடிமைப்படல்

ஆற்ருெணுத்துயருற்று அரிச்சந்திரன் முதலியோர் காசிநகரைச் சேர்ந்தனர். அந் நகரின் வயல்களில் முதிர்ந்த செந்நெற் கதிர்களின் வளப்பத்தையும், கார்முகில்

தவழுஞ் சோலைகளின் எழிலையும் கண்டு மகிழ்ந்தனர். அச் சோலைகளில் தேனொழுகும் பூக்கள் பல இருந்தன. தேனை யுண்டு ஒலித்த வண்டுகள் எண்ணிலடங்கா. ஆங்குக் குயில் கூவ மயில் அகவ எங்கும் இன்னிசை நிரம்பி இருந்தது.

அத்தகைய சூழலின் அழகைக் கண்டு களிப்புற்று அரிச்சந்திரன் முதலியோர் அந் நகரை யடைந்து, விசால மான வீதிகளைக் கடந்து சென்றனர். அவ் வீதிகளின் இரு மருங்கும் விண்ணுற ஓங்கி வளர்ந்த அழகிய மாளிகைகள் எண்ணிறந்து விளங்கின. பலவித பண்டம் விற்போர் ஆர்ப்பும் வாங்குவோர் முழக்கும் அந் நகரின் கடைவீதி களில் நிறைந்திருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் அழகு செய்யும் பூரண கும்பமும் மகர தோரணங்களும் விளங் கின. எங்கும் குதிரைகளின் கனைப்பும் யானைகளின் பிளிற லும் மிகுந்திருந்தன.

அங்கிருந்ததோர் தரும சத்திரத்தை அரிச்சந்திரன் முதலியோர் அடைந்து இளைப்பாறினர்.

மறுநாள் சுக்கிரன் மன்னனை நோக்கி, 'மன்னர் மன் னனே! தவத்திற் சிறந்த முநிவராகிய கௌசிகருக்கு நீ கொடுப்பதாக வாக்களித்த பொருளைக் கொடுப்பதாயிருந் தால் அதை இப்போதே கொடுத்துவிடு. இனிமேல் உங்க ளோடு நான் அலைதல் முடியாது' என்று கடுகடுத்துக் கூறினன்.

அவனுடைய வஞ்சின மொழிகளைக் கேட்ட அரிச் சந்திரன் மனஞ் சோர்ந்து எவ்வாறு கடனிறுப்பதெனக் கவலைகொண்டவனாய் வாளாவிருந்தனன்.

தன் கணவனுடைய மனச் சோர்வைக் கண்ட சந்திர மதி, கொழுநனை நோக்கி, 'தேவரீர் எதற்காக மனம் வருந் தல் வேண்டும்? கௌசிகருக்குக் கொடுப்பதாக வாக்களித்த

பொருளை நாம் கொடுத்துத்தானே தீரவேண்டும்' என்று கூறினாள்.

அப்போது அரிச்சந்திரன் அவளைப் பார்த்து, 'நீ கூறியது உண்மையே. ஆனால், கௌசிகர் நம்மிடமிருந்த எல்லாப் பொருள்களையும் கேட்டு வாங்கிக்கொண்டனர். இப்போது நாம் எவ்வாறு அக் கடனை யிறுப்பது? இதற்காகவே நான் கவலைப்படுகின்றேன்' என்று உரைத்தான்.

அவனுடைய வார்த்தைகளைச் செவியிலேற்ற சந்திரமதி ஆலோசித்து, 'நம்மிடம் பொருள் இருப்பதையும் இல்லாததையும் கௌசிகர் அறிவார். ஆனால், அவர் கட்டளைப்படி நம்மோடு வந்துள்ள சுக்கிரருக்கு நாம் கூறிய தவணைக்குள் பொருளைக் கொடுப்பதே நியாயமாகும். ஆகையால், என்னையும் நம் புத்திரனையும் இந் நகரில் விற்பனை செய்து வரும் பொருளைக்கொண்டு அக் கடனை யிறுப்பதே தக்கது' என்று தன் இனிய குரலிற் கூறினாள்.

அது கேட்ட அரிச்சந்திரன் எப்படித் தன் மனைவியையும் புதல்வனையும் விற்பனை செய்வதெனக் கவலை மேற்கொண்டான். அதை யுணர்ந்த சந்திரமதி, அவனைத் தேற்றி, வேறு வழியில்லை என்பதை வற்புறுத்தினாள். முடிவாக அரிச்சந்திரன் அவ்வாறு செய்தலே தக்கதென்று தீர்மானித்து எழுந்தான்.

அச் சமயம் சுக்கிரனும் 'அவ்வாறு செய்தலே மிக்க மேன்மையானது' என்று கூறி அவர்களோடு பல வீதிகளைக் கடந்து சென்றான். தன் மனைவியையும் புதல்வனையும் விற்றுவிடுவதாக அரிச்சந்திரன் விலை கூறிச் சென்றான்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட காசி நகர வாசிகள், திருவனைய சந்திரமதியையும், வனப்பு மிக்க தேவதாசனையும் கண்டு அதிசயித்து, அவர்களை விற்கவேண்டிய

காரண மென்னவென்று சிந்தித்தனர். 'அவ்விருவரில் ஒருவரை வாங்கத்தக்க பொருளேனும் அங்கு எவரிடமும் இல்லையே' என்று அதிசயித்தனர். அவ்விருவரையும் எவ்வாறு மதிப்பிடுவதென்று அவர்கள் நினைத்தனர்.

அப்போது அரிச்சந்திரனுக் கெதிரில் ஒரு மறையவன் வந்தான். அவன் அரிச்சந்திரன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு அவ்விருவர்களுக்கும் எவ்வளவு பொருள் மதிப்பென்று வினவினான். உடனே அரிச்சந்திரன் தான் கௌசிகருக்கு வாக்களித்த திரண்ட பொருளைக் கூறி அப்பொருளைத் தன்னோடு வந்திருந்த சுக்கிரனுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று கழறினான்.

அம் மறையவனும் சந்திரமதிக்கும் தேவதாசனுக்கும் விலையாக விரும்பிய பொருளைக் கொடுக்கத் தடையில்லையெனக் கூறி அப்பொருள் யாவையும் சுக்கிரனிடம் கொடுக்கச் சம்மதித்தான். பிறகு அரசன் தன் மனைவியையும், புதல்வனையும் அம் மறையவனுக்கு விற்றுவிட்டதாக அடிமைச் சீட்டெழுதிக் கையொப்பமிட்டு அம் மறையவனிடம் கொடுத்தான்.

பின்னர்ச் சந்திரமதி தன் மகனுடன் அரிச்சந்திரனது பாதங்களிற் பணிந்து, சேல்போன்ற அழகிய கண்கள் மழையென நீரைச் சிந்த, அவனை நோக்கி, 'அன்புடையீர்' தங்களைக் காணுவது இனி என்றோ?' என்று பிரலாபித்தாள்.

பிறகு, அவள் தான் பலவாறு அழுதல் தன் கணவன் மனத்தைப் புண்படுத்து மென்றுணர்ந்து அருவியெனப் பாயும் தன் கண்ணீரை மாற்றி, இன் முகத்துடன் அரசனை நோக்கி, 'தேவரீர் எங்களுக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்' என்று கூறினாள்.

அப்போது பால் மணமாறாத அருந்தவப் புதல்வன், அன்னை துயரையும் ஐயனுடைய மனச் சோர்வையும் உணர்ந்து மனமுளைந்தான். தன் செவ்விய கரங்களால் தந்தையின் தோள்களைப்பற்றி ஆவைப்பிரிந்த கன்று போலக் கதறியழுதான்.

பின்னர் அவன் அரசனை நோக்கி, 'அன்னையையும் என்னையும் தனியேவிட்டுச் செல்லுதல் தகுமோ?' என்று அரற்றினான்.

தன் அருமந்த புதல்வனுக்கேற்ற ஆறுதல் கூற முடியாது அரிச்சந்திரன் புழுங்கிய நெஞ்சினனாயினன். அப்போது சந்திரமதியையும், தேவதாசனையும் விலைக்கு வாங்கின அம் மறையவன் கடுங்கோபங்கொண்டு தேவதாசனது செவ்விய கரத்தைப்பற்றி ஈர்த்துப் பயமுறுத்தித் தன் வீட்டிற்கு இழுத்துச் சென்றான். அவனைப் பின் தொடர்ந்து சந்திரமதியும் பன்முறையும் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றாள்.

மறையவன் தன் புதல்வனை இழுத்துச் சென்றதைக் கண்ட அரிச்சந்திரன், ஆற்றொணாத் துன்பமுற்று மதிமயங்கி இடிமுழக்கங் கேட்ட நாகம்போல நின்றான். அருகிருந்த கருணை மிக்க சத்தியகீர்த்தி அரசனுக்குத் தேறுதல் கூறினான். அவனுடைய அமிர்தம்போன்ற சொற்களால் ஒருவாறு அரிச்சந்திரன் தேறுதலடைந்தான்.

பின்னர் அரிச்சந்திரன் சுக்கிரனைப் பார்த்து, 'பிராமணோத்தமரே! நான் வாக்களித்தவாறு கௌசிகருக்குக் கொடுக்கவேண்டியதை நீர் பெற்றுக்கொண்டீர். வேறு விசேடமென்ன?' என்று கேட்டான்.

அது கேட்ட சுக்கிரன் அவனைப் பார்த்து, 'அரிச்சந்திரா! அவ்விஷயம் ஒருவாறு முடிந்தது. ஆனால், என்

னுடைய வேண்டுகோள் ஒன்றுண்டு. அதாவது இவ்வளவு தூரம் உன்னோடு துன்பப்பட்டு வந்ததற்கு எனக்குப் போதிய ஊதியம் வேண்டாமா? இவ்வளவுதான் விசேடம்!" என்று பதிலளித்தான்.

அன்னவன் மொழிகளைக் கேட்ட அரிச்சந்திரன் இன்முகத்துடன் அவ்வாறே போதிய ஊதியம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு சத்தியகீர்த்தியுடன் முன்னுகச் சென்றான்.

செல்லும்போது அரசன் மந்திரியைப் பார்த்து, 'சத்தியகீர்த்தி! இவருக்குக் கொடுக்க வேண்டியதை இன்றே அளிக்க வேண்டும். ஆகையால், என்னை நீ விலை கூறிவரும் பொருளை இவருக்களித்து இவரை அனுப்புவாயாக' என்று கூறினான்.

வள்ளலின் மொழிகளைக் கேட்ட சத்திய கீர்த்தி, அவனைப் பார்த்து, 'மண்டலாதிப! எனக்குத் தந்தையாகவும், இறைவனுகவும் இருக்கும் தங்களை நான் விற்பனை செய்யத் துணிவது அடாது. ஆகையால், தாங்கள் என்னை விற்று இப் பிராமணர் விழையும் பொருளை அளிப்பதே மேன்மையாகும்' என்று மொழிந்தான்.

அன்புமிக்க அம் மந்திரியைத் தழுவி அரிச்சந்திரன், 'அன்புடையாய்! யான் கொடுப்பதாக வாக்களித்த பொருளுக்கு உன்னை விற்பது நீதி யாகாது. ஆகையால், என்னுடைய மொழிகளைக் கடவாது என்னை விற்று அப் பொருளை இவருக்குக் கொடுக்கக் கடவாய்' என்று கூறினான்.

உத்தமகுணமுள்ள சத்தியகீர்த்தி, புழுங்கின நெஞ்சினனாய் அக் காசிநகர வீதியில் அரிச்சந்திரனை விலை கூறி வந்தான்.

அப்போது அங்கு வந்த வீரவாகு என்னும் பெயர் பூண்ட ஒரு புலையன் அரிச்சந்திரனைக் கண்டு. அவன் கூறும்

வில்லையைத்தான் கொடுப்பதாகக் கூறினன். வேறெவரும் அரிச்சந்திரனை வாங்க முன் வாராமையினுல் சத்தியகீர்த்தி வீரவாகுவிற்கே அரிச்சந்திரனை விற்ருன். அதற்கு வேண் டிய அடிமைச் சீட்டையும் அவனே எழுதிக் கொடுத்தான்.

சுக்கிரனும் தான்பட்ட துன்பங்களுக்காக விரும்பிய பொருளைப் பெற்றுச் சென்ருன். வீரவாகுவின் பின் சென்ற அரிச்சந்திரனை நோக்கிய வண்ணம் சத்தியகீர்த்தி தனியளுய் நின்றிருந்தான். அருவியென அவன் கண்களில் நீர் வடிந்தது.

வீரவாகுவைப் பின் தொடர்ந்து சென்ற அரிச்சந்திரன் சுடுகாட்டையடைந்து அவன் உத்தரவுப்படி அங்குக் காவல் காத்திருந்தான். சுடுகாட்டில் பிணஞ் சுட வந்தவர்களிட மிருநது காற்பணமும் முழத்துண்டும் பெற்று அவைகளை வீரவாகுவினிடம் சேர்த்துவிட்டு, வருகிறவர்கள் விடுத்துச் சென்ற வாய்க்கரிசியைத் தான் பெற்றுச் சுத்தஞ்செய்து சமைத்து வயிறு வளர்த்து வந்தான் அரிச்சந்திரன். இந் நிலையிலிருந்த அவனை வந்து கண்டு வருந்திய சத்தியகீர்த் திக் கேற்றவாறு அவன் தேறுதல் கூறினன்.

## 6. வள்ளற்றன்மையும் வாய்மையும்

மறையவனைப் பின்பற்றிச் சென்ற சந்திரமதியும் தேவ தாசனும் அவனுல் பலவாறு துன்புறுத்தப்பட்ட னர். சந்திரமதி நாடோறும் அதிகாலையி லெழுந்திருந்து சாதாரண பணிப்பெண்களைப் போல வேலை செய்து வந் தாள். நெற்குற்றுதல் முதலிய கடின வேலைகளை அவள் செய்யவேண்டியது அவசியமாயிற்று. தேவதாசனும், காட்டிடைச் சென்று, மறையவன் வீட்டிற்குவேண்டிய விறகைச் சேகரித்துத் தன் முடிமீது சுமந்து வருவான்.

வேலை எல்லாம் முடிந்த பிறகே அவர்களுக்குச் சிறிதளவு கஞ்சி கிடைக்கும்.

ஒருநாள் தேவதாசன் தன்னைப் போன்ற இளம் பிள்ளைகளோடு காட்டிடைச் சென்று விறகு சேகரித்தான். அப்போது அங்கு அடர்த்தியான ஒரு தருப்பைப் புதரைக் கண்டான். உடனே தருப்பையைக் கொய்து எடுத்துச் செல்ல எண்ணி அப் புதரின் அருகில் சென்று தருப்பையைக் கொய்துகொண்டிருந்தான். அப்போது தவ முனிவருடைய செய்கையால் அங்கிருந்த ஒரு பாம்பு அவனை விரைந்து தீண்டிற்று. அதை யறிந்த அவ்விளம் புதல்வன் வாய்விட்டலறிக் கீழே விழுந்து அக்கணமே மரண மடைந்தான். அவனோடுவந்த ஏனைய சிறுவர்கள் மண் மீது உயிரின்றிக் கிடக்கும் தேவதாசனைக் கண்டு உண்மையை யுணர்ந்தனர். அவர்களும் அச்சத்தினால் தத்தம் வீடுகளுக்குக் கடிது சென்றனர்.

அன்று மாலை வெகு நேரஞ் சென்றும் காட்டுக்குச் சென்ற தன் அருந்தவப் புதல்வன் திரும்பி வாராமையைக் கண்ட சந்திரமதி ஏங்கினாள்; பன்முறைத் தெருவாயிலில் வந்து பார்த்தாள்; கடைசியாகக் காட்டுக்குச் சென்று திரும்பிய ஒரு சிறுவன் மூலமாகத் தன் புதல்வனுக்கு நேர்ந்த பேராபத்தைக் கேட்டறிந்தாள். உடனே இடி முழக்கம் கேட்ட நாகம்போல அசைவற்றுத் தன் மதிமயங்கித் தரையில் விழுந்தாள்; எழுந்தாள்; அரற்றினாள். பிறகு தெளிந்து, மறையவனை யணுகி, நிகழ்ந்தவற்றைப் புகன்று, மண்ணுலகை நீத்த மகனைத் தகனம் செய்துவர உத்தரவு கேட்டாள். அம் மறையவனோ சீற்றத்துடன் பல கொடு மொழிகளைப் புகன்று முடிவில், 'நீ இரவில் சென்று விடிவதற்குள் திரும்பிவிட வேண்டும்' என்று கட்டளையிட்டான்.

சந்திரமதியும் விரைந்து காட்டிடைச் சென்றாள். இருள் சூழ்ந்த இரவில் ஒன்றும் விளங்காது அவள் தன் புதல்வனது பரிதாப நிலைமையை நினைத்துச் சென்றாள். முடிவில் அவள் தருப்பைப் புதரின் அருகில் மண்மீது கிடந்த புதல்வனைத் தடவிக் கண்டு பிடித்துத் துணையிழந்த அன்றிலைப்போலக் கதறினாள். புழுதி படிந்த அவ்விளங் குமரனைத் தன் மடியிற் கிடத்தி வாய்விட்டுப் புலம்பினாள். நீதிநெறி வழுவாத அரிச்சந்திரன்புதல்வனுக்கு இவ்வாறு நேர்ந்தது தகுமோ என்றும், எவர் செய்த தீவினையோ வென்றும் அரற்றினாள். ஒப்புயர்வற்ற அரிச்சந்திரனுடைய புதல்வன் கொடிய நாகம் தீண்டியிறத்தல் ஊழின் வலியோ வென்று மனமுளைந்தாள். காதன் மைந்தன் இறந்தும் உயிர் வைத்திருந்த தன் கன்னெஞ்சினை அவள் வெறுத்துக் கொண்டாள். வள்ளற்றன்மை மிகுந்த தன் நாயகன் பிற் காலத்தில் தன்னைச் சிறைமீட்டு, 'மைந்தன் எங்கே?' என்று வினவினால் என்ன சொல்லுவதென்று ஏங்கினாள். தன்னைப்போலக் கொடுமை வாய்ந்தவர் யாரும் இலரென் றும், தன் புதல்வன் இறந்ததுபோலத் தான் இறக்க வில்லையே யென்றும் அவள் ஒப்பற்ற துயரத்தி லாழ்ந் தாள்.

கடைசியாகத் தன் அருமைப் பாலகனை அன்புடன் எடுத்துத் தகனம் செய்யச் சென்றாள். காரிருளில் காடு முரடான வழியே சென்று தன் செல்வப்புதல்வனைக் கண்ணீரால் குளிப்பாட்டிய வண்ணம் சுடுகாட்டை யடைந் தாள்.

அங்கோரிடத்தில் பாலகனை வளர்த்தினாள். பிறகு அங்குக் கிடந்த கொள்ளிக்கட்டைகளைப் பொறுக்கி ஒன்று சேர்த்து அதன்மீது பாலகனைவைத்துத் தீ மூட்டினாள்.

அப்போது உண்டான வெளிச்சத்தைக் கண்டதும், அங்குக் காவல் செய்திருந்த அரிச்சந்திரன் விரைந்து வந்து சந்திரமதியை நோக்கி, 'ஏ! பெண்ணே! இந் நடுநிசியில், தனிமையாய் நீ இங்கு வந்து என்ன செய்கின்றாய்? இஃதென்ன?' என்று உரத்துக் கேட்டான்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட சந்திரமதி, 'ஐயா! நான் இவ்வூரில் அடிமை வேலை செய்யும் ஓர் ஏழை; என்னுடைய புதல்வன் இன்று விடந்தீண்டி இறந்தான்; அவனை இச் சுடுகாட்டில் தகனம் செய்கின்றேன்' என்று மனக்கிலேசத்துடன் பணிவாகக் கூறினாள்.

அதைக் கேட்ட அரிச்சந்திரன், கோபத்துடன், 'நீ இவ்வாறு என் உத்தரவின்றி இங்குத் தகனம் செய்தல் கூடாது. என்னுடைய தலைவருக்குச் சேரவேண்டிய கொள்ளி யாடையையும், காற்பணத்தையும் என்னிடம் கொடுத்துவிட்டுச் செய்யவேண்டும்' என்று கூறினான்.

உடனே சந்திரமதி அவனை நோக்கி, 'ஐயா! நான் மிக்க ஏழை. ஆதரவற்று வேறொருவர் சகாயமின்றி நானே என் தோளின்மீது இப் பாலகனைச் சுமந்து வந்தேன். இத்தகைய துர்ப்பாக்கியசாலியான நான் எவ்வாறு உம்முடைய தலைவருக்குச் சேரவேண்டியவைகளைக் கொடுக்க முடியும்? நான் தங்களுடைய அடைக்கலம்' என்று தழுதழுத்த குரலிற் கூறினாள்.

அரிச்சந்திரனும், அவளுடைய நிலைமைக்கு மிகவருந்தித் தன்னைப் பரிந்து நோக்கிப் பரிதபிக்கும் அவளை, 'நீ யார்?' என்று கேட்டான். அப்போது சந்திரமதி தன்வரலாற்றைக் கூறினாள்.

உடனே நீதிநெறி பிறழா அரிச்சந்திரன் தன் முன் நிற்பவள் தன் இன்னுயிர் அனைய மனைவியென்றும், இறந்து

கிடக்கும் பாலகன் தன்னுடைய திருக்குமாரனே யென்றும் அறிந்து உள்ளங் கலங்கி மனமுளைந்தான்; திகைப்பூண்டு மிதித்தவனைப்போல மதிமயங்கி நின்றான்.

பிறகு, ஒருவாறு தேர்ந்து, 'அருந்தவப் புதல்வ! கொடிய நாகத்தின் விடமேறி உயிர் துறக்கவோ காசி நகருக்கு எங்களுடன் வந்தனை! சூரிய குலத்துதித்து நீ என்ன சுகங்கண்டனை? திரண்ட நாட்டையும் செழுமணிச் சிங்காதனத்தையும் இழந்தனை! இரக்கமற்று உன்னை நான் அம் மறையவனிடம் விற்றதற்கு வருந்தியோ இம் மண்ணுலக வாழ்க்கையை நீத்தனை! ஊழ்வினையும் இவ்வாறாமோ?' என்று கண்ணீர்விட்டு மனம் கலங்கினான்.

அன்னவனுடைய மொழிகளைக் கேட்ட சந்திரமதி அவன் தன் கணவனென்றுணர்ந்தாள். உடனே, அவன் பாதங்களில் அடியற்றமரமென விழுந்து, 'தேவரீர் இதன் பொருட்டு வருந்துதல்வேண்டா. எல்லாம் ஊழ்வினைப் படியே நடக்கும்; தங்களுடைய அறநெறியைக் கைவிடாது விளக்குவதே மேன்மை' என்று கூறினாள்.

அப்போது அரிச்சந்திரன் அவளை நோக்கி, 'பெண்ணே! நான் இச் சுடுகாட்டுத் தலைவனுக்கு அடிமையாயிருக்கின்றேன். அவனுக்குச் சேரவேண்டிய கொள்ளியாடையையும் காற்பணத்தையும் நீ உன்னை அடிமைகொண்ட மறையவனிடமிருந்து வாங்கிவந்து கொடு. அவற்றை நான் உன்னிடம் வாங்காவிட்டால் அஃது அநீதியாகும்' என்று மொழிந்தான்.

அதைக்கேட்ட சந்திரமதியும், அவ்வாறே கொண்டு வருவதாகச் சம்மதித்துப் புதல்வனை அவ்விடத்திலேயே கிடத்திவிட்டு, மறையவன் வீடு நோக்கித் திரும்பினாள்.

அவள் காசி நகரத்தின் சில வீதிகளைக் கடந்து செல்லும்போது ஒரு தெருவில் ஓர் அரசிளங்குமரன் உயிரிழந்து புழுதியில் கிடப்பதைக் கண்டாள். காசியரசனுடைய குமாரன் கள்வர்களால் கொல்லப்பட்டு அங்கு அவ்வாறு கிடப்பதை சந்திரமதி அறியாமல் தன்னுடைய குமாரனைப் போன்றிருந்த அவனருகிற் சென்று வருந்தினாள்.

அச் சமயம் அரசனது திருக்குமாரனைத் தேடிவந்த காவலாளர் சந்திரமதியைக் கண்டு அவளே அக் கொடுங் கொலையை இயற்றியவளென்று கருதி அவளைக் கயிற்றால் பிணித்து இழுத்துச் சென்றனர். நிகழ்ந்தவற்றை உணர்ந்த சந்திரமதி பலவாறு பலமுறையும் துன்பப்படுவதைக்காட்டிலும் தானே கொலையாளியென்று சொல்லிக்கொண்டு உயிர் நீத்தல் உத்தமமெனத் துணிந்தாள். அதனால், அவள், அரசவையை யடைந்தவுடன், அரசனிடம் தானே அக் கொலையை யியற்றியதாகக் கூறினாள். அவளுடைய முகப் பொலிவையும், வனப்பு மிக்க வதனத்தையும், களங்கமற்ற கண்களையும் கண்ட காசி மன்னன் அவள் குற்றவாளி யல்லளென்று உணர்ந்தான். அங்கிருந்த மந்திரிகளும் அவ்வாறே அபிப்பிராயப்பட்டனர். ஆனால், சந்திரமதி தானே கொலையாளி என்று வற்புறுத்திக் கூறினாள்.

தன் புதல்வன் கொலையுண்ட வருத்தத்தைப் பொருட்படுத்தாது சந்திரமதிமீது இரக்கங்கொண்டு அவள் குற்றவாளியல்லளென்றே காசி மன்னன் தீர்மானித்தான். ஆனால், அவளைக் கைப்பற்றிய காவலாளர் அவளே கொலையாளி என்று சாதித்தனர். அப் பாலகன் கிடந்த இடத்தில் சந்திரமதியினுடைய காலடிகளே பொருந்தியிருந்தனவென்றும் அவர்கள் கூறினர். அதனால், காசி மன்னன், சந்திரமதி

யின்மீது கொலைக் குற்றத்தைச் சாட்டி, அவளைக் கொலை புரியும்படி கட்டளையிட்டான்.

உடனே, அரசன் ஆணைப்படி, வீரவாகு என்னும் புலையன் சந்திரமதியை அழைத்துக்கொண்டு சுடுகாட்டிற்குச் சென்றான்.

தெருக்களில் சந்திரமதியைக் கண்ட மாந்தர் அனைவரும், 'இவள் கொலை செய்திருக்கக் கூடுமா!' என்று அதிசயித்தனர். 'இவ்வளவு அழகு வாய்ந்தவள் கொடிய நெஞ்சினளாயிருக்க மாட்டாள்' என்று சிலர் கூறினர். வேறு சிலர், 'இக் கொடும்பாதகியைப் பார்ப்பதுதகுமா' என்றனர்.

சுடுகாட்டையடைந்து வீரவாகு தன் வாளாயுதத்தை அரிச்சந்திரன் கையிற் கொடுத்துச் சந்திரமதியைக் கொலை புரியும்படி கட்டளையிட்டான். அப்போது தன் கணவனே தன்னைக் கொலைபுரிபவனென்று சந்திரமதி உணர்ந்து கொண்டாள். அரிச்சந்திரனும் அவள் தன் மனைவியே என்று அறிந்து மனக்கிலேசமடைந்து இன்னும் என்ன நேரிடுமோ என்று எண்ணினான்.

அச் சமயத்தில் திரிமூர்த்திகளும், தேவலோகத்திலிருந்துவந்த தேவேந்திரன் வசிட்டர் முதலியோரும், அரிச்சந்திரனுடைய செய்கைகளையறிந்து அவனுடைய உறுதி நிலையைக்காண அங்கு வந்தனர்.

அதுபொழுது கௌசிகர் விரைந்து அரிச்சந்திரனை யணுகி, 'அரிச்சந்திரா! இப்போதாகிலும் நீ எனக்குக் கொடுத்த நாட்டை இல்லையென்று மறுத்துவிடு. உடனே உன்னுடைய நாடு நகர முதலியவற்றை உன்னுடைய தாக்கிச் செல்லுகின்றேன். நீ ஏன் இவ்வளவு துன்பத்திற் குள்ளாகவேண்டும்' என்று கூறினார்.

உடனே அரிச்சந்திரன், 'மாதவத்தீர்! மறுமுறை அவ் வார்த்தையை என்னிடம் புகலவேண்டாம். ஒருமுறை உமக்களித்த அந் நாடு உம்முடையதே யாம். அப்படி நான் மறுத்துரைத்தால் அஃது அறநெறிச் சார்வோர் செய்கை யன்றாகும். எத் துன்பம் வந்தாலும் வள்ளல் என்னும் பெயரைப் போக்கிக் கொள்ளேன். வாய்மை என்னும் சீரிய குணம் அற்றவன் என்று பலர் இகழ நான் விரும் பேன். இஃது உண்மை' என்று உறுதியாகக் கூறினான்.

இவ் வார்த்தைகளைக் கேட்ட கௌசிகர் தம் மனங் கலங்கி அவ்விடத்தை விட்டகன்றார்.

பிறகு, அரசர்கோமான் சந்திரமதியை அழைத்துச் சென்றான். அவளைத் தலை குனியும்படி கட்டளையிட்டுத் தான் அறநெறி பிறழாத் தூய்மை வாய்ந்தவனாயிருத்தல் உண்மையானால், அவள் இறவாதிருக்க வேண்டுமெனக் கூறி வாளை வீசினான். தெய்வத்திருவருளால், அந்த வாள் அவளைத் துணிக்காது அவள் கழுத்தில் மலர்மாலையெனத் திகழ்ந்தது. அதைக்கண்ட அனைவரும் ஆனந்தித்து ஆர்த் தனர்.

திடீரென அவ்விடத்தில் தேவர்கள்கூட்டம் குழுமி யது. அவர்களைக்கண்ட அரிச்சந்திரனும் சந்திரமதியும் அடிபணிந்து நின்றனர். நேர்மைமிக்க அரிச்சந்திரனுடைய விழுமிய குணத்தைப் பலரும் மெச்சினர். வசிட்ட முனி வரும் அளவிலா மகிழ்ச்சியடைந்தார். அங்கு வந்த கௌசி கர் தம்முடைய சபதம் பொய்த்துப் போனதைத் தேவர் கள் முன்னிலையில் ஒப்புக்கொண்டார். தாம் வாக்களித்த வாறே தம்முடைய தவத்தில் பாதியை அரிச்சந்திரனுக்கு அளித்தார்.

பிறகு, அரிச்சந்திரனிடம் தேவலோகத்தில் நடந்த வற்றைப் புகன்று, கௌசிகர் அவனை அவனுடைய நாடு நக

ரங்களை ஒப்புக்கொள்ளும்படி வேண்டினார். ஆனால், தீதற்ற குணமுடைய அரிச்சந்திரன் தன் நாடு நகரங்களை ஏற்றுக் கொள்ள மறுத்தான். தன் இன்னுயிரனைய மனைவியை விற்பனை செய்ததுமன்றித் தான் புலையனுக்கு அடிமையாகிச் சுடுகாடு காத்தபிறகு மறுபடியும் அரசாளுவது அடாது என்று கூறினான். ஆனால், சந்திரமதியை விலைக்கு வாங்கின பிராமணன் அக்கினி தேவனென்றும், புலையனை வீரவாகு எமதருமன் என்றும், அச் சுடுகாடு யாகசாலையென்றும் தேவர்கள் அரிச்சந்திரனிடம் கூறித் தக்க சான்றுகளைக் காட்டினர்.

கடைசியாக அரிச்சந்திரன் ஒருவாறு மனந்தேறி அரசாள ஒப்புக்கொண்டான். இவ் விஷயங்களையெல்லாம் அறிந்த காசி மன்னன் அரிச்சந்திரனைப் புகழ்ந்து நின்றான். விடந்தீண்டி இறந்த தேவதாசனும் காசி மன்னன் மைந்தனும் தேவர்களது அருளினால் உயிர் பிழைத்து நின்று வணங்கினர். தத்தம் புதல்வரைக்கண்ட பெற்றோர் மகிழ்வெய்தினர்.

பின்னர்த் தேவர்கள் விரும்பியபடி காசி மன்னன் தன்னுடைய நால்வகைச் சேனைகள் புடைசூழ அரிச்சந்திரனோடு அயோத்தியை நோக்கிச் சென்றான். அன்புடைய மந்திரியாகிய சத்தியகீர்த்தி தன் அரசனையும், அரசியையும், அவர்கள் புதல்வனையும் கண்டு மனமகிழ்ந்து அவர்களுடன் சென்றான்.

மீண்டும் அரசர் பெருமான் வருவதையுணர்ந்த அயோத்திமாநகர மாந்தர்கள் உடம்பைவிட்டு நீங்கிச் சென்ற உயிர் மீண்டும் அவ் வுடம்பைச் சேர்ந்தது போன்று களித்தனர். தத்தம் மாளிகைகளை அழகு செய்தனர். மங்கல வாத்தியங்களை முழக்கினர். பொற்றேர்மீது வந்த

வேந்தர் பெருமானைக் கையாற்றொழுது நாவாற் புகழ்ந்தனர். மடமயில்போன்ற சந்திரமதியைக் கண்ட மங்கைமார் பேருவகை யெய்தினர்.

விண்ணுற வுயர்ந்து பரந்த தன் அரண்மனையை அரிச்சந்திரன் அடைந்தான். அன்றே விண்ணவர் சூழ்ந்து ஆசிர்வதிப்ப மங்கல வாத்தியமொலிக்க, அரிச்சந்திரன் மீண்டும் தன் சிங்காதனத் தேறினன். தேவர்கள் அனைவரும் அரிச்சந்திரனை ஆசிர்வதித்துச் சென்றனர். கௌசிகரும் தாம் இயற்றிய கொடுமைகளைப் பொருட்படுத்தாது தாம் விழைந்தவற்றைச் சலிப்பின்றிக் கொடுத்த அவனுடைய வள்ளற்றன்மையைப் பெரிதும் வியந்தார்; தான் செய்த குற்றங்களை மன்னிக்கும்படி கேட்டுச் சென்றார். காசி மன்னனும் தன் நாட்டையடைந்தான்.

'சுடினுஞ் செம்பொன் றன்னொளி கெடாது' என்பதுபோல முன்னினும் பதின்மடங்கதிக கீர்த்தியோடு அரிச்சந்திரன் செங்கோல் செலுத்தி வந்தான்.

# II. கன்னன்

## 1. முன்னோர் வரலாறு

சீரும் சிறப்பும் பெற்ற நம்மிந்திய தேயத்தின் திலகமென, முற்காலத்தில் வட இந்தியாவில், குரு நாடென்று ஒரு நாடு விளங்கியது. புனிதமான கங்கை அந்நாட்டில் தன் வெள்ளத்தைப் பரப்பிச்சென்றது. இடையறாது அப் புண்ணியநதி பெருக்கெடுத்து ஓடுதலால் அந்நாடு நீர்வள நிலவளமிக் குடையதாயிருந்தது. வருடந்தோறும் தானிய வகைகள் செழித்துத் தழைத்து முதிர்ந்த பலனைத் தந்தன.

அந்நாட்டின் இடையிடையே பல பெரும்பொழில்கள் சிறப்புற்றுவிளங்கின. தேவலோகத்துக் கற்பகச் சோலையோ என்று காண்போர் ஐயுறும்வண்ணம் அவை செழித்தோங்கி அடர்ந்திருந்தன. மண மிகுந்த பூஞ்செடிகள் தத்தம் நறுமணத்தால் வண்டுகளை நல்வர வேற்றன; அவைகளும் வந்து மதுவுண்டு களித்து ஒலித்தன.

தற்காலத்தில் டில்லியென வழங்கும் அணி நகரமே அக் காலத்தில் குருநாட்டின் தலை நகரமாய் விளங்கியது. முன்னாளில் அந்நகர் அத்தினபுரம் என வழங்கப்பட்டது. அப்பொழுது அத்தினபுரி பன்னிறமணிகள் இழைக்கப்பட்ட மாட மாளிகைகளுடன் விளங்கியது. அந்நகர் அளகாபுரிக்கு ஒப்பிடத் தகுந்த பெருமை வாய்ந்திருந்தது.

அறநெறி சார்ந்து மனுமுறை பிறழாது சந்திரவமிசத்து மன்னர்கள் அத்தினபுரியில் அரசுபுரிந்து வந்தனர். அவ்வமிசத்துத் தோன்றலாகிய சந்தனு என்னும் பெயர் புனைந்த மன்னன் அங்கு அரசாண்டிருந்தான்.

ஒருநாள் அவன், வேட்டையாடும் நிமித்தம், தன் நால் வகைச் சேனையும் சூழக் கானகத்தை நோக்கிச் சென்றான். அவனோடு பல வேடர்கள் நாய்களுடன் சென்றனர். கானகத்தை யடைந்த அரசன் தனக்கெதிர்ப்பட்ட கொடிய வனவிலங்குகளை அதம் செய்து தப்பி யோடுபவைகளைப் பின்தொடர்ந்து சென்றான். வேடர்களும் பல விடங்களில் வலைகட்டி விலங்குகளை அவைகளிற் சிக்க வைத்தனர். பின்னர் அவைகளை அடித்துக் கொன்றனர். வெருண்டோடும் மிருகங்களைப் பின் தொடர்ந்து நாய்கள் விரைந்து சென்று அவைகளுக்குத் துன்பம் விளைத்தன.

மிருகங்களைத் துரத்திச் சென்ற சந்தனு, வெகு நேரம் வேட்டையாடிய களைப்பால் நீர் வேட்கை மிகவே, அருகி லிருந்த கங்காநதிக் கரையை யடைந்து நீரருந்தி இளைப் பாறினன்.

அற்றைப்போது அங்கிருந்த ஒரு மரத்தருகில் கங்கை வனப்பு மிக்க ஒரு வனிதையின் வடிவத்துடன் நின்று கொண்டிருந்தாள். அவளைக் கண்ணுற்ற அரசன் அவ ளுடைய அழகை வியந்து உடனே அவளை மணமுடிக்க விழைந்தான்.

அதனால், அவன் அவளை யணுகித் தன்னுடைய எண் ணத்தைத் தெரிவித்தான். கங்கையும் அவனை மணக்கச் சம்மதித்தாள். ஆனால், மணமான பிறகு தான் எத்தகைய தீச்செயலைச் செய்தாலும் அதைப் பொருட்படுத்தக் கூடா தென்றும், அப்படிப் பொருட்படுத்தினால் அப்பொழுதே சந்தனுவை விட்டுச் செல்ல நேரிடுமென்றும் அவள் கூறி னாள். அம் மன்னனும் அவளுடைய நிபந்தனைகளுக்கு இணங்கினன்.

பிறகு, அரசன் கங்கையை மணம்புரிந்து வாழ்ந்திருந் தான். காலஞ் செல்லச் செல்லக் கங்கையானவள் ஏழு

குழந்தைகளை முறையே பெற்றெடுத்து, அவைகள் ஒவ்வொன்றையும் பிறந்த அன்றே கங்கையில் எறிந்து விட்டாள். அவளுடைய கொடிய செய்கையைக் கண்ட அரசன், தான் ஒப்புக்கொண்ட நிபந்தனையின்படி வாளா விருந்தனன். பின்னர்க் கங்கை எட்டாவதாக ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்தாள். அதைக் கேள்வியுற்ற அரசன் விரைந்து சென்று அப் பிள்ளையை மட்டும் காப்பாற்றும்படி கங்கையை வேண்டினான். உடனே கங்கையானவள் அரசன் ஒப்புக்கொண்ட நிபந்தனையை மீறியதை எடுத்துக் காட்டி அப்பொழுதே அவனை விட்டு விலகினாள். அவள் செலலும்போது அப் பிள்ளையையும் எடுத்துச் சென்று வளர்த்துப் பின்னர் மீண்டும் அனுப்பிவிடுவதாக வாக்களித்தாள். மேலும் அவள் மூலமாக அரசன் அவளுடைய வரலாற்றை யறிந்தான். அவள் கங்கை யென்றும் தான் வருணதேவ னென்றும் உணர்ந்தான். அவன் பிரமதேவன் சபையில் கங்கையைச் சந்திக்க நேர்ந்த காலத்தில் அவளை விரும்பவே நான்முகன் அவளைச் சபித்தான் என்றும், அதன்படி அவள் உலகில் உதித்து வருணதேவனை தன்னை மணந்தாளென்றும் அறிந்தான். பின்னர் வசிட்ட முனிவருடைய சாபம்பெற்ற அட்டவசுக்களே கங்கைக்குப் பிள்ளைகளாகப் பிறந்தன ரென்றும், அதனாலேயே கங்கை ஏழு பிள்ளைகளையும் பெற்றபொழுதே கங்கையில் எறிந்து விட்டா ளென்றும், எட்டாவது பிள்ளை மட்டும் உலகத்தில் உயிர் வாழ்வா னென்றும் அறிந்தான்.

கங்கை தன் மகனுடன் சென்றுவிடவே சந்தனு அவளை நினைத்துப் பெரிதும் வருந்தினான். கங்கையோ தன் அரிய புதல்வனை மிகச் சிறப்புடன் வளர்த்து வந்தாள். அவனும் மிகுந்த நுண்ணறிவுடையவனாய்ச் சகல

சாஸ்திர விற்பன்னனாய் விளங்கினான். கங்கை அவனுக்குத் தேவவிரதன் எனப் பெயர் புனைந்தாள்.

ஒருநாள் மறுபடியும் சந்தனுவென்பான் வேட்டையாடக் காட்டிடைச் சென்றான். முன்னர், தான் அடைந்த அக் கங்கைநதிக் கரையை நண்ணித் தன் மனைவியாகிய கங்கையைப் பற்றிக் கவலை கொண்டான். அப்போது அக் கங்கையிலிருந்து வனப்பு மிக்க ஓரிளமகன் வெளி வந்தான். அவனைக் கண்ட சந்தனு வியப்படைந்து அவனை உற்று நோக்கினான். அவ் வாலிபனும் ஒரு முறைச் சூழ நோக்கிச் சந்தனுவைக் கண்டான். விளையாட்டாக அவ் வாலிபன் தன் கரத்திலிருந்த வில்லில் ஓர் அம்பைத் தொடுத்துச் சந்தனுவைக் குறிபார்த்து எய்தான். அக் கணை மன்னன் மார்பிற் படவே அவன் மூர்ச்சையடைந்தான். அதைக் கண்ட தேவவிரதன் அச்சங்கொண்டு, ‘விளையாட்டே வினையாயிற்றே’ என்று சிந்தித்துத் தன் தாயிடம் சென்று நிகழ்ந்தவற்றைப் புகன்றான்.

உடனே கங்கை விரைந்து வந்து மன்னனைக் கண்டு பதறி அவனைக் களை தெளிவித்தாள். முழு மதிபோன்ற கங்கையின் திருமுகத்தைக் கண்ட மன்னன் அளவற்ற மகிழ்ச்சி யடைந்தான். பின்னர்க் கங்கை, அம்பினை எவிய அச் சிறுவன் தன்னுடைய எட்டாவது குமாரன் எனச் சந்தனுவுக்குக் கூறினாள். வசிட்டமுனிவரிடம் நீதி நெறிகளையும், பரசுராமர்பால் வில் வாள் பயிற்சிகளையும் கசடறக் கற்ற தேவவிரதன் சந்தனு தன் தந்தையென்பதை உணர்ந்தனன்; உடனே அம் மன்னன் இணையடிகளில் வீழ்ந்து அறியாதுசெய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டனன். சந்தனுவும் கங்கையைப் பிரிந்து திருக்குமாரனோடு தன் நகரத்தை யடைந்தான்.

சின்னாட் கழிந்தபின் சந்தனு, தேவவிரதனை இளவரசனாக்கினான். அவனும் அன்புடன் குடிகளைப் பரிபாலித்து வந்தான். கங்கையால் வளர்க்கப்பட்ட படியால் அவன் காங்கேயன் எனப் பலரால் அழைக்கப் பெற்றான்.

பின்னர் ஒரு முறை சந்தனு மன்னன் வேட்டையாடிச் சென்று யமுனாநதிக்கரையை யடைந்தான். அங்கிருந்த பல விநோதங்களைக்கண்டு களித்த அம் மன்னன் காற்றில் கலந்து வந்த நறுமணத்தை யறிந்து அதற்குக் காரணம் இன்னதெனத் தோன்றாது மயங்கி, அம் மணம் வந்த வழியே சென்றான். அப்போது யமுனா நதிக்கரையில் ஒரு படகில் ஒரு பெண்மணி யமர்ந்திருந்தாள். அவளிடமிருந்தே அம் மணம் வந்ததென்றுணர்ந்தான். அதனால், அவன் அவளை யடைந்து அவளுடைய வரலாற்றை உணர்ந்தான். ஒரு செம்படவனுடைய மகளாகிய அவள் தன் பெயர் பரிமளகந்தி என்பதென்றும், தான் பலருக்கும் ஓடம் செலுத்தி வாழ்ந்திருப்பவளென்றும் கூறினாள். அவளை மணக்க விரும்பிய அம் மன்னன் அவளுடைய தந்தையை யணுகித் தன்னுடைய எண்ணத்தைத் தெரிவித்தான். அதை யுணர்ந்த அவ் வலைஞன் தன் மகள்பாற் பிறக்கும் புதல்வனுக்கு முடிசூட்டினால் தன் பெண்ணைக் கொடுப்பதாக வாக்களித்தான். அது கேட்ட மன்னன் வாடித் தன் அரண்மனை யடைந்து கவலை மேற்கொண்டிருந்தான். இவைகளைச் சாரதியால் உணர்ந்த காங்கேயன் செம்படவனை யடைந்து, தனக்குப் பட்டம் வேண்டியதில்லை யென்றும், தனக்குப் பிறக்கும் மைந்தர்கள் அப் பட்டத்தை உத்தேசித்துப் போர்புரியக் கூடுமாகையால், தான் மணஞ்செய்துகொள்ளுவதேயில்லை யென்றும் அரியதோர் சபதம்செய்தான். பிறகே, அவ் வலைஞன் தன் மகள் பரிமளகந்தியைச் சந்தனு மன்னனுக்கு

விவாகம் செய்துகொடுத்தான். தான் விரும்பியவாறு முடிந்தது தன்னுடைய மகன் தேவவிரதனுடைய சபதத்தால் என்பதை அறிந்த சந்தனு தன் மகனைப் பலவாறு புகழ்ந்துரைத்தான். பிறகு, விரும்பும்போது இறக்கவல்ல ஓர் அரிய வரத்தை அம் மன்னவன் காங்கேயனுக்கு அளித்தான். தான் மணம் செய்து கொள்வதில்லை என்னும் கொடிய சபதத்தை இயற்றிய காங்கேயன் அன்று முதல் வீடுமன் என்னும் பெயர் பெற்றான். வாக்களித்த விதமே அவன் விவாகமின்றி யிருந்தான்.

நாளடைவில் சந்தனு பரிமளகந்தியினிடமாகச் சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்னும் இரு புதல்வர்களைப் பெற்று மண்ணுலகை நீத்தான். மூத்தவன் சிறு வயதிலேயே இறந்துபோக, வீடுமன் இளையவனுக்கு முடி சூட்டினான். இளையவனாகிய விசித்திரவீரியன் அம்பிகை, அம்பாலிகை என்னும் இரு பெண்களை மணந்தான். சின்னாட்களில் விசித்திரவீரியன் இறந்துபோக, வியாசரின் அருளால் திருதராட்டிரன் அம்பிகையினிடத்தும், பாண்டு அம்பாலிகையி னிடத்தும் பிறந்தனர். அம்பாலிகையின் தோழி யொருத்தி விதுரனைப் பெற்றெடுத்தாள். மூத்தவனாகிய திருதராட்டிரன் பிறவிக் குருடன். பாண்டு வெண்பான் நோயுற்று மெலிந்திருந்தான். விதுரனே எல்லாரினும் வல்லமை யுடையவனா யிருந்தான்.

வீடுமன், திருதராட்டிரனை அரசனாக்கினான். பாண்டு படைத்தலைவனாகவும், விதுரன் அமைச்சனாகவும் இருந்து திருதராட்டிரனுக்கு உதவி செய்தனர். திருதராட்டிரன் காந்தார நாட்டரசன் மகள் காந்தாரி என்பவளை மணந்து செவ்வனே செங்கோல் நடத்தி வந்தான்.

## 2. கன்னன் மன்னனாதல்

குந்திபோஜன் என்னும் பெயர் வாய்ந்த ஒரு வேந்தன் விருஷ்ணி குலத்துதித்த சூரசேனன் என்பவனுடைய அருந்தவப் புதல்வியாகிய பிருதை என்பவளைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டான். பிருதை குந்திபோஜனால் செவ்வனே வளர்க்கப்பட்டு அழகு பெற்று விளங்கினாள். அவளுடைய வளர்ப்புத் தந்தை குந்திபோஜனனபடியால் அவளுக்குக் குந்தி யெனும் பெயர் வழங்கலாயிற்று.

குந்திக்குப் பத்து வயதாகும்போது, துருவாசரென்னும் தபோதனர் குந்திபோஜனைக் கண்டு தாம் நோன்பொன்றியற்ற வேண்டுமென்று கூறினார். குந்திபோஜனும் அவருடைய விருப்பத்தின்படியே அவரைத் தன் அரண்மனையிலிருத்தி, அவர் விரதத்தை முடிப்பதற்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்தான். அம்முனிவருடைய ஏவலாளாகத் தன் புதல்வி பிருதையை நியமித்தான். சிறு பிழைக்குங் கடுங்கோபங் கொள்ளும் துருவாசருடைய குணத்தை அவன் அடிக்கடி பிருதைக்கு நினைப்பூட்டி முனிவருக்கு எவ்வகையிலும் களிப்புண்டாக்கும்படி கட்டளை யிட்டான். பிருதையும், தன் தந்தையின் வார்த்தைகளை மந்திரமெனக் கொண்டு, துருவாசருக்குத் தொண்டு செய்து வந்தாள்.

அவ்வாறு ஒரு வருடம் கழிந்தது. துருவாசரும் தன்னுடைய விரதத்தைச் செவ்வனே அனுஷ்டித்து முடித்தார்; பலவகையிலும் குற்றேவல் செய்த பிருதையின் செய்கைக்கு அவர் மிக்க மகிழ் வெய்தினார். அதனால், அவர் அவளுக்கு ஐந்து தேவ மந்திரங்களை உபதேசித்து அவற்றின் பலன்களையும் கூறினார். பிறகு, அவர் குந்திபோஜனை ஆசீர்வதித்துத் தம் இருப்பிடத்திற் கேகினார்.

பல மாதங்கள் கழிந்தன. குந்திதேவியும் கன்னிப் பருவமடைந்து தன் உப்பரிகையின் மீது உலவி நின்றாள். அப்போது, துருவாசர் அன்று தனக்குக் கூறிய தேவ மந்திரங்களின் நினைவு அவளுக்கு வந்தது. உடனே அவை களின் மெய்ம்மையை உணர விரும்பினாள். அங்ஙனம் விரும் பியவள் சூரிய மந்திரத்தை உச்சரித்தாள். அப்போதே சூரியன் அவள் எதிரில் தோன்றி அவளுக்கோர் அழகிய ஆண்மகனை அளித்தான். அவன் பின்னும் அப் பிள்ளையை ஒரு பேழையில் கிடத்திக் கங்கையில் விட்டுவிடென்றும், அப் பிள்ளை செல்வனே வளர்ந்து வருவானென்றும் கூறி மறைந்தான். குந்திதேவியும் அம் மகவைக் கண்டு மகிழ் வெய்தினாள். அப் பிள்ளையைப் பேழையிலிட்டுக் கங்கையில் விட்டுவிட அவள் துணியவில்லை. ஆனால், உலகத்தாருக்கு அஞ்சி மனவருத்தத்துடன், தன் ஆடையை ஒரு பெட்டியி லிட்டு மெத்தென்றுசெய்து, அதில் அப் பிள்ளையை வைத்து மூடிக் கங்கையில் விட்டுவிட்டாள். அப் பெட்டி மிதந்து செல்லும் திசையை நோக்கிப் பன்முறை திரும்பிப் பார்த் துப் பின்னர்த் தன் அரண்மனை யடைந்து வழக்கம்போல வசிக்கலானாள். பின்பு, அவள் பாண்டு மன்னனை மணந்து கொண்டாள். பின்னர், அவள் தருமன், வீமன், அருச்சுனன் என்னும் மூவரையும் ஈன்றெடுத்தாள். பாண்டு மன்ன னுடைய இளைய மனைவி மத்திரையினிடமாக நகுலன், சகா தேவன் என்ற இருவர் பிறந்தனர். சின்னாட்களுக்குப் பிறகு பாண்டு மன்னன் உயிர் துறந்தான்.

பேழையில் வைத்துக் கங்கையாற்றில் விடப்பட்ட அவ்வழகிய புதல்வனே நமது கதாநாயகனான கன்னன்! வெள்ளிய முத்துக்களை யெடுத்தெறியும் அலைகள் நிறைந்த கங்கையாறு அப் பெட்டியை ஏந்திச் சென்று அத்தினபுரியிற் சேர்த்தது.

அப்போது பொழுது புலரும் சமயமா யிருந்தது. கதிரவனும் தன்னுடைய செங்கிரணங்களைப் பரப்பிக் குண திசையில் எழுந்தான். அன்னவனது செங்கிரணங்கள் பரவி கங்கை நீர் பொன்னீர் போன்று பொலிந்து விளங்கியது. பறவை யினங்களும் துயினீத்துச் சிறகுகளை யடித்துப் பறந்து சென்றன. வள்ளல் வரக்கண்ட வறியோர் போலக் கன்னன் இருந்த பெட்டியைச் சுற்றிச் சேல்மீன்கள் துள்ளி விளையாடின.

அச் சமயம் மன்னன் திருதராட்டிரனுடைய தேர்ப் பாகன் தன் மனைவியுடன் நீராடக் கங்கைக்கரையை யடைந் தான். நற்குண நற்செய்கைகள் மிக்க அவ்விருவரும் ஈருட லும் ஓருயிரும்போல இல்லறம் நடத்தி வந்தனர். எத் தகைய துன்பத்தையும் மாற்றவல்ல புத்திரப் பேறின்மை யால் அவர்கள் மனங் கவன்றிருந்தனர். அவர்கள் அங்குத் தோன்றிய விநோதக் காட்சிகளை நோக்கியவண்ணம் செல் லும்போது கன்னன் அமர்ந்திருந்த பேழையைக் கண்ணுற்ற னர். உடனே அத் தேர்ப்பாகன் அதிசயித்து அப் பெட்டி யைக் கொணர்ந்து திறந்து பார்த்தான். அதிற் பொலிந்த பொன்னிறப் புதல்வனைக் கண்ட தேர்ப்பாகன் பேருவகை யெய்தினன். நித்திய தரித்திரனுக்கு எதிர்ப்பட்ட நிதிக் குவியலைப் போல அப் புதல்வனை அவன் வாரி யெடுத்து முத்தமிட்டான். பின்னர், உவகைததும்பிய உள்ளத்தின ஞய்த் தன் மனைவியிடம் அப் புதல்வனை ஈந்தான். பெறுதற் கரிய பேற்றைப் பெற்றவளைப்போல அவளும் அக் குழந்தை யைப் பணிவுடன்பெற்றுத் தன் பவளச் செவ்வாயால் முத்தமிட்டாள். அவன் காதில் விளங்கிய குண்டலங்களை யும், தேகத்திற் பொலிந்த கவசத்தையும் கண்ணுற்ற தேர்ப் பாகன் அப் பாலகன் தெய்வத் தன்மை வாய்ந்தவனெனத் தீர்மானித்தான். அதனுல், அவர்கள் நீராடிச் சென்று, தம்

இல்லம் சேர்ந்து, அப் புதல்வனை மிக்க மேன்மையுடன் வளர்த்து வந்தனர். பின்னர்த் தெய்வ வாக்கின்படி அவனுக்குக் **கன்னன்** எனப் பெயரிட்டனர்.

நாட்கள் செல்லச்செல்லக் கன்னனும் இளம்பிறைச் சந்திரன்போல வளர்ந்தான். சிறு பிராயத்திலேயே பல கலைகளைக் கற்றுப் படைக்கலப்பயிற்சியிலும் தேர்ச்சிபெற்று ஒப்பற்று விளங்கினன். அவனுடைய பேராழகையும், வீரச் செயல்களையும், அருமைக்கையுங் கண்ட நகர மாந்தர்கள் அனைவரும் அவனைப் புகழ்ந்து பேசினர். அவன் இழி குலத்தவனால் வளர்க்கப்பட்டதைப்பற்றி அவர்கள் அவனைப் பொருட்படுத்தாமல் இல்லை.

கன்னன் படைக்கலப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், அவற்றைக் கசடறக் கற்க எண்ணங் கொண்டான். அதனால், அவன் பரசுராமரை யடைந்து தான் ஒரு பார்ப்பனச் சிறுவன் போல நடித்தான். பரசுராமர் வேதியர்க்கு மட்டுமே கற்றுக கொடுத்தல் என்ற வைராக்கியங் கொண்டிருந்தார். அதனால், அவர், கன்னனைப் பிரம்ம குலத்துதித்தவனென்று நிச்சயித்து, அவனுக்கு யாவற்றையும் தெளிவாகக் கற்பித்தார். அவனுடைய நுண்ணறிவுக்கும், பெருங் குணத்திற்கும், வீரத் தன்மைக்கும் அவர் அவனை மெச்சினர்.

ஒருநாள் மாலைப் பொழுதில் அவர் அவனுக்குச் சில அரிய விஷயங்களைக் கற்பித்துக் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு உறக்கம் வரவே அவர் கன்னன் தொடைமீது தலையை வைத்து அயர்ந்து நித்திரை செய்தார். அச்சமயம் இரத்தவளிப் புழு வொன்று கன்னனுடைய அடித்தொடையில் புகுந்து தொளைக்க ஆரம்பித்தது. அதனால் உண்டான வலியைக் கன்னன் பொருட்படுத்தாது அதை

வற்று அமர்ந்திருந்தான். ஆனால், அப் புழுவோ அவ்வளவோடு விடாமல் மேலும் மேலும் தொளைத்து அவனுடைய உதிரத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தது. பொறுக்க முடியாத துன்பம் கன்னனுக்கு உண்டாயது. ஆயினும், தன் குருவின் உறக்கம் பங்கப்படுமென் றஞ்சிய கன்னன் வாளா விருந்தான். வீரமும் குரு பக்தியும் நிறைந்த அவனை அப் புழு விட்டு விலகவில்லை. அது விடாமல் அவனுடைய தொடையைத் தொளைக்கவே இரத்தம் பாய்ந்தோடி, பரசுராமருடைய தேக முழுவதையும் இரத்தமய மாக்கியது. உடனே உணர்ச்சி பெற்ற பரசுராமர் திடுக்கிட்டு விழித்தெழுந்து நோக்கினார். கன்னன் தொடையிலிருந்து இரத்தம் பெருகி ஓடுவதையும், தம் உடலம் செந்நிறமா யிருப்பதையும் அறிந்து கன்னனை நோக்கி, 'வஞ்சனை மிக்கவனே! இஃதென்ன? நீயோ பார்ப்பனக் குலத்திலுதித்தவன்! அப்படி யிருந்தால் இப் புழுத் துன்பம் செய்யத் தொடங்கியபோது நீ பயந்து அப்புறம் சென்றிருப்பாய். இன்றேல், இவ்வளவு இரத்தம் பெருகியோடும் போதாவது அச்சங் கொண்டு எழுந்திருந்திருப்பாய். அப்படி யில்லாமல் மிக்க தைரியத்துடன் அசையாது அமர்ந்திருக்கும் வீரம் வேதியர் குலத்துதித்தோனுக்கு அமைந்திராது. ஆகையால், உண்மையை உரைத்துவிடு' என்று கடுஞ்சீற்றத்துடன் கூறினார்.

அவருடைய கடுஞ் சொற்களைக் கேட்ட கன்னன் நடுநடுங்கி, எழுந்து அவரை வணங்கி, வாய்பேசாது, மதி மயங்கி நின்றான். அவனுடைய தோற்றத்தால் அவன் பிராமணனல்ல னென்பதை அறிந்த அவர் கன்னனை எரியெழ நோக்கி, 'ஏ! பாதகா! என்னை இவ்வாறு கபடஞ் செய்து என்னுடைய விற்றொழிலைக் கற்றுக் கொண்டாய். வேதியர் தவிர ஏனையோருக்குக் கற்பிப்பதில்லை யென்னும் என்னுடைய சபதத்தைப் பங்கப்படுத்தினை! அதனால், நீ

என்னிடம் கற்றவை யாவும் உனக்கு வேண்டிய தருணத்தில் பயன்படா தொழிக' எனக்கூறித் தம்மைவிட்டுச் செல்லும்படி கட்டளை யிட்டார்.

கன்னனும் மணியை யிழந்த நாகமேபோல் மனம் நைந்துருகினான். அவ்வளவு கொடிய சாபம் அநியாயமாகத் தனக்குக் கொடுத்த பரசுராமனை வெறுத்துத் தன்னிருப்பிடத்தை யடைந்தான்.

திரிதராட்டிரனுக்குக் காந்தாரியினிடம் நூறு புதல்வர்கள் பிறந்தனர். அவர்களில் மூத்தவன் துரியோதனன் எனப் பெயரிடப்பட்டான். அவன் பொறாமை மிக்கவன். அவன் பாண்டவர்களின் மீது இயற்கையிலேயே வெறுப்புக் கொண்டவன். அவர்களில் முக்கியமாக வீமனை அவன் அதிகமாகப் பகைத்து வந்தனன். பல சூழ்ச்சிகளைச் செய்து அவனைக் கொல்லத் துரியோதனன் முயன்றான். ஆனால், வீமன் அவைகளினின்றுந் தப்பினான். ஆகையால், பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் பகைமை இளமையிலிருந்தே முதிர்ச்சி யடைய வாரம்பித்தது.

அவர்களிருவருக்கும் குருவா யிருந்தவர் துரோணாசாரியார் என்பவர். அவர் மூலமாகப் பாண்டவரும், கௌரவரும் வில்வித்தை முதலிய படைக்கலப் பயிற்சிகளைக் கற்றுணர்ந்தனர். எவ்வகையிலும் பாண்டவர்களே சிறப்புற்று விளங்கினர். அருச்சுனன் வில்வித்தையில் கைதேர்ந்து யாவரினும் மேம்பட்டு விளங்கினான்.

ஒருநாள் கன்னன் தன் இல்லத்தை விட்டு அரச வீதி வழியே சென்றுகொண் டிருந்தான். அப்போது அரண்மனையின் உப்பரிகையில் உலாவி நின்ற துரியோதனன் கன்னனை நோக்கி, அவனுடைய வனப்புக்கும், வீரத் தோற்றத்

திற்கும் வியந்தான். உடனே ஏவலாளர் மூலமாகக் கன்னனை அழைப்பித்து அவனோடு நட்புக் கொண்டான். அவனுடைய தம்பிமாரும் ஏனையோரும் கன்னன்மீது அன்பு கொண்டனர். அது முதல் அரண்மனையில் துரியோதனனுடன் கன்னன் யாதொரு கவலையுமின்றி இனிது வாழ்ந்திருந்தான்.

சிலநாட்கள் சென்ற பிறகு, அரசிளங்குமாரர்களின் கல்வித்திறத்தை அனைவர்க்கும் விளம்பரப்படுத்தித் துரோணர் அரங்கேற்றம் செய்ய விரும்பினார். உடனே அரசன் கட்டளைப்படி விசாலமானதோர் பந்தர் இடப்பட்டது. புறநாட்டு மன்னரும் குறித்த நாளில் அத்தினபுரியை யடைந்து பந்தரில் குழுமினர். குடி மக்களும் நல்லுடை அணிந்து அரசிளங் குமாரர்களின் அரிய செயல்களைக் கண்டு களிக்க வந்திருந்தனர். வீடுமர், திருதராட்டிரன், விதுரன் முதலியோர் தத்தம் ஆசனங்களிற் றங்கியிருந்தனர். அப் பந்தரின் நடுவிலிருந்த விசாலமான வெற்றிடத்தில் பாண்டவரும், கௌரவரும் நின்று துரோணருடைய கட்டளைப்படி தங்களுடைய கல்வித் திறமையைக் காட்டினர். தனித்தனியே தத்தம் திறமையைக் காட்டிப் பின்னர் அவர்கள் ஒருவரை யொருவர் எதிர்த்துப் போலிப் போர் புரிந்தனர். அச் சமயத்தில் பொறாமை மிக்க துரியோதனன் வீமனைக் கொல்வதற்கு அதுவே தக்க சமயமெனத் துணிந்து வீமனை வேகத்துடன் தாக்கத் தொடங்கினான். அவனது உள்ளக் கருத்தை யுணர்ந்த வீமனும் கொடும் போர் செய்யத் துணிந்தான். உடனே போலிப்போர் உண்மைப் போராகி அவர்களிருவரும் மதங்கொண்ட யானைகளைப்போலச் சண்டை யிட்டனர். அதை யறிந்த அங்குள்ளோர் அவர்களிருவரையும் சமாதானப்படுத்தி விலக்கினர். பின்னர், அருச்சுனன் தன்னுடைய வில்லைக்கொண்டு பல அதிசயச் செய்கைகளைச்

செய்தான். அவனுடைய திறமையைக் கண்டாரனைவரும் அவனைப் பெரிதும் புகழ்ந்தனர்.

அப்பொழுது அங்கிருந்த கன்னன் சிற்றத்துடன் சபையோரை நோக்கி, 'மன்னர்களே, சான்றோர்களே! மிகச் சாதாரண செயல்களை இயற்றிய அருச்சுனனை மிகவும் புகழ்ந்து பேசினீர்கள். இதோ பாருங்கள்! என்னுடைய திறமையையும்' என்று கூறினான்.

உடனே அவன் தன் வில்லை வளைத்து நாணேறிட்டுக் கண்டோர் அதிசயிக்கும் வண்ணம் பலவீரச்செயல்களை யியற்றினான். அவைகளைக் கண்ட அனைவரும் அருச்சுனனைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகக் கன்னனை வியந்தனர். கன்னனுடைய உண்மைத் தோழனான துரியோதனன் மட்டிலா மகிழ்ச்சி யடைந்தான்.

பின்னர்க் கன்னன் அருச்சுனனைப் பார்த்து, 'ஏ அருச்சுனா! நீயும் நானும் சிறிதுநேரம் விற்போர் நடத்தலாம். இக் கூட்டத்தாரும் கண்டு களிப்படைவார்கள், எழுந்திரு' என்று போருக் கழைத்தான்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட அருச்சுனன், 'ஏ கன்னா! நான் உன்னோடு போர்புரியச் சற்றும் அஞ்சேன். ஆனால், நீ எங்களுடைய தேர்ப்பாகனுடைய மகன். அரசகுலத்துதித்த நான் உன்னோடு போர்புரிதல் இழிவாகும். இருந்தாலும் நீயே கைதேர்ந்த வில்லாளியென் பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை!" என்று பதிலுரைத்தான்.

அதைக் கேட்ட கன்னன் கண்களில் கனலெழ நோக்கி, 'அடா அருச்சுனா! அறிவற்றவனைப்போல ஏதேதோசொல்லுகின்றனையே! சுத்தவீரர் எக் குலத்தில் உதித்தாலும் அவர்கள் மேம்பாடுடையவர்களே. சீரிய ஒழுக்கமும், நற்

குண நற்செய்கைகளும் வாய்ந்தவர்களே சிறந்தோராகப் பல்லோராலும் போற்றப்படுவர். இதனை அறியாது என்னை இகழ்ந்து பேசினை. இக்கணமே ஒரு கணையால் உன் தலையைக் கொய்து விடுகின்றேன் பார்' என்று கூறினான்.

அக் கடுமொழிகளைக் கேட்ட அருச்சுனன் சினந்தெழுந்து, 'அடா கன்ன! நீயா என் தலையைக் கொய்பவன். அதுவரையில் நான் உன்னை வாளா விட்டிருந்தாலன்றோ!' என்று கூறித் தன் வில்லிற் கணை தொடுத்தான்.

உடனே கன்னனும் சிங்கமெனக் குதித்தெழுந்தான். அப்போது அங்கிருந்தவர்கள் அவர்களை ஒருவாறு சமாதானப்படுத்தினர். வீடுமர் கன்னன்மீதே குற்றத்தைச் சுமத்தி அவன் அரசகுமாரர்களின் அரங்கேற்றத்தில் வந்து கலந்து கொண்டது தவறென்றும், அரசகுமாரனை அருச்சுனனை வலிய போருக்கழைத்தது பொருந்தாத விஷயமென்றும் கூறினார். சபையோரும் கன்னன் செய்தது தவறென்று ஒருமனமாகக் கூறினர்.

அவற்றை யெல்லாம் கேட்ட கன்னன் மனவாட்டமடைந்து வாளா விருந்தனன்.

அப்போது துரியோதனன் எழுந்து, 'உயர்ந்தகுலம் தாழ்ந்தகுலம் என்று கூறுவது தகாது. ஒருவரை அவருடைய நற்குண நற்செய்கைகளைப் பற்றியே நாம் புகழ்கின்றோமே யொழிய அவர்களுடைய உயர்குலத்தைப் பற்றி மெச்சிப் பேசுவதில்லை. வீரம், கல்வி, கொடை, பொறை முதலிய சீரிய குணங்கள் செறிந்தோர் எக் குலத்தோராயினும் ஏனையோரைக் காட்டிலும் உயர்ந்தோரே யாவர். சேற்றில் முளைத்த தாமரை கடவுளுக்கு விருப்பாவது யாவரும் அறிந்ததே! ஆதலின், குலத்தினும் குணமே சாலச்சிறந்தது. இவ்வாறு நியாயத்தை விடுத்து ஒருதலை

யாகப் பேசுதல் அடாது. மேலும், என் இன்னுயிரனைய கன்னனை இனி யொருவர் மறுபடியும் இகழ்ந்துரையாடா வண்ணம், இன்றே அங்கதேச மன்னனுக்குகின்றேன்' என்று மொழிந்தான். அவனுடைய நற்செய்கையைக் கண்ட பலர் அவனைப் புகழ்ந்துரைத்தனர்.

கன்னனும் அங்கநாட்டரசனாகி மந்திரிமார் புடைசூழச் செவ்வனே அரசு புரிந்து வந்தான். அத்தகைய பெரும் பேற்றைத் தனக்கு அன்புடன் அருளிய அரவக்கொடி யோன்பால் கன்னன் பேரன்பு பூண்டொழுகினான்.

அப்படியிருக்கும் நாளில் ஒரு நாள் கன்னன் நால் வகைச் சேனைகள் புடைசூழ வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். பொற்றேர்மீது செல்லும் கன்னனைக் கண்ட குடிமக்கள் அவனை வணங்கி வாழ்த்தினர். அச் சமயம் இடிபோல் ஒலிக்கும் பல்வகை வாத்தியங்களின் ஓசையைக் கேட்ட ஓரிளம் பசுக்கன்று மருண்டோடி, கன்னன் தேர்க் காலிற் சிக்குண்டது. கன்னன் திடீரெனக் கீழேகுதித்து அக் கன்றை அப்புறப்படுத்தி அதை உயிர்ப்பிக்க முயன்றான். அந்தோ! அவனுடைய நன் முயற்சிக ளெல்லாம் வீணாயின! அவனும், அக் கொடிய செய்கைக்கு வருந்தி, கண்ணீர் மல்கி நின்றான்.

அத்தருணம் அக் கன்றை வளர்த்துவந்த அருந்தவ முனிவர் ஒருவர் தம்முடைய கன்றைத் தேடி அவ்விடம் வந்து நடந்தவற்றை உணர்ந்து அளவற்ற கோபங் கொண்டார்.

வாடிய முகத்துடன் நின்ற கன்னனுடைய குணத்தை யும் பொருட்படுத்தாது அவர் அவனை நோக்கி, 'அடா பாதகா! என் உயிரனைய இளங்கன்றை இவ்வாறு

வதைத்தனையே! நீதிநெறி வழாது செங்கோலோச்சுங் கடமை பூண்ட ஒரு மன்னன் இத்தகைய செய்கையை யியற்றுவது அடுக்குமா? ஆதலின், உன் தேர் இன்று என் கன்றின் உடலிற் பதிந்ததால், போர்க்களத்தில் உன்னுடைய தேர் மண்ணிற் பதிந்து, நீயும் பகைவர்களின் படைக்கலங்களால் அடியுண்டு வருந்துவாயாக' என்று கொடுஞ் சாபங்கொடுத்தார்.

அம் முனிவருடைய சாபத்தைச் செவியிலேற்றலும், அருளுடைய கன்னன் இடியொலி கேட்ட நாகமென நடுங்கி, 'மாதவத்தீர்! இக்கொடிய செய்கைக்கு நான் மனமார வருந்துகின்றேன். மேலும் நான் இச் செய்கையை வேண்டுமென்றியற்றவில்லை. ஆதலின், இப் பிழை என்பால் எப்படிச் சாரும்? இக் கன்றுக்குப் பதிலாகப் பல பசு நிரைகளையும், இன்னும் வேண்டுவனவற்றையும் நான் தங்களுக்கு அளிக்கின்றேன். தயைகூர்ந்து ஏற்றுக்கொண்டு இச் சாப மொழியைத் தவிர்க்கவேண்டும்' என்று கூறினான்.

அம் மாதவர் சற்றும் இரங்காது, 'நீ கொடுக்கும் பல பொருள்களும் என்னுடைய ஒரு கன்றுக்கிணையாகுமா? உன்னுடைய செல்வத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. என்னுடைய சாபத்தையும் நான் தவிர்க்க முடியாது. நீ அதை அனுபவித்தே தீரவேண்டும்' என்று கூறிச் சென்றார்.

அதனால், மன்னன் மனமுளைந்து பலவாறு வருந்தித் தன் அரண்மனையை யடைந்தான்.

சில வருடங்கள் கழிந்தபிறகு இராஜகிருகம் என்னும் நகரத்தை அரசாண்டுவந்த மன்னனுடைய மகள் சுவர்ண ரேகைக்குச் சுயம்வரம் என விவாக அழைப்போலை கன்ன

னுக்கு வந்தது. கன்னனும் ஏனைய அரசர்களைப்போலச் சுயம்வரத்திற்குச் சென்றான். குறிப்பிட்ட நேரம் நெருங்கியதும் சுவர்ணரேகை தாதியர் புடைசூழச் சுயம்வர மண்டபத்தை யடைந்தாள். பொன்னைபோன்று பொலியும் அவளைக்கண்ட ஒவ்வொருவரும், அவள் தம்மையே மாலையிடக் கூடுமென்று எதிர்பார்த்து வீற்றிருந்தனர். சுவர்ணரேகையோ பலருடைய வரலாற்றினையும் தாதியர் சொல்லக் கேட்டுணர்ந்து கன்னனை நெருங்கி அவனுடைய நற்குணங்களைக் கேட்டு அவனுக்கே மாலையிட்டாள்.

அச் சமயம், கன்னன் தேர்ப்பாகனுடைய புதல்வனெனச் சுவர்ணரேகையின் தந்தை யறிந்து, மிகவும் வருந்தினான். அங்ஙனம் வருந்தியும் சுவர்ணரேகை கன்னனையே மணக்க நிச்சயித்தாள்.

பின்னர்க் கன்னனுக்கும் சுவர்ணரேகைக்கும் அங்க நாட்டில் திருமணம் சிறப்பாய் நடந்தேறியது. துரியோதனனே அந்நியநாட்டரசர்களை வரவேற்று உபசரித்தான். துரியோதனன் தன்பால் காட்டும் அளவற்ற அன்புக்குக் கன்னன் பேருவகை யெய்தி அவனைப் பலவாறு புகழ்ந்துரைத்தான்.

நாள் பல சென்றபிறகு கன்னனுக்குச் சுவர்ணரேகையினிடம் இருமக்கள் பிறந்தனர். அவர்களிருவரும் தம் தந்தையைப்போல் பெருங் குணத்தராய் விளங்கினர். சுவர்ணரேகையும் மட்டற்ற அன்போடு கன்னனை நேசித்துக் காலங் கடத்தி வந்தாள்.

## 3. இந்திரனும், கன்னனும்

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இளமையிலேயே உண்டான பகைமை நாளடைவில் அதிகரித்தது. அதை நன்கறிந்த வீடுமர் திருதராட்டிரன் முதலியோர் அவ்விருவருக்குள்ளும் சமாதானம் நிலைபெற்றிருக்க வெகு பாடுபட்டனர். ஆனால், அவர்களுடைய முயற்சிகள் எல்லாம் பயன்படா தொழிந்தன. கடைசியாக அவர்கள் நாட்டை இருபிரிவாகப் பிரித்து அவர்களுக்குக் கொடுத்தனர். அவர்களும் தத்தம் அரசுரிமையை வகித்து அரசாண்டு வந்தனர்.

சிலநாட்கள் சென்ற பிறகு, பாண்டவர்களில் மூத்தவரான தருமர், தம் பிதா நற்கதி யடையும்பொருட்டும், தம்முடைய கீர்த்தி பரவும் பொருட்டும், இராஜசூய யாகம் ஒன்று நடத்த விரும்பினார். அவருடைய கட்டளையின் படியே, அவருடைய தம்பிமார் நால்வரும், நாற்றிசைகளிலும் சென்று எதிர்த்த அரசர்களை வென்று அவர்களிடமிருந்து ஏராளமான திரவியத்தைக் கப்பமாக வாங்கிவந்தனர். அவைகளைக் கொண்டு தருமர் இராஜசூய யாகத்தைச் செவ்வனே செய்து முடித்தார். யாகத்திற்கு வந்திருந்த அரசர்களனைவரும் தருமரைப் புகழ்ந்தனர்.

அப்போது அங்கிருந்த துரியோதனன் தருமருடைய கீர்த்தியையும் செல்வப் பெருக்கையும் கண்ணுற்று அழுக்காறு கொண்டான். பொறாமை மலிந்த அவன் எவ்வகையிலேனும் தருமருக்குக் கேடு செய்ய எண்ணங் கொண்டான். ஆதலால், அவன் தன்னோடு சேர்ந்திருந்த தன் மாமன் சகுனியோடும், தன் தகப்பன் திருதராட்டிரனோடும் தான் எண்ணிய விஷயத்தைப்பற்றிக் கலந்து ஆலோசித்

தான். முடிவாகப் பாண்டவர்களைச் சூதாட்டத்தில் தான் வென்றுவிடுவதாகச் சகுனி உறுதிமொழி கூறினன்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட கன்னன், துரியோதனனை நோக்கி, 'என் இன்னுயிர் நண்ப! நீதிநெறி கடந்து நாம் பாண்டவரைச் சூதில் வெல்ல முயல்வது தவருகும். உலகத்தாரின் இழுக்குரைக்கு நாம் ஆளாக வேண்டா. அவர்களைவரையும் நானே என்னுடைய அம்பால் வென்று உன்னை அரசர்க்கரசனுக்குவேன். ஆகையால், அவர்கள்மீது போருக்கெழுதலே உத்தமம்' என்று வீர வார்த்தை கூறினன்.

ஆனல், துரியோதனனும் அங்கிருந்த அவனுடைய தம்பியரும் கன்னனுடைய மொழிகளைச் செவியிலேற்றுக் கொள்ளவில்லை. முடிவில் துரியோதனன் சகுனி சொற் படி பாண்டவர்களைச் சூதில் வெல்லவே முடிவு செய்தான். உடனே அவன் தன் தகப்பனர் மூலமாகப் பாண்டவர் களுக்கு ஒரு கடிதமெழுதி, அவர்களைத் தன்னுட்டில் தான் கட்டி முடித்த ஓர் அழகிய மாளிகையைக் காணும் பொருட்டு அழைத்தான். துரியோதனனுடைய சூழ்ச்சி களை விதுரர் தருமருக்கு எடுத்துரைத்தார். ஆயினும், தருமர் திருதராட்டிரன் விருப்பத்தின்படி செய்வதே நன்மை யெனத் தீர்மானித்தார். பிறகு, அவர் தம்பியரோடும், மனைவியோடும், நால்வகைச் சேனைகளோடும் துரியோதனன் அரண்மனையை யடைந்தார். துரியோதனன் அவர்களை உபசரித்து வரவேற்றான். சிறிதுநேரங் கழித்துச் சகுனி தருமரைக் காலப்போக்கின் நிமித்தம் சொக்கட்டான் ஆட அழைத்தான். முதலில் அவர் மறுத்து முடிவில் ஒப்புக் கொண்டார். சூதாட்டத்தில் கைதேர்ந்த சகுனி யென்பவன் அவரை முற்றிலும் தோற்கடித்தான். பந்தயமாகத் தருமர் தம் நாடு நகரங்களையும், நிதிக்குவியலையும் வைத்

துத் தோற்றார். தம் தம்பியரையும், மனைவியையும், தம்மையுங் அவர் தோற்றார். வெற்றி பெற்ற துரியோதனன் அவர்களை மிக்க இழிவு படுத்தினான். அதைக்கண்ட பாண்டவர்களில் தருமர் தவிர ஏனையோர் கடுங் கோபங்கொண்டு கடுஞ் சபதம் செய்தனர். தருமர் அவர்களைச் சமாதானப் படுத்தினார்.

பிறகு, அங்கிருந்த பெரியோர்களுடைய நிபந்தனையின் படி, பாண்டவர்கள் பன்னிரண்டு வருடம் வனவாசஞ் செய்து பிறகு ஒரு வருடம் ஒருவரும் அறியாவண்ணம் மறைந்திருக்க ஒப்புக்கொண்டனர். அவர்கள் திரும்பி வந்ததும் அவர்களுடைய அரசுரிமை திருப்பிக் கொடுக்கப்படுமென்றும் உறுதி பெற்றனர். பாண்டவர்களும் அந்நிபந்தனைகளுக்கியைந்து மறுபடியும் சூதாடித் தங்களையும் துரோபதையையும் மீட்டுக்கொண்டு வனமேகினர். அவர்கள் பல துன்பங்களை அனுபவித்துப் பன்னிரண்டு வருடங்களைக் காட்டில் போக்கி, ஒரு வருடம் வரையில் விராட நகரத்தில் உருமாறி வசித்திருந்தனர். அப்போது அவர்களைக் கண்டு பிடிக்கத் துரியோதனன் எவ்வளவோ முயன்றான். அவனுடைய எண்ணம் ஈடேறவில்லை. முடிவில் பாண்டவர் பதினான்காம் வருடத் தொடக்கத்தில் தத்தம் உண்மைப் பெயரோடு வெளிப்போந்தனர்.

பின்னர், தருமர் தம்முடைய அரசுரிமையைப் பெற விரும்பித் துரியோதனனிடம் உலூக முனிவரையும், பிறகு கண்ணபிரானையும் தூதனுப்பினார். கெடுமதி நிறைந்த துரியோதனன் பாண்டவருக்கு ஒரில்லமும் கொடேனென்று மறுத்துவிட்டான். தம் நாட்டைப் பெறுதற்குத் தருமர் போர்புரிந்தே தீரவேண்டுமென் றுணர்ந்த கண்ணபிரான், தேவேந்திரனை மனத்தில் நினைத்தார். தேவர் கோமானும் அவரை நண்ணினான்.

உடனே கண்ணபிரான் அவனை நோக்கி, 'அமரர்க் கிறைவ! பாண்டவர்களுக்குரிய நாட்டைத் திருப்பிக் கொடுக்கத் துரியோதனன் மறுத்துவிட்டான். அதனால், போர் மூள்வது நிச்சயம் என்று தெரிகின்றது. போர் மூண்டால், அப்போது கன்னன் துரியோதனன் பக்கமாயிருந்து பாண்டவரை எதிர்ப்பான். சுத்தவீரனான அவனை வெல்லுதல் எவருக்கும் இயலாத காரியம். மேலும், அவனுடன் பிறந்த கவசகுண்டலங்களை அவன் அணிந்திருக்கும் வரையில் அவனை ஒருவராலும் வெல்லமுடியாது. ஆனால், அருச்சுனன் கன்னனைக் கொல்லுவதாகச் சபதம் செய்திருக்கின்றான். நீ உன் மைந்தனாகிய அருச்சுனனுடைய நன்மையைக் கருதினால் ஒரு காரியம் செய்யவேண்டும். கன்னன் மிக்க கொடையாளி. யாவராயினும் சரியே! அவர்கள் விரும்பும் எப்பொருளையும் அவன் மனச்சலிப்பின்றி அளிக்கும் கடப்பாடுடையவன். மறையவரும், மாதவத்தவரும், பிணியாளரும், வறியவரும், புலவர்களும் கன்னனை நாடிச் செல்கின்றனர். அவனும் அவர்களைக் களிப்புறச் செய்கின்றான். ஆதலால், நீ ஒரு மறையவன் வேடம் பூண்டு அவனை நண்ணி அவனிடமிருக்கும் கவசகுண்டலங்களைத் தானமாகக் கேட்டு வாங்கிவரல்வேண்டும். அப்படிச் செய்தால்தான் அருச்சுனன் பிழைப்பான்; பிறகு, அவனைச் சேர்ந்த மற்றவர்களும், தத்தம் சபதத்தை நிறைவேற்றி வெற்றி பெறுவர்' என்று கூறினார்.

இந்திரனும், சம்மதித்து, ஒரு கிழப்பிராமண வடிவங் கொண்டான். வயதின் முதிர்ச்சியால் வளைந்த முதுகும், தளர்ந்த உடலும் வாய்ந்த அவ் வேதியன் தடியூன்றித் தள்ளாடிக் கன்னனது அரண்மனையை அடைந்தான்.

அவ் விருத்தாப்பிய வேதியரைக் கண்ட கன்னன் களிப்புடன் அவரை எதிர்கொண் டழைத்துவந்து ஓர் ஆசனத்தி

விருத்தி, 'மாதவத்தீர்! தங்கள் வருகையால் என் இல்லம் தூய்மை யடைந்தது. தாங்கள் என்னை நாடிவந்தது என்னுடைய நல்வினைப் பயனேயாம். தாங்கள் எதை உத்தேசித்து வந்தீர்களோ அதைத் தெரிவித்தால், தடையின்றிக் கொடுக்கச் சித்தமாயிருக்கின்றேன்' என்று மலர்ந்த முகத்துடன் உரைத்தான்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட அம் மறையவன், 'கன்னு! நான் விரும்பியவற்றை நீ யளிக்கவல்லையோ! நீ அவ்வாறு அளிப்பதாக வாக்களித்தால் உன்னிடம் நான் விரும்புவதைச் சொல்லுகின்றேன்' என்று கூறினன்.

உடனே கன்னன், 'ஐயன்மீர்! தாங்கள் எதற்கும் சந்தேகப்படவேண்டா. என்னிடமுள்ள எப்பொருளைக் கேட்டாலும் சரியே! என் உயிரையே பரிசாக விரும்பினும் சரிதான்! நான் அளிக்கவல்லேன். தயைகூர்ந்து தங்கள் விருப்பத்தைச் சொல்லுங்கள்' என்று கூறினன்.

அவ்வுரைகளைக்கேட்ட அவ் வேதியன் அவனை நோக்கி, 'கன்னு! நான் திரண்ட செல்வத்தை நாடி உன்னிடம் வரவில்லை. நீ யணிந்துள்ள கவச குண்டலங்களைப் பெற விரும்பியே நான் இங்கு வந்துள்ளேன். ஆதலின், நீ எனக்கு வாக்களித்தவாறே அவைகளை எனக்குக் கொடு' என்று கேட்டான்.

அச் சமயம், 'ஓ கன்னு! சாக்கிரதை! உன்னிடம் தானங் கேட்பவன் சாதாரண வேதியனல்லன். அவன் தேவேந்திரன்! கண்ணபிரானது கட்டளைப்படி அவன் உன்னிடம் வந்துள்ளான். மோசம் போகாதே' என்று ஓர் அசரீரி வாக்கு உண்டாயது.

அதைக் கேட்ட கன்னன் மயங்காமல் தன்னுடன் பிறந்த கவச குண்டலங்களை வாள் கொண்டு அறுத்துப் பிரித்தெடுத்து அம் முதியவரிடம் கொடுத்தான். அவற்

றைப் பிரித்தெடுத்தமையால் அவனுக்குண்டான துன்பத்தையும் அவன் பொருட்படுத்தவில்லை. அவன் உடல் முழுவதும் இரத்தம் ஒழுக ஆரம்பித்தது. அவனுடைய வள்ளற்றன்மை இத்தகையது என்று எவரால் உரைக்க முடியும்? தன் உயிரினு மினிய அவைகளை அவன் ஒருவித மனச்சோர்வு மின்றி நல்கினன். அவனுடைய அரிய செயலைக் கண்ட தேவர்கள் அவனைப் பலவாறு புகழ்ந்தனர்.

கன்னன் அன்புடன் அளித்த கவச குண்டலங்களைப் பெற்ற அமரர்க்கிறைவன் தன் உண்மை வடிவந் தோன்ற நின்று, 'கொடை வள்ளால்! பெருமை வாய்ந்த உன்னுடைய செய்கையே அளவிடற்கரியது. நிற் போன்ற வள்ளல்கள் ஒருவருமிரார். நீ எனக்கு அளித்த கவச குண்டலங்களுக்கு ஈடாக இவ் வேலாயுதத்தைப் பெற்றுக் கொள். வன்மை மிக்க இவ் வேலினை நீ எவர்மீது எறிந்தாலும், இஃது அவர்களைக் கொல்லும். ஆனால், இவ் வெற்றி வாய்ந்த வேலாயுதத்தை நீ ஒரே ஒரு முறைதான் உபயோகிக்க வேண்டும்' என்று கூறி ஒரு கூரிய வேலை யளித்தான். பின்னர்த் தன் திருக்கரத்தால் கன்னனுடைய உடலத்தை ஒரு முறை தடவினன். அவ்வளவே! அவனுடைய தேகத்திலிருந்து பெருகிய உதிரம் நின்றது. புடமிடப்பட்ட பைம்பொன்போல அவன் தேகம் பிரகாசித்தது. முன்னிலும் பதின்மடங்கு வலி மிகுந்து அவன் விளங்கினன்.

தன் காரியத்தில் சித்திபெற்ற தேவேந்திரன் கன்னனை விட்டகன்று கண்ணபிரானை யடைந்தான். நடந்தவற்றை யறிந்த கண்ணபிரான் கன்னனது பெருங் குணத்தினையும் கொடையையும் பெரிதும் புகழ்ந்தார்.

பின்னர், அவர் குந்தி தேவி வசித்திருந்த மாளிகையை யடைந்தார்.

அவரைக் கண்டதும் குந்தி தேவி நகைமுகங் காட்டி வரவேற்றாள். பின்பு, பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் நடக்க விருக்கும் பெரும் போரைப்பற்றிக் கண்ண பிரான் அவளிடம் கூறினார். அதைக் கேட்ட குந்திதேவி பலவாறு வருந்தினாள்.

அப்போது கண்ணபிரான் அவளைத் தேற்றி, 'அம்மணீ! வருத்தப்படுவதில் பிரயோசனம் ஒன்றுமில்லை. இனிப் போர் மூள்வது நிச்சயம். கொடுங்குணம் வாய்ந்த துரியோதனன் நீதி வழங்கமாட்டான். நீர் உம்முடைய இளமைப் பருவத்தில் துர்வாச முனிவருக்குத் தொண்டு செய்தீரல்லவா! அதற்குப் பலனாக அவர் உமக்கு ஐந்து மந்திரங்களை உபதேசித்துச் சென்றார். பின்னர், ஒருநாள் சூரிய மந்திரத்தை உச்சரித்து ஓர் ஆண் மகனை ஈன்று பேழையிலிட்டுக் கங்கையில் விட்டீர். அம் மகனே துரியோதனனுடன் நட்புக்கொண்டிருக்கும் கன்னனென்பவன். கன்னனோ திறமை மிக்கவன்; சிறந்த வீரன். அவனைப்பெற்றவர் நீரேயென்றும், அருச்சுனனே தன் தம்பி யென்றும் அவன் அறியான். அக் கன்னனுடைய கை அம்பே நாளைப் போரில் அருச்சுனனைக் கொல்லும். கன்னனும் துரியோதனனுக்குப் பக்க பலமாயிருக்கின்றான். ஆதலால், நீர் இப்போதே அவனிடம் சென்று உண்மையை விளங்கச் சொல்லிப் பாண்டவர் பக்கல் சேர்ந்துகொள்ளும்படி அவனை வற்புறுத்தும். அவன் அப்படிச் செய்யமறுத்தால், அவனிடமிருந்து இரண்டு வரங்களைப் பெற்றுவாரும். அருச்சுனனைக் கொல்வதற்காக அரவக்கணை யொன்றை அவன் வைத்திருக்கின்றான். அக் கணையை அவன் அருச்சுனன்மீது ஒரு முறைக்கு மேல் மறுமுறை விட்டால் அருச்சுனன் தப்புவது அரிது. ஆனால், அவன் ஒருமுறை அக் கணையை எய்தால் நான் எவ்வாறாயினும் தடுத்துவிடுவேன். ஆகையால், முதலா

வது, அவன் அருச்சுனன்மீது அந் நாகாஸ்திரத்தை ஒரு முறைக்குமேல் விடாதிருக்கும்படி ஒரு வரத்தைக் கேட்டுக் கொள்ளும். இரண்டாவது, அருச்சுனன் தவிர மற்ற நால்வர்மீதும் அவன் தன் முழு வன்மையையும் காட்டிப் போர் புரியக் கூடாதென்பதே யாகும். காலந் தாழ்த்தாது இவ்விரண்டு வரங்களையும் பெற்றுவாரும்' என்று கூறினார்.

இவ் வார்த்தைகளைக்கேட்ட குந்திதேவி மனம் வருந்தினாள். அவள் இருதலைக்கொள்ளி எறும்புபோலானாள். நாகாஸ்திரத்தைக் கன்னன் ஒரு முறைக்குமேல் விடாது தடுத்தால் கன்னன் மடிவான். அவன் மறுமுறை எய்தால் அருச்சுனன் உயிர் இழப்பான். ஒன்றுந் தோன்றாது அனலிடைப்பட்ட மெழுகென அவள் வாடினாள். கண்ணபிரான் அவளைப் பலவாறு தேற்றினார். ஒரு முறைக்கு மேல் நாகாஸ்திரம் விடாதிருந்தால் கன்னன் ஒருவனை மடிவானென்றும், அவன் மறுமுறை அக் கணையைத் தொடுத்தால், அருச்சுனன் மாள்வதுந் தவிர அவனுடைய பிரிவாற்றாது மற்ற நால்வரும் உயிர் துறப்பரென்றும் கண்ணபிரான் கூறினார்.

அவைகளையெல்லாம கேட்ட குந்திதேவி மனம் ஒருவாறு தேறினாள். பிறகு, கன்னனிடத்துச் செல்லத் துணிந்து அவன் வசித்திருந்த அரண்மனையை யடைந்தாள்.

## 4. குந்தியும் அவள் மைந்தனும்

கன்னனது அரண்மனையை யணுகிய குந்திதேவி காவலாளர் மூலமாகத் தன்னுடைய வருகையைக் கன்னனுக்குத் தெரிவித்தாள். தான் எதிர்பாராத அவளுடைய வருகைக்கு வியந்து கன்னன் அவளை அழைப்பித்து உபசரித்தான்.

பிறகு, அவன் அவளை நோக்கி, 'என தன்னை யளைய வன்றாய்! சீருஞ் சிறப்பும்பெற்ற பாண்டவர்களின் தாயாகிய தாங்கள் என்னை நாடி இவ்வளவு தூரம் வரக்காரண மென்ன? தங்கள் வருகையால் எனதில்லம் தூய்மை பெற்றது' என்று பலவாறு புகழ்ந்தான்.

அவனுடைய போழகும், இனிய மொழிகளும் குந்தி தேவியினுடைய துன்பத்தை அதிகமாக்கின. தன் அருமைத் திருக்குமரனை அதுவரையில் தான் காணுதொழிந்ததற்கு அவள் பெரிதும் வாடினாள். துக்கமேலீட்டால் அவள் உடலம் வியர்க்க, கண்ணீர் பெருக்கெடுத்தோட, அவள் சித்திரம்போல நின்றாள்.

அவளுடைய கொடுந்துயரத்தைக் கண்ணுற்ற வள்ளற் றன்மை மிக்க கன்னன் மிகவும் இரங்கி அவளைப் பலவாறு தேற்றினான்.

பின்னர், அவன் அவளை நோக்கி, 'அன்புடையீர்! தாங்கள் இவ்வாறு வருந்துதல் எதற்காக? சுத்த வீரர்களான பாண்டவரை ஈன்ற தங்களுக்கு இத்தகைய துன்பம் வந்தெய்திய காரணம் யாதோ? மேலும், எதை விரும்பி என்னை நாடி வந்தீர்கள்? காலந் தாழ்த்தாது அதனைத் தெரிவித்தால் நான் இப்போதே அதைக் கொடுக்கின்றேன்' என்று கூறினான்.

அழுதமன்ன அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட குந்திதேவி, 'சீரியகுணச்செல்வ, நான் உன்னிடம் எவ்வாறு சொல்லுவது? இயற்கைக்கு மாறாக நடந்த என்னுடைய வரலாற்றை என்னென்று உன்னிடம் உரைப்பது? ஆயினும், இனிமேல் என்ன செய்வது? நான் சிறுமியா யிருந்தபோது துருவாச முனிவர் என் தகப்பனாருடைய அரண்மனையில் தங்கி அரியதொரு விரதத்தை அனுசரித்தார். அப்போது அவரிட்ட குற்றேவல்களை

நான் சிரமேற்கொண்டு செய்து முடித்தேன். அதனால், அவர் என்மீது அன்பு கூர்ந்து எனக்கு ஐந்து மந்திரங்களை உபதேசித்துச் சென்றார். பிறகு, ஒரு நாள் நான் கன்னிப் பருவமடைந்து உப்பரிகையில் உலவும்போது அம் மந்திரங்களைப்பற்றி நினைவு கொண்டேன். அவைகளின் பலனை உணரவெண்ணி ஒரு மந்திரத்தை உச்சரித்தேன். அப்போது அதற்கிறைவனான சூரியன் என் முன் தோன்றி ஒரு புதல்வனை அளித்தான். உலகத்தவரின் பழிச் சொல்லுக்கு அஞ்சிய நான் சூரியனுடைய கட்டளைப்படியே அப் பிள்ளையை ஒரு பேழையில் அடக்கம் செய்தேன். பிறகு, அப் பெட்டியைக் கங்கையில் விட்டுவிட்டேன். அப் பெட்டியைத் திருதராட்டிர மன்னனுடைய தேர்ப்பாகன் கண்டெடுத்துப் புதல்வனைச் சீராட்டி வளர்த்து அவனுக்குக் கன்னன் எனப் பெயரிட்டான். அவன்தான் நீ. கன்னா! நான் சொல்லும் வார்த்தைகள் யாவும் உண்மையே. இவ் விஷயத்தை இப்போதுதான் கண்ணபிரான் என்னிடம் கூறினார்' என்று மொழிந்தாள்.

இவ் வார்த்தைகளைக் கேட்டதும் கன்னன் குந்தியே தன் தாய் என்றுணர்ந்து பேருவகை பூத்தான். பெற்றோர் இன்னாரென அறியாது தான் வளர்ந்து வந்ததை நோக்கி அவன் பல சமயங்களில் வருந்தியிருந்தான். தானே பாண்டவர்களுடைய அண்ணன் என்று நினைக்க நினைக்க அவன் அளவிலா மகிழ்ச்சியடைந்தான்.

பிறகு, அவன் குந்தியைப் பார்த்து, 'அன்புடைய அன்னாய்! நான் தங்கள் மகன் என்பதை உணர்ந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். ஆனால், நான் என்னைப் பெற்றோர் இன்னார் என்று அறியாது வளருகின்றேன் என்பதையுணர்ந்த சில பெண்கள் என்னிடம் வந்து தாமே என்னைப் பெற்ற தாய்மார் எனக் கூறினர். உண்மையை

உணர நான், என்னோடு பேழையிலிடப்பட்டிருந்த ஆடையை எவர் உடுத்துக் கொள்ளுகின்றாரோ அவரே என்னுடைய உண்மைத் தாய் என்று கூறினேன். நான் விரும்பியபடி அவர்கள் அப் பெட்டியருகிற்சென்று உள்ளிருந்த ஆடையை எடுக்க முயன்றனர். அவர்கள் பொய் பேசினபடியால் அவ்வாடை பாம்பாக மாறிச் சீறியது. அதைக் கண்ட அவர்கள் பயந்தோடினர். என் விருப்பத்தைப் பூர்த்தி செய்யத் தாங்கள் அவ்வாடையை யெடுத்து உடுத்துக் கொள்ளுங்கள்' என்று கன்னன் கூறினான்.

அவன் வார்த்தைகளைக் கேட்ட குந்தியும் சம்மதித்து அப் பேழையை நெருங்கி அதனுள்ளிருந்த ஆடையை எடுத்தாள். அதை அணிந்து கொண்டாள். அதைக் கண்ட கன்னன் அவளுடைய பாதங்களில் விழுந்து தோத்திரித்தான். குந்தியும் தன்னுடைய புதல்வனைப் பரிவுடன் தழுவி முத்தமிட்டாள். அவர்கள் இருவரும் ஆனந்தக் கண்ணீர் விட்டு நின்றனர்.

பின்னர்க் கன்னன் அன்னையை நோக்கி, 'அம்மா! தாங்கள் என்னை நாடிவந்த விஷயத்தை என்னிடம் தெரிவிக்க வில்லையே! கண்ணபிரான் ஒரு காரியத்தை முன்னிட்டே தங்களை என்னிடம் அனுப்பி யிருக்கவேண்டும். அதைப்பற்றி எனக்கு விவரமாகச் சொல்லவேண்டும்' என்று கூறினான்.

அப்போது குந்தி, 'மைந்த! இன்றே கண்ணபிரான் என்னிடம் உண்மையை உரைத்தார். போர்முளும் தருணத்தில் இவ்வுண்மையைக் கூறியதால் ஒரு பயனும் உண்டாகாதே என்று நான் கூறினேன். தனக்கு இன்றைய தினந்தான் தெரியவந்தது என்று அவர் கூறினார். பின்னர், இவ்வுண்மைகளை உன்னிடம் உரைத்து உன்னைப் பாண்ட

வர்களோடு சேர்ந்துவிடுமாறு வற்புறுத்த என்னை அனுப்பினர். ஆதலால், மைந்த! நீ என்மீது கிருபைகூர்ந்து, கௌரவரை விட்டு நினது தப்பியருடன் சேர்ந்து கொள்வாயாக. இவ்வொன்றே எனக்குப் போதிய நிம்மதியளிக்கும். தடுத்துரையாட வேண்டா' என்று கூறினள்.

அவளுடைய வார்த்தைகளைக் கேட்ட கன்னன் அன்னையை நோக்கி, 'அன்னாய்! தாங்கள் நான் பிறந்தவுடன் பேழையில் அடக்கஞ்செய்து கங்கையில் விட்டுவிட்டீர்கள்! தற்செயலாக நான் தேர்ப்பாகனால் கண்டெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டேன். பின்னர், துரியோதனனோடு நட்புக் கொண்டேன். என்னிடம் அவன் உண்மை அன்பைச் செலுத்தி என் குலத்தைப்பற்றி விசாரியாமலே தன்னுடன் என்னை உண்ண வைத்தான். பின்னர் ஒருகால், அரங்கேற்று மண்டபத்தில் பலரும் என்மீது குற்றஞ் சாட்டிய போது, அவர்களெல்லோரும் நாணும்படி என்னை அக்கணமே அங்கநாட்டிற் கரசனாக்கி நால்வகைச் சேனைகளையும் நல்கினன். இன்னும் என்ன? என்மீது துரியோதனன் கரையற்ற அன்பு கொண்டிருக்கின்றான். என்னுடைய வீரத்தையும், புயபல வன்மையையும் ஆதாரமாகக் கொண்டே அவன் பாண்டவர்மீது போர்புரியத் துணிந்திருக்கிறான். இச் சமயத்தில் நான் அவனைத் தனியே விடுத்துப் பாண்டவரோடு சேர்ந்துகொள்ளுதல் நியாயமாகுமா? அவ்வாறு செய்வது நம்பினவரை நட்டாற்றில் விடுதல்போலாகும. மேலும், எனக்காக அவன் இயற்றிய உதவிக்கு நான் கைம்மாறு செய்யாமல் போவது நீதியாகுமா? "காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது" அன்றோ! ஆதலால் அவனுக்காகப் போர்புரிந்து நான் இறந்துபடவே துணிந்துள்ளேன்' எனப் புகன்றான்.

மறுவலும், அவன் தன் தாயை நோக்கி, 'துரியோதனன் துர்க்குணமிக்கவன் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். அவன் பொறாமை, அநீதி, வஞ்சனை முதலியவற்றின் உறைவிடமென நன்றாயறிவேன். ஆனால், அவ்விழிகுணங்களை முன்னிட்டு நான் அவனை இத்தருணத்தில் விட்டுப் பிரிய முடியாது. அவன் என்மீது காட்டும் அன்பிற்கு ஓர் எல்லையில்லை. ஒரு சமயம் தனிமையில் அவனுடைய மனைவி பானுமதியோடு நான் சொக்கட்டான் ஆடியிருந்தேன். ஆட்டம் முடிந்து அவள் தோற்கப் போகுஞ் சமயத்தில் அவள் சட்டென்று எழுந்தாள். அவள் எழுந்ததின் காரணத்தை உணராது அவளது ஆடையைப் பிடித்து ஆட்டத்தைப் பூர்த்திசெய்து போகும்படி கூறினேன். அச் சமயம் துரியோதனன் என் பின்னால் வந்து கொண்டிருந்தான். நான் காரணந் தெரியாது அவ்வாறு செய்தமைக்கு வருந்தினேன். துரியோதனனோ என் வருத்தத்தைப் போக்கி, தன் மனைவி ஆட்டத்தைப் பூர்த்திசெய்யாமல் சென்றது தவறே எனக் கூறினான். இத்தகைய அன்புவாய்ந்த அவனை நான் விட்டுப் பிரிதல் முடியாத காரியம். மேலும், நான் இப்போது துரியோதனனை விட்டு விலகினால் யாவரும் என்மீது பழியைச் சுமத்துவார்கள். என்னைப்பெற்ற தங்களுக்கும் அச் சொல் துன்பம் விளைவிக்கும். என்னுடைய தம்பியர்களாகிய பாண்டவர்களையும் அவ்வசைமொழி விடாது. பாண்டவர்களுக்குக் கண்ணபிரான் துணையிருக்கின்றார். அவருடைய உதவிபெற்ற பாண்டவர்களுக் கென்னதீங்கு நேரிடக் கூடும்? முடிவாகக் கண்ணபிரான் இன்னும் என்னிடம் என்ன கேட்கும்படி கூறினார்? அதையும் சொல்லுங்கள்' என்றான்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட குந்திதேவி, 'செல்வப் புதல்வ! அதனை எவ்வாறு நான் சொல்வேன். அதாவது

நீ பாண்டவரோடு சேர மறுத்தால் உன்னிடம் மீண்டும் இரண்டு வரங்களைக் கேட்டுவரச் சொன்னார். அருச்சுனன் மேல் நாகாஸ்திரத்தை ஒரு முறைக்குமேல் விடக்கூடா தென்றும், அருச்சுனன் தவிர ஏனையோர்மீது உன்னுடைய முழு வன்மையைக் காட்டிப் போர்புரியக்கூடாது என்றுமே கிருஷ்ணமூர்த்தி கேட்டுவரச் சொன்னார். ஆனால், இவ் வரங்களைப் பெற நான் இங்கு வரவில்லை. உன்னை உன் தம்பி மார்களோடு சேர்த்து உன்னை அரசனாக்கவே நான் இங்கு வந்தேன். தயைகூர்ந்து என் விருப்பத்தைப் பூர்த்தி செய்வாய்' என்று மீண்டும் கூறினாள்.

அதைக்கேட்ட கன்னன் தன் அன்னையை நோக்கி, 'அன்னாய்! தாங்கள் அவ்வாறு செய்யும்படி என்னை வற்புறுத்த வேண்டா. தெய்வத்தன்மை பொருந்திய ஒரு கணையை ஒருவர்மீது ஒருதரமே தொடுக்க வேண்டுமே தவிர மீண்டும் மீண்டும் தொடுப்பது சுத்த வீரர்களின் செய்கை யன்று. ஆகையால், நான் அருச்சுனன்மீது ஒரு முறைக்கு மேல் அரவக்கணையை விடேன். ஆண்மை மிக்கவர்கள் தமக்குச் சரியான வீரர்களுடனேயே போர்புரிவார்கள். அதன்படி வில்வன்மை மிக்க அருச்சுனன் ஒருவனோடு மட்டுமே நான் என் முழு வன்மையோடு போர்புரிவேன். தாங்களும் எனக்கு இரண்டு வரங்களைக் கொடுக்கவேண்டும். போர் முடியுமளவும் தாங்கள் என்னைப்பற்றிய உண்மையைப் பாண்டவர்களுக்குத் தெரிவித்தல் கூடாது. அப்படி தாங்கள் செய்தால் அவர்கள் போர்புரியாது காட்டிலேயே வசிக்க நிச்சயிப்பர். போரில் நான் உயிர் துறக்க நேரிட்டால் தாங்கள் நான் இன்னாருடைய மகன் என்பதை விளம்பரப்படுத்த வேண்டும். இவைகளே நான் தங்களைக் கேட்டுக்கொள்வது' என்று கூறிமுடித்தான்.

பிறகு, குந்திதேவி கன்னனை நோக்கி, 'கன்னு! உன்னுடைய அறிவுக்கும், வள்ளற்றன்மைக்கும் கடவுள் கிருபை செய்வாராக. உன்னுடைய உள்ளப்பான்மையை நான் எவ்வாறு உன்னிடம் விவரிப்பது. "மத்தளத்திற்கு இருபுறமும் இடி" என்பதுபோல எனக்கு இருவழியிலும் துன்பமேயாகும். நீ வெற்றிபெற்றால் அருச்சுனன் உயிர் துறப்பான். அருச்சுனன் வெற்றிமாலை சூடினால் நீ மடிவது திண்ணம். என்ன செய்வேன்?' என்று முறையிட்டாள்.

கன்னன் அவளைப் பலவாறு தேற்றி அவளுடைய வருகையைக் கௌரவர் முதலியோர் அறியாவண்ணம் அவள் செல்லுமாறு கூறினன். குந்திதேவியும், பிறிதொரு வழிகாணுதவளாய்க் கன்றைப்பிரியும் பசுவைப்போலப்புழுங்கிய நெஞ்சினளாகத் தனதிருப்பிடத்தை யடைந்தாள். பிறகு, கண்ணபிரானிடம் நடந்தவற்றைப் புகன்றாள். கண்ணபிரானும் யாவற்றையும் உணர்ந்து சொல்லக் கூடியவைகளை மட்டும் தருமரிடங் கூறினர். அன்று முதல் துரியோதனன் பாண்டவர் ஆகிய இரு கட்சியினரும் போருக்கு ஆயத்தம் செய்தனர்.

## 5. கோடையும் கோடை வலியும்

கௌரவருடைய சேனையும் பாண்டவர்களின் சேனையும் குருக்ஷேத்திரம் என்னும் இடத்தில் போர்புரியத் தொடங்கின. கௌரவரின் சேனாதிபதியாய் வீடுமர் நியமிக்கப்பட்டார். துரோணர், கிருபர், சல்லியன், அசுவத்தாமன், கன்னன் முதலியவர்கள், துரியோதனனுக்கு உதவிபுரிந்தனர். பாண்டவரின் சேனைகளுக்குச் சிவேதன் என்பவன் தலைவனாயினன். வீமன், விசயன், நகுலன், சகாதேவன் முதலியோர், தருமருக்காகப்

போர் புரிந்தனர். கண்ணபிரான் விசயனுக்குச் சாரதியா யமர்ந்தார்.

வீடுமர் கன்னனை மிகச் சாதாரண காலாட்படை களுக்குத் தலைவனாக்கினார். தன் ஆற்றலை அறியாது அவர் தன்னை இழிவுபடுத்தியதற்குக் கன்னன் கடுங்கோபங் கொண்டான். அதனால், அவன் வீடுமரின் செய்கையைக் கடிந்துரைத்து வீடுமர் உயிருடன் போர் புரிகிறவரையில் தான் சண்டை செய்வதில்லையெனச் சபதங் கூறினான். பிறகு, அவன் போர்க்களத்தை விட்டகன்றான்.

இருதிறத்தாருக்கும் கொடும்போர் நிகழ்ந்தது. கடல் போன்ற இரு சேனைகளும் ஒன்றையொன்று எதிர்த்துப் போர்புரிந்தன. தேர் வீரர்கள் தேர் வீரர்களோடும், குதிரை வீரர்கள் குதிரை வீரர்களோடும் போர்புரிந்தனர். சற்று நேரத்திற்குள் செந்நீர் பெருகி ஆறுபோல ஓடிற்று. பாண்டவர் படைத்தலைவனை வீடுமர் கொன்றார். அவனுக்குப் பதில் திட்டத்துய்மன் என்பவன் சேனாதிபதி யாக்கப்பட்டான்.

இவ்வாறு எட்டுநாள் வரையில் போர் நிகழ்ந்தது. எட்டாவது நாள் துரியோதனன் பெருத்த தோல்வியடைந் தான். அதைக்கண்டு அவன் வருந்தித் தன்னுடைய பாட்ட னார் வீடுமரின் வில் வன்மையாலும் தான் வெற்றிபெற முடி யாமற் போனதற்கு வருந்தினான். அதனால், அவன் தன்னு டைய வருத்தத்தைக் கன்னனிடம் மொழிந்தான்.

கன்னன் நிகழ்ந்தவற்றை அவனுக்குரைத்து, தம்மால் பாண்டவரை வெல்லமுடியாது என்று வீடுமர் கூறின பிறகே தான் போர்புரிய விரும்புவதாகக் கூறினான். வீடு மர் கன்னனுடைய வார்த்தைகளைக் கேட்டும் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. தம்மாலியன்ற அளவு போரை நடத்திப் பத்தாவது நாள் போர்க்களத்தில் உயிர் துறந்தார்.

அவர் இறந்ததைக் கேள்வியுற்ற கௌரவரும் பாண்டவரும் பெரிதும் வருந்தினர். பிறகு, துரியோதனன் துரோணரைச் சேனாதிபதியாக்கிப் போரை நடத்தினான். அவர் பதினோராம் நாள் தொடங்கிப் பதினைந்நாள் வரையில் போரியற்றினார். பதின்மூன்றாம்நாள், விசயனுடைய மகன் அபிமன்னன் என்பான் சிந்துநாட்டரசனால் கொல்லப்பட்டான். பதினான்காம் நாள் அருச்சுனன் சிந்துவேந்தனைக் கொன்று துரியோதனன் சேனைகளைச் சின்னபின்னப் படுத்தினான். அன்று இரவு முழுவதும் போர் மிகுந்திருந்தது. கன்னன் அருச்சுனனோடும், துரியோதனன் வீமனோடும், துரோணர் திட்டத்தூய்மனோடும் போர்புரிந்தனர். சிறிது நேரங்கழியவே, துரோணரும், துரியோதனனும், தோற்றோடக் கன்னனும் பின்வாங்கினான். அவ்வேளையில் வீமனுடைய புதல்வனான கடோற்கசனென்னும் அரக்கன், கொடிய மாயப்போர் புரிந்து துரியோதனனுடைய சேனையை அதம் செய்தான். அதைக்கண்ட அசுவத்தாமன் அவனை ஒரு கதையினால் புடைத்து வீழ்த்தினான். அவ்வரக்கன் சிறிது நேரம் மூர்ச்சையுற்றுப் பிறகு தெளிந்து எழுந்து அசுவத்தாமனோடு போர்புரிய முயன்றான்.

அதைக்கண்ட துரியோதனன் கன்னனை நோக்கி, 'அண்ணா! அதோ பார்த்தனையா அவ்வரக்கனை! நம்முடைய சேனைகளை யெல்லாம் அப் பாவி நாசம் செய்துவிட்டான். மறுபடியும் அவன் போரைத் தொடங்குகின்றான். இப்போதே அவனைக் கொல்லுதல் எளிது' என்றான்.

உடனே கன்னன், 'மன்னா! மூர்ச்சையுற்று வலியிழந்திருக்கும் அவன்மீது படைக்கலம் விடுவது சுத்த வீரர்களின் செய்கையன்று. இவனைப்பற்றி நாம் ஏன் பயப்படவேண்டும்? ஒரு கணையினால் இவன் உயிரை மாய்ப்பேன்' என்று கூறினான்.

அச் சமயம் அலாயுதன் என்னும் ஓர் அரக்கன் துரியோதனனுடைய உத்தரவு பெற்றுப் பாண்டவருடைய சேனையை எதிர்த்தான். அவனைக்கண்ட கடோற்கசன் விரைந்து சென்று அவனைத் தடிந்துகொன்றான். பிறகு, அவன் தன்னை எதிர்ப்பார் ஒருவருமின்றி மாயப்போர் புரிந்தான். அவனைக் கண்ட துரியோதனனுடைய சேனாவீரர்கள் நடுங்கினர். கடல்போன்ற படை சின்னபின்னப்பட்டு ஓடி நீர்க்கெதிர்ப்பட்ட உப்பு மலையாயிற்று.

அவனுடைய கொடிய போரைக்கண்ட துரியோதனன் கவலைமேற்கொண்டு கன்னனை யணுகி, 'அண்ணா! நான் முன்னரே சொன்னேன். இப்போது அவ்வரக்கன் என்ன பாடு படுத்துகிறான் பாரும். இனிமேலாவது தாமதிக்காமல் அன்று இந்திரன் அளித்த வேலாயுதத்தை ஏவி அவனைக் கொல்லுதலே நன்மை' எனக் கூறினான்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட கன்னன், 'வேந்தே! அரக்கர்களுக்கு இராக்காலமே வலிமைமிக்க காலம். நாளை காலையில் அவனுடைய வீரங்குன்றி அவன் பேசாதிருப்பான். அப்போது அவனை ஒரு கணையில் நான் கொன்று விடுகின்றேன். மேலும் அச் சிறந்த வேலாயுதத்தை நான் அருச்சுனன்மீது விடுவதற்குவைத்திருக்கின்றேன். அதனால், அருச்சுனன் உயிர் இழப்பது நிச்சயம். பின்னர், நாமே வெற்றியடைவோம்' என்றான்.

அதைக்கேட்ட துரியோதனன் கோபித்து, 'நன்று நன்று. இன்று நாம் உயிர் பிழைத்திருந்தால் அல்லவோ, நாளை அருச்சுனனைக்கொன்று வெற்றி பெறுவோம். இன்று உயிர் தப்புவதே பெருந் துன்பமாயிருக்கிறதே. ஆகையால், உடனே அவ் வேலாயுதத்தை ஏவி அவனை இக்கணமே கொல்வீராக' என்று கூறினான்.

உடனே கன்னன் அவனுடைய கோபத்தை யறிந்து, அச் சிறந்த வேலை யெடுத்து கடோற்கசன் மார்பின்மீது இலக்கு வைத்து எறிந்தான். அவ் வேலும், காண்போர் நடுங்கும் வண்ணம் சென்று கடோற்கச னுயிரைக் கவர்ந்து சென்றது. அவ்வரக்கனும் மலைபோல மண்மீது விழுந்தான். அதைக்கண்ட பாண்டவர்கள் மிகவும் வாடினார்கள். துரியோதனன் மகிழ்ச்சி யடைந்தான். பதினைந்தாம் நாள் நடந்த போரில் துரோணர் திட்டத்துய்மனால் உயிரிழந்தார்.

அச் செய்தியைக் கேட்ட துரியோதனன் மிக வருந்தினான். துரோணருடைய புதல்வன் அசுவத்தாமன் ஆற்றுணாத் துயரத்தி லாழ்ந்தான். தம்முடைய வில்லாசிரியர் இறந்து பட்டதற்குப் பாண்டவர்களும் மனம் நைந்தனர்.

பின்னர்ப் பதினாறும் நாள் கன்னன் படைத்தலைவனுயினன். நால்வகைச் சேனைகளுடன் அவன் பொற்றேர்மீதேறிப் போர்க்களத்தில் வந்தான். பாண்டவர்களுடைய படையும் திட்டத்துய்மனுடைய தலைமையின்கீழ்க் கௌரவருடைய படையைத் தாக்கின. அளவற்ற வீரர்கள் உயிர் துறந்தனர். குதிரைகளும், யானைகளும் படைக்கலங்களால் துணிக்கப்பட்டு மலைபோலக் குவிந்தன.

அப்போது கிருபர் திட்டத்துய்மனைப் பொருது அவனை முதுகு காட்டி ஓடும்படி செய்தார். அசுவத்தாமனும் வீமனும் எதிர்த்துப் போர்புரியத் தொடங்கினர். அதுபொழுது நகுலனும், கன்னனும் இரு குதிரைகளின் மீதேறிப் போர்புரியத் தொடங்கினர். இருவரும் வெகு நேரம் வரையில் ஏற்றத் தாழ்வில்லாமல் போராடினர். அதனைக் கண்ட கன்னன் சினந்து தனது வில்லில் பல கொடிய சரங்களைப் பூட்டி நகுலன்மீது எய்தான். அவைகளைத் தடுக்க முடியாது நகுலன் சோர்வடைந்து தத்தளித்தான்.

அப்போது, அருச்சுனன் தவிர, ஏனையோர்மீது முழு வன்மையுடன் போரியற்றுவதில்லை என்று தன் அன்னைக்கு அளித்த வாக்குறுதியின் நினைவு கன்னனுக்கு வந்தது. உடனே அவன் பல கணைகளைத் தொடுத்து நகுலனைக் கொல்லாமல் இம்சித்தான். நகுலனும் அக் கொடுங் கணைகளுக்குப் பயந்து ஓட்டம் பிடித்தான்.

அதைக் கண்ட மகதநாட் டிறைவன் முதலியோர் கன்னனை எதிர்த்து அவனுடைய பாணங்களுக்கு இரையாயினர். பின்னர்க் கன்னன் அருச்சுனனை எதிர்த்துத் தோல்வி யடைந்தான். துரியோதனன் தருமருடன் போராடி மூர்ச்சை யடைந்தான். அன்று சூரியன் மறையவே போரும் நின்றது. இரு கட்சியாரும் தத்தம் இடத்திற் கேகினர்.

மறுநாட் காலையில் ஆதித்தன் அலைகடல்வாய் எழுந்தான். கௌரவர்களுடைய படைகளும் பாண்டவர்களுடைய படைகளும் போருக்கெழுந்தன.

அச் சமயம் கன்னன் துரியோதனனை நோக்கி, 'வெற்றி வேந்தே! இன்றே என்னுடைய போர்த் திறத்தைக் கண்டு களிக்கவேண்டும். அப் பாண்டவர்களையும் கண்ணனையும் ஒரு நொடியில் விண்ணுல கேற்றுவேன். ஆனால் ஒன்று. அருச்சுனன் தேரில் கண்ணன் சாரத்தியம் செய்கின்றான். அதுபோல என் தேரில் மத்திரை நாட்டிறைவன் சல்லியன் சாரத்தியம் செய்தால் பாண்டவர்களை வெல்வது எனக்கு மிக எளிதாகும். எப்படியேனும், அம் மன்னனை எனக்குச் சாரதியாய் ஏற்படுத்துவாயாக' என்று கேட்டுக் கொண்டான்.

கன்னனது மொழிகளைக் கேட்ட துரியோதனன் சிறிது நேரம் ஆலோசித்துக் கடைசியாகச் சல்லியனை யணுகிக் கன்னன் மொழிந்தவற்றையும் அவன் விரும்புவதையும்

கூறினான். சல்லியனோ கடுங்கோபங் கொண்டு அரசகுலத் துதித்தவன் ஓர் இழிகுலத்தவனுக்குச் சாரத்தியம் செய்வது அடாது என்று கூறி மறுத்தான். கடைசியாகத் துரியோதனனுடைய கட்டாயத்தினாலும் வேண்டுகோளினாலும் கன்னனுக்குச் சாரதியாயிருக்க அவன் இசைந்தான்.

படைத்தலைமை பெற்ற கன்னன் சல்லியன் சாரத்தியம் செய்யப் போருக்கு ஆயத்தமானான். அவனைக் கண்ட பாண்டவர்களுடைய படை வீரர்களிற் பலர் அச்சங் கொண்டனர்.

பின்னர், அவன் சல்லியனை நோக்கி, 'மத்திரைநாட்டிறைவ, பாண்டவர்களில் என்னோடு போரியற்ற வல்லவன் அருச்சுனன் ஒருவனே ஆதலின், அவன் இருக்குமிடத்தை நோக்கியே தேரினைச் செலுத்துவாயாக. இன்றே அவனைக் கொன்று நான் துரியோதனனுக்கு வெற்றி மாலை சூட்டுகின்றேன் பார்' என மொழிந்தான்.

அவ் வீரவார்த்தைகளைக் கேட்ட சல்லியன், 'கன்ன! வீணாக வீரம் பேசவேண்டா. அருச்சுனன் கைதேர்ந்த வில்லாளி. நீ நினைப்பது போல அவ்வளவு எளிதாக அவனை வெல்லுதல் இயலாது' என்று கூறினான்.

உடனே கன்னன் கனலெழ விழித்து, 'மன்ன! என் ஆற்றல் அறியாது ஏதேதோ கூறவேண்டா. நான் விரும்பியபடி நீ உன்னுடைய சாரதி வேலையைச் சரியாகச்செய்வாயாக' என்று கட்டளை யிட்டான்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட சல்லியன் கோபங் கொண்டு, தேர்த்தட்டிலிருந்து பொட்டெனக் கீழே குதித்து, வாளாயுதத்தை உருவிக் கன்னனைப் போருக்கழைத்தான். கன்னனும் தேரைவிட் டிழிந்தான். அச் சமயம் துரியோதனன் விரைந்தோடி வந்து அவர்களைப் பல

விதங்களில் சமாதானப்படுத்தினான். சல்லியனும் தேர்ச் சாரதியாக மறுபடியும் கன்னன் தேரில் அமர்ந்தான்.

அப்போது கன்னன் தன் வில்லை வளைத்து நாணேற்றிப் பல அரிய பாணங்களைத் தொடுத்துச் சரமழை பொழிந்தான். அதனால், பாண்டவர்களின் படைகள், சின்ன பின்னப் பட்டு, சூரியனை யெதிர்ப்பட்ட பனிக்கூட்டம் போன்று புறமுதுகிட்டோடின.

அதனால், தருமர் வெகுண்டு கன்னனை எதிர்த்தார். ஆனால், சிறிது நேரத்திற் கெல்லாம் அவர் கன்னனுடைய பாணங்களால் துன்புற்றுப் பின் வாங்கினார்.

தருமர் பின் வாங்கியதைக் கண்ட வீமன் கோப நகை நகைத்துக் கன்னனை எதிர்த்து வெகுநேரம் போராடினான். முடிவில் கன்னனை வெல்ல முடியாதெனத் துணிந்து அவ னும் பின்னடைந்தான்.

தருமரும் வீமனும் பின்னடையவே, அவர்களுடைய சேனை கன்னனுடைய கணைகளுக்குப் பயந்து ஓடின. அசு வத்தாமனை எதிர்த்துச் சமர்புரிந்த பாண்டியனும் உயிர் துறந்தான். மற்றோர் புறத்தில், வீமனும் துரியோதனன் தம்பியாகிய துச்சாதனனும் கடுஞ் சமர்புரிந்தனர். கடைசி யாக வீமன் துச்சாதனனைக் கொன்றான். துரியோதன னுடைய மற்ற தம்பியர்களிற் பலரையும் வீமன் கொன்றான். அதனால், துரியோதனன் மிகவும் வாடினான். கன்னனும் விருத்தமேற் கொண்டான். மேலும், கன்னனுடைய புதல் வன் விடசேனன் என்பான் அருச்சுனனால் கொல்லப்பட் டான். அதைச் செவியுற்ற கன்னன் வெகுண்டு அருச்சுன னைப்போ யெதிர்த்தான். இருவரும் வெகுநேரம் கடும்போ ரியற்றினர். பிறகு, அருச்சுனன் அசைவற்று நின்றான். கண்ணபிரான் அவனுடைய செய்கைக்குக்காரணம் யாதெ வினவியபோது அருச்சுனன் கன்னன் தருமரைப்போல

இருக்கிறானென்று கூறினான். கண்ணபிரான் உடனே தேரைத் தருமரிடம் திருப்பிச் சென்றார். கன்னனைக் கொல்லாமல் விட்டு வந்ததற்குத் தருமர் அருச்சுனனைக் கடிந்துரைத்தார். பிறகு, அருச்சுனன் கன்னனை வந்தெதிர்த்துப் போராடினான்.

கன்னனும் அருச்சுனனும் உயர்வு தாழ்வில்லாது வெகுநேரம் போராடினர். கன்னன் தன்னிடமிருந்த நாகாஸ்திரத்தை எடுத்து வில்லிற்றொடுத்து அருச்சுனன் மேல் தொடுக்க முயன்றான். அப்போது சல்லியன் அந்த அஸ்திரத்தை அருச்சுனனுடைய மார்புக்கு இலக்கு வைத்து எய்யும்படி கூறினான். கன்னன் அவன் சொல்லை ஏற்றுக் கொள்ளாமல் அருச்சுனனுடைய முகத்திற்கு இலக்கு வைத்து விட்டான். அக் கணையும் யாவரும் நடுங்க மிக்க வேகத்துடன் அருச்சுனனை நெருங்கியது. அஃது அருகில் வரும் தருணத்தில் கண்ணபிரான் தமது பாதத்தினால் தேர்த்தட்டை அழுத்தினார். அதனால், திடீரென்று தேரின் உருளைகள் பன்னிரண்டங்குலம் பூமியில் பதிந்தன. அருச்சுனன் கழுத்திற்கு நேரே வந்த அவ்வரவக்கணை, தேர் சட்டென்று புதையவே, குறி தப்பி அருச்சுனனுடைய மணி மகுடத்தை எற்றிச் சென்றது. அதைக்கண்ட அருச்சுனன் அளவிலா மகிழ்ச்சி யடைந்தான். பாண்டவரின் படை வீரர்கள் ஆரவாரித்தனர். தான் தன் தாய்க் களித்த வாக்குறுதியை நினைத்துக் கன்னன் அக் கணையை மறுபடியும் பிரயோகிக்கவில்லை. துரியோதனன் முதலியோர் ஆற்றொணாத் துயர மடைந்தனர்.

அப்போது சல்லியன் தன் தொழிலை நீத்துப் போர் தொடங்கினான். கன்னனும் தன்னுடைய பழைய சாரதியைக் கொண்டு மீண்டும் போராடினான். அவனுடைய திறமையை என்னென்று விவரிக்க முடியும்! சூறாவளிக்

கெதிர்ப்பட்ட துரும்புபோல அவன் எதிரிகளின் சேனை களைக் கலக்கினான். பிணமலைகள் எங்கும் உயர்ந்தன.

அச் சமயம் அவன் ஏறியிருந்த தேரின் உருளைகள் பூமி யிற் பதிந்து போயின. தேரிற் பூட்டிய குதிரைகளும் தளர்ச்சி யடைந்து வாளா நின்றன. முன்பு ஒரு பசுக் கன்று காரணமாய் அவனுக்கு நேர்ந்த சாபம் அப்போது அவனைத் தொடர்ந்தது. அதனால், அவன் சட்டென்று பூமியின்மீது குதித்துத் தேரைப் பெயர்க்க முயன்றான். அப்போது அருச்சுனன் அவன்மீது பல கொடுங் கணைகளைத் தொடுத்தான். தான் நிராயுதபாணியா யிருக்கும் போது தன் மீது கணைகளை வஷிய அருச்சுனனைக் கன்னன் கடிந் துரைத்தான்.

பிறகு, அவன் வேறொரு தேரி லேறினான். முன்னொரு கால் பரசுராமர் கொடுத்த சாபமும் அவனை அப்போது பின் தொடர்ந்தது. அதனால், அவன் எந்தச் சமயத்தில் எந்தக் கணை தொடுப்பதென்பதை மறந்து ஒருவித இலக்கு மின்றிச் சரமாரியாகக் கைக்கு வந்த கணைகளை யெல்லாம் எடுத்துப் பொழிந்துகொண் டிருந்தான். அர்ச்சுனன், கொடிய கணைகளை ஏவி அவனைத் துன்புறுத்த அவனும் இளைத்துத் தேர்த்தட்டிற் சாய்ந்தான்.

சாய்ந்தும் கன்னன் அம்புகளை எய்த வண்ணம் இருந் தான். கன்னன் தன் உயிரை இழக்கவில்லையென்று உணர்ந்த அருச்சுனன் பல சுடு சரங்களைத் தொடுத்துக் கொண்டே யிருந்தான். ஆனால், கன்னன் இயற்றிய தருமத்தின் பயன் அவனுடைய தேரைச் சூழ்ந்து கொண்டு அருச்சுனனுடைய பாணங்களால் அவனுக்கு ஒருவித துன்பமும் நேரா வண் ணம் தடுத்தது.

இதனை யறிந்த கண்ணபிரான் அருச்சுனனைக் கையமர்த் தித் தாம் ஒரு வயோதிக மறையவர் போல் வேடம் பூண்

டார். இளைத்த மேனியுடையவராய், தளர்ந்த நடை கொண்டு, தடியூன்றி அவர் கன்னன் அருகிற் சென்றார்.

கன்னனுக்கு அப்போதுதான் சிறிதளவு உணர்ச்சி உண்டாயிற்று. கண் விழித்துத் தன் அருகில் நின்ற மறையவரைக் கன்னன் நோக்கினான்.

உடனே அவன் மெல்லிய குரலில், 'மாதவத்தீர்! இப் போர்க்களத்தில் தாங்கள் எதற்காக வரவேண்டும்? எதை நாடி என்னிடம் வந்தீர்கள்?' என்று கேட்டான்.

அப்போது அம் முதியர், 'கன்னா! நான் மேருமலைச் சாரலில் வசிப்பவன். வறுமை நோய் மிகவும் என்னை வருத்துதலால் நின்னிடமிருந்து செல்வம் பெற்றுப் போகவே வந்தேன். ஆனால், இந் நிலையில் உன்னை யான் காண நேர்ந்தமை என்னுடைய துர்ப்பாக்கியத்தின் பயனே யாகும். ஆயினும், இப்போது உன்னிடத்துள்ளதை யாவது எனக்குக் கொடுத்து அனுப்புவாயாக' என்றார்.

அதைக் கேட்ட கன்னன், 'பெரியீர்! என்னிடத் துள்ள பொருள்களில் எதை வேண்டுமானாலும் கேளுங்கள். இப்பொழுதே தருகின்றேன்' என்றான்.

உடனே அம் மறையவர், 'கருணைவள்ளலே! நீ இது காறும் செய்த தருமத்தின் பலனை எனக்குத் தத்தம் செய்து கொடுத்துவிடுவாயாக. இது போதுமானது' என்றார்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட கன்னன் கனிவுடன் அவரை நோக்கி, 'தூய்மை மிக்குடையீர்! இதோ நான் செய்த தருமத்தின் பயனை அளித்தேன். நான் எளிதில் ஈயவல்ல இப் பொருளைத் தாங்கள் விரும்பியதற்கு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். பெற்றுக் கொள்ளுங்கள்' என்று கூறினான்.

தத்தம் செய்வதற்குத் தண்ணீர் வருவதற்குள் தான் இறந்துபோனால் என்ன செய்வதென்று நினைத்துக் கன்னன்

தன் தேகத்தில் தைத்திருந்த ஓர் அம்பைப் பிடுங்கினான். உடனே அம்புதைத்த வழியிலிருந்து குருதி பெருகியது. அதை வாரி மறையவர்கையில் வார்த்துத் தன்னுடைய தருமத்தின் பயன் அனைத்தையும் தானமளித்தனன் வள்ளற் றன்மை மிக்க பெருந்தகையாளனான கன்னன்.

உடனே அம் மறையவர் மனமகிழ்ந்து, 'கன்னா! கொடைமிக்க வள்ளலே! நின்னுடைய கருணையும், வள்ளற்றன்மையும் யாவரும் மெச்சத் தகுந்தனவே. நீ விரும்பும் வரத்தை என்னிடமிருந்து பெற்றுக்கொள்' என்று கூறினார்.

அதற்குக் கன்னன், 'ஐயன்மீர்! எப்பொழுதும் எப் பிறவியிலும், ஏற்போற்கு இல்லையென்னாத பெருவாம் ஒன்றுமட்டும் எனக்கு அளித்தால் போதும்' என்று கூறினான்.

மறையவர் உருக்கொண்ட கண்ணபிரான், அவ் வரத்தைக் கன்னனுக்கு நல்கி, அவனை மார்புறத் தழுவினார்.

பின்னர், தம் உண்மை வடிவத்தைக் கண்ணன் கன்னனுக்குக் காண்பித்து, 'கன்னா! உன்னை அங்கீகரிக்க வேண்டியே நான் பல காரியங்களைச் செய்தேன். உன்னுடைய கவசகுண்டலங்களை இந்திரன்மூலமாக நான் அபகரித்தேன். குந்திதேவி மூலமாக உன்னிடமிருந்து இரண்டு வரங்களைப் பெற்றுவரும்படி யனுப்பினேன். மேலும், அரவக்கணையால் அருச்சுனன் இறவாதிருக்கும்படி நானே அவனைக் காப்பாற்றினேன்' எனக் கூறிச் சென்று அருச்சுனன் தேரிலேறிக் கொண்டார்.

பின்னர், சிறிது நேரத்திற்கெல்லாம் மாலைக் காலம் நெருங்கியது. அப்போது அருச்சுனன் அரியதோர் கணையைத் தனது வில்லிற் றொடுத்துக் கன்னன்மீது விடுத்தான். ஐயோ பாவம்! அக் கொடுங்கணை சற்றும் இரக்கமின்றி

அப் பெருங் குணவள்ளலின் உயிரையே பரிசாக எடுத்துச் சென்றது. கன்னனும் பூதவுடம்பை விட்டுப் புகழுடம்பைப் பெற்று விண்ணுல கெய்தினன்.

கன்னன் இறந்து பட்ட செய்தி காட்டுத் தீப் போல எங்கும் பரவியது. இடி முழக்கம் கேட்ட நாகம் போலத் துரியோதனன் அசைவற்று நின்று பின்னர் விரைந்தோடிக் கன்னன் உடலைக் கட்டியணைத்துக் கதறினன்.

குந்திதேவியோ கன்னன் மரித்தானென்று கேட்டதும் வேல் பாய்ந்த மயில் போலப் பதை பதைத்து விழுந்தாள். பின்னர், ஓடிச் சென்று கன்னன்மீது வீழ்ந்து, 'என் செல்வப் புதல்வ, எனக்கு வாக்களித்ததைக் காப்பாற்றும் பொருட்டு உயிர்விட்டனையோ? பெருங்கொடை வள்ளால், அருச்சுனன்மீது ஒரு முறைக்குமேல் நாகாஸ்திரத்தை விடவேண்டாமென்று வஞ்சித்த என் முகத்தில் விழிக்க வொண்ணதென இவ்வுலக வாழ்க்கையை நீத்தனையோ? அருளின்றி நான் பெற்றபோதே உன்னை கங்கையில்விட்டு இக் கதிக்கு ஆளாக்கினேனே!' எனப் பல்வாறு வாய்விட்டரற்றினள்.

அவளுடைய செய்கையைக் கண்ட யாவரும் விஷயத்தை யுணர்ந்து வியப்பெய்தினர். தருமர் வீமன் முதலாேனார் கன்னன் இறந்ததற்கு முதலில் மகிழ்ச்சி கொண்டனர். பின்னர், உண்மை யுணர்ந்து துன்பக்கடலி லாழ்ந்தனர். யாவற்றிற்கும் காரணமாய் நின்ற கண்ணபிரானை அவர்கள் வெறுத்துரைத்தனர். கண்ணபிரான் அவர்களுக்குத் தக்க சமாதானம் கூறி அவர்களைத் தேற்றினர்.

பிறகு, கன்னன் மிகச் சிறப்புடன் அடக்கம் செய்யப்பட்டான்.

## 6. முடிவுரை

கன்னன் இறந்துபட்ட பிறகு சல்லியன் படைத்தலைவனாக நியமிக்கப்பட்டான். அன்றே தருமர் சல்லியனைக் கொன்றார். ஆகவே சண்டையும் ஒருவிதமாக முடிவடைந்தது. பாண்டவரும் துரோபதையும், கண்ணபிரானோடு, வழக்கம் போலத் தங்கும் பாசறையை விடுத்து, வேறிடத்திற்குச் சென்று தங்கினர்.

துரியோதனன் குற்றுயிராய்க் கிடப்பதை அறிந்த அசுவத்தாமன் விரைந்து சென்று தன்னை அப்போதாவது படைத்தலைவனுக்கும்படி வேண்டிக்கொண்டான். துரியோதனனும் சம்மதித்து அவனைப் படைத்தலைவனாக நியமித்தான். அவ்வளவே! அசுவத்தாமன் பாண்டவர் வழக்கமாகத் தங்கியிருந்த பாசறையை யடைந்து அங்கிருந்த சேனைகளை அதம் செய்துவிட்டான். ஆனால், அவனுடைய எண்ணம் முற்றும் கைகூடவில்லை. பின்னர்த் துரியோதனன் மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தினான். அன்றோடு பாரதப்போர் முடிவடைந்தது.

பின்னர்த் தருமர் முடி சூட்டப்பட்டுத் தம்முடைய தம்பியரும் மந்திரிகளும் புடைசூழச் சிங்காதனத்திலிருந்து அரசு புரிந்து வந்தார். நீதியுடன் அவர் அரசாண்டுவந்தமையால் மாத மும்மாரி பெய்தது. குடிமக்களும் அரசனிடத்தும் கடவுளிடத்தும் மெய்யன்பு பூண்டு இன்புற்று வாழ்ந்து வந்தனர். தம் அண்ணனை கன்னன் காட்டிய வழியைத் தருமரும் கடைப்பிடித்தொழுகி ஏற்றோர்க்குக் குறைவற நல்கிச் சீரும் சிறப்பும் பெற்றார்.

# III. குமணன்

## 1. அரிச்சுவடிப் புலவர்

அமிழ்தினு மினிய நந்தம் தமிழ் மொழியைத் தொன்று தொட்டுக் கையாண்ட பெரியோர்கள் பலர். அவர்களுடைய அருங் கல்வித் திறனும், ஒப்புயர் வற்றச் செந்தமிழ்ப்பாக்களாலும், தமிழணங்கு முன்னர்ச் சீர்கேடின்றி மேன்மைபெற்று விளங்கினள். மலரொடு மண மும் பொதிந்திருப்பதுபோலச் சொற்சுவையும் பொருட் சுவையும் பொதிந்த பல பாக்கள் அக் காலம் செந்தமிழை அலங்கரித்தன.

அச் சமயம் கசடறக்கற்ற வேந்தர் பலர் தென்னாட் டில் அரசாண்டிருந்தனர். அவர்கள் யாவரும், ஒரு படித் தாகத் தமிழ் மொழியை வளர்ப்பதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தனர். ஆதலின், மணமுடைய பொன் மலர்போன்ற பெருமை மிக்க புலவர்கள் பலர் அவ் வேந் தர்களுடைய சபைகளில் நிரம்பி யிருந்தனர். கருந்தன மாகிய கல்வியைப் பெற்ற அப் புலவர்களை மன்னர்களெல் லோரும் பெரிதும் போற்றி வந்தனர். புலவர்கள் மீதும் தமிழ்மொழி மீதும் பெருகிய உண்மையன்பின் திறத்தால், அம் மன்னர்கள் புலவர்களுக்குப் பொன்னும், மணியும், துகிலும் குறைவற நல்கினர். மேலும், சுயநலங் கருதாது, கைம்மாறொன்றும் நோக்காது, பொன்னையும், பொருளையும், நாட்டையும் தம்மை நாடி வந்து தம்மைப்போற்றும் புல வர்களுக்கு அம் மன்னர்கள் அளித்தனர்.

இத்தகைய கொடை நிறைந்த மன்னர்கள் பலர் தென்னாட்டில் மலிந்திருந்தனர். அவர்கள் வள்ளன்மை ஒன்றையே தம்முடைய முக்கிய கடமையாக மேற்கொண்ட

பெருங் குணத்தினர். இத்தகைய கடப்பாடுடைய அவர்கள் தாம் அளிப்பது எத்தகையது என்பதையும் ஆராய்ந்தறியாது, எவர் எவற்றைக் கேட்பினும், அவற்றை அட்டின்றி அளித்து வந்தனர். இவ்வாறு ஒருவித வரையரையுமின்றிக் கொடுக்க முற்பட்ட அவ் வள்ளல்களின் செய்கையைப் புகழ்ந்து ஆன்றோர் பலர் பலவாறு கூறியுளார்.

ஒவ்வொரு வள்ளலின் செய்கைகளும், அவரவர்களுடைய பெருங் குணத்தையும், கனிந்த உள்ளத்தையும் வாக்குறுதியையும் தெள்ளிதில் விளக்கும்.

பேகன் என்னும் வள்ளல் ஒருவன் மலைநாட்டில் அரசாண்டிருந்தான். ஒரு நாள் அவன் வேட்டையாடக் காட்டை யடைந்தான். அச் சமயம் மழை தாரை தாரையாகப் பெய்தது. அதனால், அவன் குளிரால் மிக வருந்தி, தன்னுடைய போர்வையை எடுத்துப் போர்த்துக்கொண்டான். அப்போது அங்கிருந்த ஒரு மயில் குளிரால் வருந்தி நின்றது. அதைக்கண்ட பேகன், தான் அணிந்திருந்த அவ்வுயரிய போர்வையை எடுத்து அம் மயில் மீது போர்த்தான். அப் போர்வையால் அம் மயில் அடையக்கூடிய பயன் ஒன்றும் இலதாயினும், தான் குளிரால் வருந்துவதே போல அம் மயிலும் வருந்துமென்று அவன் தன் போர்வையை அதற்கு ஈந்தான். இதனால் அவனுடைய உதார குணமும் கொடைத்திறனும் நன்கு விளங்க வில்லையா? கபிலரும், பாணரும், பெருங்குன்றூர்க்கிழாரும் அவனைப் பலவாறு புகழ்ந்து பாடியுள்ளார்.

கதாநாயகனான குமணனும் அத்தகைய கொடை வீரர்களில் ஒருவன். அவன் அரசுக் குட்பட்டிருந்தவை முதிரமலையும் அதைச் சார்ந்த நாடுமேயாம். எவ்வகையினும் மற்றவர்களால் புகழ்ந்து கூறத்தக்க நற்குண நற்செய்கைகளைக் குமணன் உடைவனாயிருந்தான். அவன் போரில் பின்னிடாப்

பெற்றியன்; அறநெறிச் சார்ந்தொழுகும் கடப்பாடு மிக்கோன்; சகல கலைகளையும் கசடறக் கற்றறிந்தவன்; ஆதலின், கல்வியைக் கலனாகப் பூண்டொழுகும் புலவர்களைப் பெரிதும் போற்றி வந்த உத்தமன். குமணன், அப் புலவர்களை நகை முகங் காட்டி வரவேற்று, அவர்களுடன் பலமுறை அளவளாவி, அவர்கள் அரும் பாடல்களை அமுதென உண்டு, அவர்களுக்கு வேண்டுவன வெறுக்க அளிப்பான். அதனால், நெடுஞ் சுரத்து நின்ற தனிமரம் போன்ற அவனிடம் பாவலரும், எளியோரும், ஏனையோரும் பரிந்து சென்று பரிசில் பெற்று, அவனை வாயார வாழ்த்திச் சென்றனர். அதனால், அவனுடைய பெருமை எங்கும் பரவியது.)

அவனுக்குச் சகோதரன் ஒருவன் இருந்தான். அவனது பெயர் இளங்குமணன் என்பது. அவன் தூய்மைக் குணம் மேம்பட்ட குமணனுக்கு வேறுபட் டிருந்தான். கல்வியறிவற்ற அவன் பாணரையும், புலவரையும், வறிஞரையும் வெறுத்தான். அவர்களுடைய வருகையைக் கண்டு அவன் அஞ்சுவான். வஞ்சகமும், பொய்ம்மையும், அழுக்காறும் அவன் அணிகலனாகக் கொண்டவன். மானிட வாழ்க்கையின் நிலை யறிகருவியாயுள்ள பகுத்தறிவற்ற அவன் தனது சகோதரனுடைய செய்கைகள் தகுதியற்றவை என முனிந்தான். ஆதலின், அவனை அமணன் என்றும் கூறுவர்.

ஆனால், குமணனே தன்னுடைய கொடையைப் பரப்புவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தான். வரையாது 'வழங்கும்' தன்னுடைய கீர்த்தியைக் குன்றின் மேலிட்ட விளக்குப்போலப் பொலிவுறச் செய்தான்.

ஒரு சமயம், பெருஞ் சித்திரனார் என்னும் ஓர் அருந் தமிழ்ப்புலவர் பரிசில் வேண்டிக் குமணனை நாடினார். வறுமைப் பிணியால் வாடிய இவ்வுத்தமர் குமணவள்ளலைப் போற்றித் தம் குறையைக் கூறினார்.

அவர் குமணனை நோக்கி, 'அண்ணலே, பெருங் கொடையாளா! என்னுடைய வறுமைப் பிணியை நான் என்னவென் றுரைப்பேன்? பசிப்பிணி என்னை விட்டு அகன்றிலது. எனது தாயார் மிக வயோதிகதசை யடைந் துள்ளார். அவருக்கு வேண்டிய பணியியற்றி அவரை மகிழும்படி செய்ய நான் சக்தி யற்றவனு யிருக்கின்றேன். இம் மண்ணுலகை நீத்து விண்ணுல கெய்துதல் மேன்மை யென விரும்பும் எனது அன்னையைக் காண என் மனம் அனலிடு மெழுகென உருகுகின்றது.) இம்மட்டோ! பல நாட்கள் பட்டினி கிடந்து அரை வயிறு மட்டும் உண்டு காலங் கழிப்பதனால் மிக மெலிந்த தேகத்தை உடையவளா யிருக்கின்றாள் என்னுடைய மனைவி. தானே விளைந்துள்ள மூங்கில் அரிசியைச் சிரமத்துடன் சேகரித்து வந்து அவள் இலைக் கறியுடன் சமைப்பாள். எனது புதல்வர்களோ, கடும்பசியில் அன்னையின் முகநோக்கி, எதிரிலுள்ள கூழ்ப் பானையைச் சுட்டிக் காட்டித் தேம்பி யழுகின்றனர். அப் பானையிலும் ஒன்றும் இன்மையை அறிந்து அம் மக்கள் முன்னிலும் பதின்மடங்கு கண்ணீருகுக்கின்றனர். இவற்றை யெல்லாம் கண்டு மனம் நைந்துருகி யான் நின்பால் வந் துள்ளேன். என்னுடைய வறுமை நோயை அறவே களை தல் நின் கடனாகும்' என்று யாசித்தனர்.

அப் பெரியாருடைய மொழிகளைக் கேட்ட கொடை வலனுய குமணன் மனமிரங்கிப் பெரிது முளைந்தான். வேண்டியவற்றைத் தடையின்றி அளிக்கவல்ல தன்னிடம் அவர் வந்தமைக்கு மகிழ்ச்சி யடைந்தான். பின்னர் அப் புலவருக்கு வேண்டிய அளவு பொன்னும் மணியும் துகிலும் அவன் கொடுத்து உபசரித்தான். அப் புலவர் பெருமானும், குமணனது கொடைக்கும் காருண்ணியத்துக்கும் வியந்து, அவனைப் பலவாறு வாழ்த்தித் தம் இருப்பிடத்திற்கேகினர்.

குமணன் நல்கிய திரண்ட திரவியத்தைக் கொண்டு அப் புலவர் தம்முடைய தீரா வறுமைப் பிணியைத் தீர்த்துச் செவ்வனே வாழ்ந்திருந்தார்.

அக் காலத்தில் வெளிமான் என்னும் பெயர் வாய்ந்த மற்றொரு புலவர் இருந்தார். அவர் ஒரு சமயம் ஒரு சிற்றரசனைப் பாடி பரிசில் வேண்டினார். அவ்வரசன், அவருடைய பாட்டைக் கேட்டு மகிழாமல் வாளாவிருந்ததுமன்றி, அவருக்கு ஒன்றையும் அளிக்கவில்லை. அதனால், அப் புலவர் மிக வருந்தி அவ்வரசனுக்குப் புத்தி கற்பிக்க விரும்பினார். உடனே அவர், கடையெழு வள்ளல்களில் ஒருவனும், நம் சரித்திரத் தலைவனுமான குமணனை யடைந்து அவனைப் புகழ்ந்து பாடினார். கற்பகத்தருபோன்ற குமணன் அவரை வியந்து அவருக்கொரு யானையைப் பரிசிலாக அளித்தான். அப் பாவலரும் மகிழ்வுடன் அந்த யானையைப் பெற்றுச் சென்று அதை முன்னர்ப் பரிசு கொடாதிருந்த அரசனது ஊரின் எல்லைப்புறத்திலிருந்த ஒரு மரத்தில் கட்டிச் சென்றார். அதனால், பாவலரைப் புரக்கும் புரவலரும் உளர் என்று அவ்வரசனுக்கு அறிவித்து அவர் சென்றார். இவ்வாறு குமணனது புகழ் எங்கும் பரவியது.

குமணன் அரசாண்ட ஊரில் ஒரு வறியோன் வசித்திருந்தான். அவன் கல்விவாசனை யற்றவன். அவனுக்கு ஒரு மனைவி யிருந்தாள். அவர்களுக்கு ஒரு அருந்தவப் புத்திரன் உதித்தான். அப் புத்திரனும் கல்வியிற் கவனஞ் செலுத்தாதிருந்தான். அதனால், மிகத் தாமதமாக எழுத்துக்கள் மட்டும் இன்னவை யென்று அறிந்து கொள்ளத் தக்க சாமர்த்தியம் வாய்ந்தவனாயிருந்தான். கடைசியாக அரிச்சுவடியை மட்டும் அரைகுறையாக அவன் படித்திருந்தான் என்று நிச்சயமாகக் கூறலாம். இத்தகைய மேன்மையிருந்த தன் புத்திர சிகாமணிக்கு அவனுடைய தாயார்

தன் சகோதரனுடைய புத்திரியை விவாகம் செய்து வைத்தாள். அப் பெண்மணி என்ன செய்வாள்? பாவம்! அவனை மணந்து அன்புடன் நேசித்திருந்தாள்.

ஒருநாள் அவள் தன் கணவனை நோக்கி, 'தலைவ! நம்மைப் பரிபாலிக்கும் குமணமன்னர் மிக்க கொடையாளியாமே! இரந்தவர்களுக் கெல்லாம் இல்லை யென்னுது ஈய வல்ல பெருங் குணத்தோராம். அநேகர் தம் கல்வித் திறமையினுல் அவர்மீது பலபாக்கள் பாடிப் பரிசிலாக வேண்டுவன பெற்றுச் செல்லுகின்றனரே? தாங்களும் சில பாக்கள் பாடிக் குமணவள்ளலிடமிருந்து பரிசு பெற்று வந்தால் நாம் ஒருவிதக் குறைவுமின்றி வாழலாம்' என்று கூறினுள்.

அவளுடைய வார்த்தைகளைக் கேட்ட அவன் வெகு நேரம் சிந்தித்து அவ்வாறு சென்று பாடிப் பரிசில் பெற்று வருவதாக ஒப்புக் கொண்டான். பிறகு அவன், பனை யோலையையும் எழுத்தாணியையும் கைக்கொண்டு, குமணனைப் பாடிப் பரிசுபெற்று வரப்புறப்பட்டான். வெகு நேரம் பல விடங்களில் திரிந்தான். பாவம்! திரிந்தால் பாடல்கள் திடீரென்று கண்ணுக்குப் புலனுகுமா? அல்லது, மணியெனப் பூமியில் துலங்குமா? சூழ்ந்துள்ள மரங்களில் நவமணிக்கனிகளெனக் காய்க்குமா?) அரிச்சுவடிப் புலவன் திரியாத இடம் கிடையாது. மண்ணை நோக்குவான் விண்ணை நோக்குவான்; மரங்களில் கூச்சலிட்டு விளையாடும் கிள்ளைகளையும், ஏனைய பறவைகளையும் கூர்ந்து நோக்குவான்; என்ன செய்வான்? ஒன்றும் விளங்கவில்லை. தடையின்றி நாவலர்கள் எவ்வாறு பாடுகிறார்களென்று அவன் வியப்புற்றான். தான் ஒன்றும் பாடாது வெறுங் கையோடு சென்று மனைவியை எவ்வாறு சந்திப்பது என்ற சஞ்சலமும் அவன்

மனத்தெழுந்தது. சுற்றிச் சுற்றி மிரள மிரள விழித்தான். அவனுடைய கால்களும் நோயுற்றன.

அச் சமயம் தனக் கெதிரிலிருந்த ஒரு குட்டிச்சுவர்மீது தன் பார்வையைச் செலுத்தினன். அவனுக்கு அஃது அருமையாகத் தோன்றிற்று. ஏன்? அங்கு ஓர் எருமை நின்று கொண்டிருந்தது. அது தன் தலையை அக் குட்டிச் சுவரில் தேய்த்துக் கொண்டிருந்தது. புலவனைக் கண்டதும் அந்த எருமை திரும்பிப் பார்த்தது. உடனே அவனுக்கு எல்லாம் விளங்கியது. அந்த எருமையினிட மிருந்தே பாக்கள் கற்றுக்கொள்ளலாம் என்று அவன் மகிழ்ந்தான். பிறகு, எருமை தன்னைப் பார்த்ததால், ஓலையில், 'நீ பார்க்கிறதும்' என்று யானைத் தலைபோன்ற எழுத்துக்களால் வரைந்தான். மறுபடியும் அவ்வெருமை அக் குட்டிச் சுவரில் தன் தலையைத் தேய்த்தது. நற்புலவர், 'நீ தேய்க்கிறதும்' என்று எழுதிக் கொண்டார். பிறகு, அவ்வெருமை விழித்தது. அங்ஙனமே, 'நீ விழிக்கிறதும்' என்று பாவலர் எழுதிக் கொண்டார். அவ்வெருமை வேறொன்றும் செய்யாமல் இவைகளையே பன்முறை திருப்பித் திருப்பிச் செய்துகொண்டிருந்தது ஆதலின், அவ்வெருமைக்குத் தெரிந்தது அவ்வளவு தான் என்று அப் புலவர் தீர்மானித்தார்.

பிறகு, தாமாகச் சில வார்த்தைகள் சேர்க்க வேண்டும் என்று நினைத்து, 'எனக்குத் தெரியும்' என்றவற்றை முன் எழுதியவைகளோடு சேர்த்துக் கொண்டார். அவ்வெருமை பலமுறை அவ்வாறு செய்தாலும், அப் புலவர் அவற்றை மும்முறையே எழுதிக் கொண்டு தாமும் ஒருகவி பாடி முடித்ததாக மகிழ்வடைந்தார். கடைசியாக,

"நீ பார்க்கிறதும் தேய்க்கிறதும்
விழிக்கிறதும் எனக்குத் தெரியும்;

நீ பார்க்கிறதும் தேய்க்கிறதும்
விழிக்கிறதும் எனக்குத் தெரியும் ;
நீ பார்க்கிறதும் தேய்க்கிறதும்
விழிக்கிறதும் எனக்குத் தெரியும்."

என்றிவ்வாறு அவர் பாடல் துலங்கியது.

உடனே அப் புலவர் அவ்வோலைச் சுருளோடு குமணனது அரண்மனையை நாடிச் சென்றார். புறக்கடைவாயிலில் குமணன் அமர்ந்திருந்தான். அவனைக் கண்ட புலவர் ஓடிச் சென்று ஓலையை நீட்டினார்.

ஓலையில் எழுதப்பட் டிருந்தவைகளை வாசித்தறிந்த குமணன் வியந்து அவரை நோக்கி, 'இஃதென்ன ? உமக்கு என்னவேண்டும் ?' என்று கேட்டான்.

உடனே அவர், 'இது நான் பாடின பாட்டு. இதற்குத் தகுந்த பொருள் எனக்குப் பரிசிலாக அளிக்கவேண்டும்' என்று இரந்து நின்றார்.

குமணன் அவ் வார்த்தைகளைக் கேட்டு மட்டிலா வியப்படைந்தான். வியந்த குமணன் வந்தவனுடைய வறுமைப் பிணியைப் போக்க, அவனுக்குப் பொருள் கொடுத்து அனுப்பினான். பின்னர்க் குமணன் அவ்வோலையை மேற்கூரையில் செருகிச் சென்றான்.

பரிசு பெற்றவன் விரைந்து சென்று தன் மனைவியினிடமும் மற்றவர்களிடமும் நடந்தவற்றைக் கூறினான். அவர்களும் விலாப்புடைக்க நகைத்தனர். இவ் விஷயத்தை ஊரிலுள்ளோர் அனைவரும் கேட்டுக் குமணவள்ளலின் மாசற்ற குணத்தைப் பெரிதும் போற்றி அவனை வாழ்த்தினர்.

## 2. நகர் நீங்குதல்

தன்னை நாடி வந்தவர்கள் மனம் சலிக்கப் பொன்னையும் பொருளையும் நல்கும் குமணனை அவனுடைய சகோதரன் அமணன் வெறுத்தான். ஏதோ சில பாக்களைப் பாடினால் அவர்களுக்கு அளவசியமாகத் திரண்ட பொருளைக் கொடுப்பது வீண் என்று அவன் கருதினன். அதனால், ஒருவரைப் புகழ்தல் ஒரு துர்க்குண மென்றும், அவ்வாறு மற்றவரைப் புகழ்வோர் தண்டிக்கப்படுதல் நன்மையென்றும் அவன் தீர்மானித்தான். தன்னை எவராவது புகழ்ந்தால், அப்பொழுதே அவனுக்கு அளவற்ற கோபம் பிறக்கும். அக்கணமே அவன் அவர்களைத் தன்னிட மிருந்து வெருட்டி விடுவான். தன் தமயன், நாடுகளையும், நகரங்களையும், திரவியத்தையும் வருநாட்களுக் கென்று சேர்த்து வைக்காமல், செலவிடுவதைக் கண்டு அவன் மனம் புழுங்கினன். அதனால், அவன்மேல் அவனுக்குக் குரோதம் உண்டாயிற்று. எப்படியாவது குமணனைத் தன் வழித் திருப்ப அவன் யோசித்தான். ஆனல், தன் எண்ணமெல்லாம் வீணாய் முடியுமென்று அறிந்த அவன், எவ்வகையேனும் தமயனைக் கொலைபுரிந்து விடுவதே தக்கதெனத் தீர்மானித்தான்.

ஒருநாள் அரண்மனை நாவிதனை அமணன் அழைப்பித்தான். அந் நாவிதன் அச்சமேற்கொண்டு அமணனிடம் வந்து வணங்கி நின்றான்.

துர் எண்ணங்கொண்ட அமணன் அவனை நோக்கி, 'அடே! நான் ஒன்று சொல்லுகின்றேன். அதன்படி நடக்கவேண்டும். இல்லாவிட்டால் உன்னுயிர் உன்னுடையதன்று!' என்று பயமுறுத்தினன்.

அம் மயிர்வினைஞன் பன்முறையும் பணிந்து, 'அரசே! தாங்கள் இட்ட வேலையை இக்கணமே முடிக்க நான் காத்திருக்கின்றேன். தங்கள் கட்டளையை மீறும் தைரியமும் எனக்கு உண்டா!' என்று கூறினான்.

உடனே அமணன், 'சரி, நான் கூறுவதை நீ ஒருவருக்கும் தெரிவிக்கக்கூடாது. உனக்கு மட்டுமே தெரிந்திருக்கவேண்டும். அஃதாவது மறுமுறை எனது தமயனுக்கு நீ க்ஷவரம் செய்யும்போது சமயம் பார்த்து அவனுடைய தலையை நீ அரிந்துவிடவேண்டும். என்ன? தெரிந்ததா?' என்று கேட்டான்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட நாவிதன் நடுநடுங்கினான். அவன் உடலம் வியர்த்தது; மனங்குழம்பியது.

அவன் அமணன் காலில் விழுந்து எழுந்து, 'அரசே, தங்கள் தமயனையா நான் அரிந்துவிடவேண்டும்? ஐயோ! அவர் மகா உத்தமர் ஆவரே! அவரால் அன்றோ ஒருவித முட்டுப்பாடின்றி என்னுடைய இல்வாழ்க்கையை நடத்தி வருகின்றேன். இக் கொடுஞ் செய்கையை எவ்வாறு இயற்றமுடியும்? தூய்மை மிக்க குமணருக்குத் தீங்கிழைக்கத் துணியமாட்டேன். பஞ்சமா பாதகங்களில் முக்கியமான இவ் வேலையை விடுத்து வேறு எவ்வித வேலை இட்டாலும் தடையின்றிச் செய்து முடிக்கச் சித்தமாயிருக்கின்றேன். தயைகூர்ந் தருளல்வேண்டும்' என்று பிரலாபித்தான்.

அதைக் கேட்ட அமணன் சீறி, 'அடா, உனக்குக் கேடுகாலம் கிட்டியது. என் விருப்பத்தின்படி நீ முடிக்க விரும்பாவிடில், நீ மறுபடியும் உன் மனைவி மக்களைப் பார்க்கமாட்டாய். வீணில் நன்மை தீமையென்று உளறிக்கொண்டிருக்காதே. நான் இட்டதைச் சட்டெனமுடி. நீ மிக்க

செல்வத்துடன் புகழ்பெற்று விளங்குவாய். என்ன?' என்று அழுத்தமாகக் கேட்டான்.

நாவிதன் மனங்கலங்கி நின்றான். துர்க்குணமிகுந்த அமணன் தன்னை அப்போதே வாளால் வீசிவிடுவான் என்று அவன் அச்சங்கொண்டான். அவன் வார்த்தையின்படி நடக்கச் சம்மதித்தால் பெருங்கொடையாளன் குமணன் மரிப்பான். அதனால், அவன் இன்னது செய்வதென்று அறியாமற் றயங்கினான். ஆனால், அமணன் பலவாறு அவனுக்குரைத்து அவனுடைய மனத்தூய்மையைக் கரைத்துவிட்டான். முடிவில் அந் நாவிதனும் ஒருவாறு அமணன் கட்டளையை நிறைவேற்றச் சம்மதித்தான். அமணன் தன்னுடைய எண்ணம் நிறைவேறும் காலம் கிட்டியதெனப் பெரிதும் மகிழ்வடைந்திருந்தான்.

பின்னர், ஒரு நாள் அந் நாவிதன் குமணனுக்கு க்ஷவரம் செய்துகொண் டிருந்தான். தான் அமணன் கட்டளைப்படி நடக்கவேண்டியது இன்றியமையாததா யிருந்தமையால் அவன் தன் கத்தியை எடுத்துத் தோல் பட்டையில் தீட்டினான். உடனே குமண வள்ளலைப் பார்த்தான். தான் நினைத்த காரியத்தை முடிக்க மனந்துணியாமல் விழித்தான். களங்கமற்ற அவ்வண்ணலை எவ்வாறு கொலைபுரிவதென அவன் தயங்கினான். அதனால், அவன் குமணனைப் பார்த்தான்: பின்னர்க் கத்தியைத்தேய்த்தான்; கடைசியாக விழித்தான். அவன் இவ்வாறு செய்தவண்ணமாகவே இருந்தான். அச்சமயம் அண்ணாந்தபடி பார்த்திருந்த குமணன் கூரையில் செருகப்பட்டிருந்த ஓலையில் எழுதப்பட் டிருந்தவைகளை வாசிக்க ஆரம்பித்தான். அவ்வோலை முன்னர்ப் பாடிப் பரிசு பெற்ற அவ்வரிச்சுவடிப் புலவரால் பாடப்பட்டதன்றோ? மிகப் பெரிய எழுத்துக்களால் எழுதப்பட் டிருந்தபடியால் அவை நன்றாய்க் குமணனுக்குப் புலப்பட்டன. அதனால்,

அவன் அவைகளை, 'நீ பார்க்கிறதும் தேய்க்கிறதும் விழிக்கிறதும் எனக்குத் தெரியும்' என்று வாசித்து முடித்தான்.

அவ்வளவே!

இருதலைக் கொள்ளி எறும்புபோல மனச்சஞ்சலமடைந்திருந்த நாவிதன் நடுநடுங்கினான். அவன் உடலம் வியர்த்தது; நாக்குழறியது.

அவன் திடீரென மண்மீது விழுந்து, 'அடியேனைக் காப்பாற்றவேண்டும். நான் உண்மையை உணர்த்தி விடுகின்றேன்' என்று பணிவுடன் கூறினான்.

சஞ்சலமிகுந்த நாவிதனுடைய முகத்தோற்றத்தையும் அவனுடைய செய்கைகளையும் கண்ட குமணன் அவன்மீது சந்தேகப்பட்டான். ஏதோ மறைபொருள் இருக்கவேண்டும் என்று நிச்சயித்த குமணன் நாவிதனை நோக்கி, 'ஏன் இவ்வாறு கலங்குகின்றாய்? பயப்படவேண்டாம். உண்மையை உரைப்பாய்' என்று பணித்தான்.

உடனே நாவிதன் சிறிது தைரியங்கொண்டு, 'அண்ணலே! தங்களுடைய சகோதரர் தங்கள் தலையை யரிந்துவிடும்படி எனக்குக் கட்டளையிட்டார். நான் எவ்வளவோ மறுத்தும் அவர் தம் எண்ணத்தை மாற்றவில்லை. அவர் இட்ட கட்டளையை நான் நிறைவேற்ற மறுத்தால் என் உயிர் போகும் என்று அவர் என்னை அச்சுறுத்தினார். ஆகையால், ஒருவாறு துணிந்து இவ்விடம் வந்தேன். ஆனால், என் மனம் குழம்புகிறது. என்ன செய்வேன்!' என்று கூறினான்.

நாவிதன் மூலமாக நிகழ்ந்தவற்றையெல்லாம் குமணன் உணர்ந்தான். தன் சகோதரன் தன்மீது அழுக்காறு கொண்டது எதுபற்றி என்று பலவாறு சிந்தித்தான்.

'உலகில் ஒருவர் மற்றொருவருக்குத் தீங்கிழைப்பதற்குப் பல காரணங்கள் உள. தேக சுகத்திற்காகவோ, பெரும் பொருள் பெறுதற்கோ அல்லது கீர்த்தி பெறுவதற்காகவோ கணக்கற்ற அநியாய செயல்கள் நடைபெறுகின்றன. தன் சுயநலத்தை நாடியேயல்லவா நமது சகோதரன் நம்மைக் கொலைபுரிய விரும்பியது! இத்தகைய ஒரு நோக்கத்தை முன்னிட்டு அவன் பெரிதும் விழையக்கூடியவை நம் நாடுநகரங்களே. நாம் இதுவரையில் இந்நாட்டில் ஒருவிதக் குறைவுமின்றி அரசாண்டோம். நமது தம்பியோ அரசர் பெருமை உணர்ந்தவனல்லன். முடிசூடி அரசாண்டிலன். ஆதலின், நம்மைக் கொன்று அரசாள எண்ணினன் போலும். ஒருவர் விரும்பும் ஒரு பொருளை அட்டின்றி அளிப்பதே மேலோர் கடனாகும். மேலோர் ஒருவர் ஒன்றைக் கேட்குமுன் குறிப்பறிந்து அதை அவர்கட்கு அளித்தல் மிக்க மேன்மைதங்கிய குணமாகும். ஆகையால், நம் நாடுநகரங்களை விரும்பும் நம்முடைய சகோதரனுக்கு அவைகளை அளித்தலே நல்லது. நம்மைக் கொலைபுரிய ஒப்புக்கொண்ட நாவிதனும் நமக்கு ஒரு நன்மையே புரிந்தான். அவனால் நமது சகோதரனுடைய எண்ணம் நமக்குத் தெரிந்தது. ஆதலின், நாமே இந் நகரைவிட்டு நீங்கினால் தன் எண்ணம் முடிவு பெற்று நம் சகோதரன் சிறப்புடன் அரசாள்வான். மேலும், நாம் பேணும் இத்தேகம் அநித்தியமே. "இன்றுளார் நாளையிலார்" என்னும் அமுதவாக்கும் உண்மையே யன்றோ! "வினையின் வந்தது வினைக்கு விளைவாவது" என்னும் ஆன்றோர் சொற்களின் உண்மையை யறிந்த நாமும் இத் தேகத்தைப் போற்றுவது அழகன்று. வானத்தில் இயங்கும் இந்திர வில்லின் தன்மையையொத்த இந்த யாக்கையின் சுகத்திற்காக நாம் பாடுபடுவது வீண்தானே.

"நீரிற் குமிழி யிளமை ; நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் ;—நீரில்
எழுத்தாகும் யாக்கை.........
..............."

என்பதால் இத் தேகத்தின் தன்மை வெள்ளிடைமலையென விளக்கமுறவில்லையா! ஆதலால் காலந்தாழ்க்காது இனி, நகர் விட்டு நீங்குதலே மேன்மையுடைத்து. நமது சகோதரனும் தன் எண்ணம் நிறைவேறப் பெற்றுக் களிகூரட்டும்' என்று குமணன் தீர்மானித்தான்.

உடனே அவன் நாவிதனைத் தேற்றி அனுப்பினான். அன்றைய தினமே தன் அரண்மனையையும், அளவற்ற திரவியங்களையும், நாட்டையும், நகரங்களையும் நீத்து அவன் இரகசியமாகக் காட்டையடைந்தான்.

அவனுடைய உயர் குணத்தை என்னவென்று கூறுவது? சுயநலங்கருதாத தூயவனாய்ப் பிறர்க்கெனவாழ்ந்த பெருங்குண வள்ளலன்றோ குமணன்! இம்மட்டோ இவனது அருந்தவச் செயல்கள்! இன்னும் உள.

## 3. குமணனது கோடைத்திறம்

குமணன் நகர் நீங்கினான் என்று அறிந்த குடிமக்கள் பெரும் வியாகூலம் எய்தினர். இன்னது செய்வதெனத் தோற்றாது அவர்கள் திகைத்தனர். மன்னுயிர் அனைத்தையும் தன்னுயிர்போலப் புரக்கும் காவலனை இழந்த அவர்கள் வருத்தத்திற்கும் ஓர் எல்லையுண்டோ? ஒருவித குறைவுமின்றித் தத்தம் வாழ்நாட்களைக் கழித்துவந்த அம் மக்கள் அனைவரும் மழையின்றி நலியும் பயிர்போல ஆவி சோர்ந்தனர். குமணனைப்பாடிப் பரிசில் பெறவந்த புலவரும், பாணரும், கூத்தரும் ஏமாற்றம் அடைந்து திரும்பி வெறுக்கையின்றி வெறுங்கையுடன் சென்றனர். மதியில்லா

வானம்போன்று அரசன் அவைக்களம் பொலிவிழந்தது. நகரமாந்தரும் பெருந்துயர் உற்றிருந்தனர்.

தன் தமையன் நகர் நீத்தான் என்பதை அறிந்த அமணன், அளவிலா மகிழ்ச்சி யடைந்தான். தன் எண்ணம் நிறைவேற ஒரு நற்காலம் பிறந்ததென அவன் கருதினான். அது தன்னுடைய நல் வினைப்பயன் என்று அவன் உள்ளம் பூரித்தான். அதனால், அவன் உடனே சிம்மாசனமேறித் தானே அரசு செலுத்தினான். ஒப்புயர்வற்ற வள்ளல் அமர்ந்து ஆட்சி புரிந்த அச் சிங்காதனத்தில் அவன் அமர்ந்திருந்தது மிகவும் பொருத்தமில்லாதிருந்தது. சிங்கம் இருந்த இடத்தில் ஓர் அற்ப நரி யிருந்து அரசாட்சி புரிவதை நிகர்த்தது. ஆனால், அமணனோ தன்னுடைய இழி குணத்தை அறவே மறந்து தானே செங்கோல் செலுத்த வல்ல சீரியோன் என்று மமதை கொண்டான். உடனே அவன் தனக்கு முக்கியமெனத் தோன்றிய பல சீர்திருத்தங்களைச் செய்தான். (முதலாவது: தன்னுடைய நாட்டில் ஒருவரும் பிறரை அனாவசியமாகவும், வீணாகவும் புகழ்ந்து பேசக்கூடாதென்பது. இரண்டாவது: எவர் எப் பாடலைப் பாடி வந்தபோதிலும், அவர்களுக்கு ஒன்றும் அளிக்கப் படாதென்பது. மற்றொன்று: புலவர், பாணர் முதலியோர் தன்னை நோக்கி வந்தால் தண்டனைக்குள்ளாவார்கள் என்பது. மற்றும், தன் தமையன் ஒரு சமயம் திரும்பி மறுபடியும் நாட்டை வந்தடைந்தால் தான் இராச்சியத்தை விட்டோட நேரும் என்பதை அமணன் உணர்ந்தான். அதனால், தன் தமையனுடைய தலையை எவன் ஒருவன் கொண்டு வருகின்றானோ அவனுக்கு ஆயிரம் பொன் பரிசில் அளிக்கப்படும் என்று அவன் பறை சாற்றினான்.)

இத்தகைய கட்டளைகளை இட்டு அமணன் தன் கொடுங் கோலை நிலை நாட்டினான். குமணன் எவ்வளவு புகழ் பரப்

பினுனே, அதற்கு மாறாக அமணன் துயர்பரப்பினுன் எனவே, அமணனுடைய நாட்டில் உள்ளார் அனைவரும் கனிவருந்தினர். "கொடுங்கோன் மன்னன் வாழுநாட்டிற் கடும்புலி வாழுங் காடுநன்றே" என்னும் முதுரைப்படி காட்டிடைச் சென்று வாழ்வதே மேன்மையென்று அவர்கள் கருதினர். பாணரும் கூத்தரும் வேறொரு களைகணும் காணுமற் றவித்தனர். மக்களும் மனம்நைந்துருகினர்.

ஒருநாள் பெருந்தலைச் சாத்தனுர் என்னும் பெயர் கொண்ட ஒரு புலவர் பெருமான் குமணனிடம் பரிசில்பெற அவனுடைய நகரத்தை யடைந்தனர். சிறிதுதூரம் செல்லு முன்னரே, புலவர்கள் அந் நாட்டில் அடியெடுத்து வைக்கக் கூடாதென்றும், அவ்வாறு செய்வது அரசன் ஆணையை மீறுவதாகும் என்றும் அவர் அறிந்தார். என்னசெய்வார் அப் புலவர் பெருமான்! எப்படியேனும் குமணனைக் கண்டு பாடித் தம்முடைய வறுமையைக் களைய அவர் பெரிதும் விழைந்தார்.

குமணன் காட்டிடை வாழ்வது அவருக்குத் தெரிய வந்தது. அதனுல், அவர் காடுகள்தோறும் சென்று குமண னைத் தேடினுர். வெகுநாள் அலைந்து கடைசியாகக் குமணன் இருப்பிடத்தை யடைந்தார்.

நகர் நீங்கிய குமணன் காட்டகத்தில் தனிமையாகக் காய் கனிகளையுண்டு தன் வாணுட்களைக் கழித்துக்கொண் டிருந்தான். எவர்வரினும் வரையாது கொடுக்கவல்ல செல் வம்படைத்த அவன் யாவற்றையும் துறந்து தனிமையில் காட்டிடை வசிப்பதைக்கண்ட பெருந்தலைச் சாத்தனுர் பெரிதும் வருந்தினுர். பிறகு, அவர் அவனை நோக்கி,

" ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
என்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரியர்
இன்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே "

என்னும் ஒரு பாடலைப்பாடி நின்றார்.

"வறுமைநோய் மிகுந்து வெகுநாட்களாகப் பட்டினி கிடந்தமையால் மெலிந்த என் மனைவி தன் மகவுக்குப் போதுமான பால் கொடுக்கமுடியாமல் தயங்க, அவளும் தன் கண்களில் நீர் பெருக என் முகநோக்கி இரப்ப, நான் உன் முகம்நோக்கி வந்துளேன்" என்று அப் புலவர் பெருமான் தன்னைப் புகழ்ந்து கூறியவற்றை அறிந்த குமணன் அப் பாடலுக்குப் பெருமகிழ் வடைந்தான். அத்தகைய சிறந்த பாட்டைக் கேட்டும் தான் அதற்குத் தக்க பரிசில் அளிக்க அசக்தனா யிருப்பதைக்கண்ட அவன் தன்னை வெறுத்துக்கொண்டான். அவருடைய கொடிய வறுமை நோய்க்கும் அவர் அதுகாறும் உட்பட்டிருந்த துன்பத்திற்கும் பலவாறு வருந்தினன். என்செய்வான் பாவம்! அவன் கையில் எப் பொருளேனும் இருப்பின் அதை அப் பொழுதே அளித்திருப்பான்.

இன்னது செய்வதென அறியாது அவன் அப் புலவர் பெருமானை நோக்கி,

"அந்நாள் வந்திலை அருந்தமிழ்ப் புலவோய்
இந்நாள் வந்துநீ நொந்தெனை யடைந்தாய்"

என்று கூறி "செல்வமிக்க சிறப்புடன் அரசாண்ட அக் காலத்து வாராமல், யாவற்றையும் துறந்து தன்னந்தனியனாய் வறிதே காட்டில் காலத்தைக் கழிக்கும் இப்போது வந்து பரிசில் வேண்டினீரே" என்று வருந்தினான்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட சாத்தனார் அவனை நோக்கி, 'வள்ளால், நும்போன்ற பெருங் கொடையாளர்களுக்கு என்னுடைய வறுமைநோயைக் களைவது மிகப் பெரிய காரியமா? நின்னுடைய கீர்த்தியோ எங்கும் பரந்துளது. நின்னுடைய வெற்றியும் புகழும் எவர் வாயினும் நிலைத்துள்ளன. அளவற்ற செல்வத்தை அளித்த நினக்கு என்னுடைய வறுமை நோயைப் போக்குவது ஓர் அரிய காரியமாகுமா? எப்படியேனும் நின்னிடம் பரிசில் பெற்றுச் சென்றால்தான் நான் உய்ய முடியும். தயை செய்து அருள்கூர்ந் தருளுவாயாக' என்று வேண்டினார்.

குமணவள்ளலின் மனம் அனலிடு மெழுகென உருகியது. அவ்வுத்தமருடைய கவி வன்மையை வியந்து அவரது ஆற்றொணாத் துன்பப்பெருக்குக்கு அவன் வருந்தினான். அதுகாறும் இரந்தவர்களுக்குக் கொடுத்து அவர்கள் இன்முகங் கண்டு மகிழ்ந்து பெரிதும் புகழ் படைத்த தான் அச் சமயம் அவ்வுத்தமருக்கு உதவி செய்யாமற் போவது இழிவு என அவன் கருதினான். எவ்வகையிலேனும் தன்னாலியன்ற உதவியை அப் புலவர் பெருமானுக்குச் செய்தே தீரவேண்டும் என்று அவன் தீர்மானித்தான். மனம் உண்டெனின் வழியும் உண்டென்பதற் கிணங்க, ஓர் எண்ணம் அவனுக்குத் தெள்ளிதில் உண்டாயது.

அதனால், அவன் அப் புலவர் பெருமானை நோக்கி, "முத்தமிழ் வல்லீர்! நீர் எதற்கும் வருந்துதல் வேண்டாம். என்

தம்பி என்னுடைய தலையைக் கொண்டுவருவோருக்கு ஆயிரம் பொன் பரிசில் தருவதாகப் பறை யறைவித்துள்ளான். புலவர் நாறும் என்னுடைய தலைக்கு அவன் அவ்வளவு மதிப்பு வைத்தது உம்முடைய பேரதிர்ஷ்டமே. ஆதலின்,

தலைதனைக் கொடுபோய்த் தம்பிகை கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வறுமைநோய் களையே,

என்று கூறித் தன் வாளாயுதத்தை எடுத்து அப் புலவர் பெருமானிடம் ஈந்து நின்றான்.

அவனுடைய சொற்கள் அவருக்குப் புண்ணில் வேல் நுழைத்ததுபோல இருந்தன. எதிர்நோக்கும் வறுமை நோயை யகற்ற இத்தகைய கொடிய பாதகச் செய்கையை இயற்ற அப் பெரியார் எவ்வாறு உடன்படுவர்? ஆனால், அவருக்கு ஒரு யுக்தி தோன்றிற்று.

அதன்படி நடக்க இசைந்த அவர் குமணனை நோக்கி, 'குமண வள்ளலே! நின் கொடையின் திறமே திறம். நின் பேரும் புகழும் செழித்தோங்குக! ஆனால், என்னலத்தை முன்னிட்டு நின் தலையை யான் வெட்டிச் செல்லுதல் பெருமையுடையதன்று. அதைவிடப்புன்செய்கை வேறொன்றும் இலது. அவ்வாறு செய்யவும், நான் கனவிலும் கருதேன். எனக்குக் கொடுக்க முன்வந்த இந்த வாள் ஒன்றுமே எனக்குப் போதும்' என்று கூறி அந்த வாளை மட்டும் இரந்தார்.

குமணவள்ளல், ஒன்றுந் தோன்றாது, அவர் விழைந்தபடி வாளாயுதத்தைமட்டும் அவரிடம் கொடுத்தான். வாளாயுதத்தைப்பெற்ற புலவர் பெருமான் குமணவள்ளலிடம் விடைபெற்று மாங்கை என்னும் ஊரையடைந்தார். பின்னர்ச் செவ்வாழைக்கட்டை யொன்றை அவர் பெயர்த்

தேடுத்துச் சென்று அங்கு வாழ்ந்திருந்த ஒரு கொல்லனை யடைந்தார். அவன் சித்திரம் செதுக்குவதில் கைதேர்ந்தவன். மன்னர்களின் மகுடம் செய்யும் வேலையையும் கசடறக் கற்றவன்.

அக் கொல்லனை யடைந்த புலவர் பெருமான், 'ஐய, எனக்கு நீ செய்யவேண்டிய உதவி ஒன்று உள்ளது. அதாவது : இச் செவ்வாழைக் கட்டையைக் குமண வள்ளலின் திருமுடியைப்போலச் செய்து எனக்களிக்க வேண்டுவதே. இதைக் குறித்தே உன்னிடம் நான் வந்துள்ளேன்' என்று வேண்டினார்.

அக் கொல்லனும் புலவர் பெருமானது வார்த்தைகளுக் கிரங்கி அவர் விரும்பியபடி செவ்வாழைக் கட்டையைக் குமணனது தலைபோலச் செய்து அவரிடம் கொடுத்தான். இயற்கைத் தலைபோல அப் பொய்த்தலையும் விளங்கியது. அத்தலையில் இன்பம் தவழும் முகமும், புன்சிரிப்பரும்பும் உதடும், கருணை மிகுந்த கண்களும் செவ்வனே பொலிந்தன. அஃது அப்பொழுது தான் வெட்டப்பட்டதுபோலப் பசுங்குருதி பாய்ந்தோடியது.

அப் பொய்த்தலையை அன்புடன் பெற்ற சாத்தனார் மிக மகிழ்வடைந்து,

> " மாந்தையிலே வாழும் மகுடத் தியாகிஉனக்
> கேந்து தழும்போ இரண்டுண்டு—வேந்தர்
> முடித்தழும் புன்காலிலே முத்தமிழ்ழோர்க் கியும்
> படித்தழும் புன்கையிலே பார் "

என்று அவனைப் புகழ்ந்து பாடினார்.

பின்னர், அவர் அப் பொய்த்தலையுடன், காடுகளைக் கடந்து அமணன் இருந்து அரசாளும் நகரத்தினுட்புகுந்து அவனுடைய அவைக்களத்தை நண்ணினார்.

நண்ணினவர் அமணனை நோக்கி, 'வேந்தே, தாம் விரும்பியபடி இதோ தங்கள் தமயன் தலையைக் கொணர்ந்து வந்தேன்' என்று கூறி அப் பொய்த் தலையைக் காட்டினர்.

உண்மையறியாத அவன் பசுங்குருதிபாயும் அத் தலையை நோக்கினன். அவ்வளவே! அது தன்னுடைய சகோதரனுடையதுபோலத் தோன்றவே அவன் மனம் துடிதுடித்தது. இயற்கைப் பாசம் அவனைமட்டும் விட்டு விடுமா! தன் ஆண்மைமிக்க தமயன் தன்னுடைய கொடுமையால் கொலை செய்யப்பட்டானே என்று அவன் துக்கித்தான். அதனால், அவன் தன் வாளை யுருவிச் சாத்தனரை ஒரே வீச்சாக வீசிவிட ஓடிவந்தான். புலவர் பெருமானும் நடுங்கிச் சட்டென்று மறைந்து கொண்டார். பின்னர், அமணன் திடீரென மண்மீது விழுந்து துயருழந்தான். தன்னுடைய அழுக்காறையும், மனவன்மையையும், வஞ்சத்தையும் குறித்துத் தன்னைக் கடிந்து கொண்டான். 'என்னுடைய தமயனை இனி எப்போது உயிருடன் காணமுடியும்?' என்று ஏங்கினன்.

உடனே வாய்விட்டு, 'ஆ! என்னுடைய அருமை மிக்க அண்ணனை உயிருடன் என்னிடம் கொண்டு வருபவர்க்கு இக்கணமே இந் நாட்டில் பாதி யளிப்பேன். என்ன செய்வேன்?' என்று அவன் பிரலாபித்தான்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்டுப் புலவர் பெருமான் பெருந்தலைச் சாத்தனர் விரைந்து வந்து, 'வேந்தே! உமது தமயனை நானே உயிருடன் கொண்டு வருவேன். நீர் கூறியபடி பாதி நாட்டை யளிப்பது உண்மை தானே?' என்று கேட்டார்.

உடனே, அமணன், 'என்ன சொன்னீர்? நீரா உயிருடன் கொண்டு வருவீர்! உண்மையாகவா! அப்படியானல்

தடையின்றிப் பாதி நாடன்று, இந் நாடு முழுவதையும் தரவல்லேன். என் அண்ணனை மட்டும் அடைந்தால் போதும்' என்று வேண்டினன்.

அவைகளைக் கேட்ட முத்தமிழ் வல்ல அவ்வுத்தமர் அமணன்மீது இரக்கங் கொண்டார். அவன் கூறுவது யாவும் உண்மை யென்றும், உண்மையில் அவன் தன் தமய னது பிரிவாற்றாமைக்கு வருந்துகிறா னென்றும் அவர் அறிந்தார்.

ஆதலால், அவர் அமணனை நோக்கி, 'மன்ன, சஞ் சலத்தை விட்டொழி. குமண வள்ளல் செவ்வனே ஒரு வித இடையூறு மின்றிக் காட்டில் வசித்து வருகின்றார். நீ விரும்புகிறபடி நான் அவரை இங்கு அழைத்துவரவல்லேன்' என்று தேற்றி அவனிடம் விடைபெற்று அவைக்களத்தை விட்டகன்றார்.

பின்னர்ச் சாத்தனார், நகரை நீத்துக் குமண வள்ளல் வசித்துவந்த காட்டை யடைந்து, அவ்வுத்தமனைக் கண்டு நிகழ்ந்தவற்றை யெல்லாம் புகன்றார். அது கேட்ட குமணன் பேராச்சரியம் அடைந்தான்.

கடைசியாகச் சாத்தனாரின் விருப்பத்தின்படி குமணன் அவரோடு தன் தம்பியைக் காணச் செல்லச் சம்மதித்தான். உடனே அவர்கள் இருவரும் புறப்பட்டுக் காடுகளை நீத்து நகரத்தை யடைந்தனர். தமயன் வருகையை யறிந்த அமணன் உவகை பூத்தான். சாத்தனாருடன் வந்த தன் தமயனை, அமணன் ஓடிச் சென்று கட்டித் தழுவி உள்ளம் நெக்குருகக் கதறினன். தன்னுடைய தீச்செயல்களைப் பொருட் படுத்தாது தன்னை மன்னிக்கும்படி பலவாறு வேண்டிக் கொண்டான்.

குமணன் தன் தம்பியைப் பலவாறு தேற்றி அவனை அங்கீகரித்துக் கொண்டான். பின்னரே அமணன் மன

வமைதி யடைந்தான். தன் தமயனைத் தன்னிடம் சேர்த்த புலவர் பெருமான் பெருந்தலைச் சாத்தனாரைப் பலவாறு போற்றினான். அவருக்கு வெறுக்கையும் மணியும் நாடும் நல்கினான். அவரும் உவகை ததும்பிய உள்ளத்தராய்க் குமணனையும் அமணனாகிய இளங் குமணனையும் வாழ்த்தித் தம் இருப்பிடமேகி வாழ்ந்திருந்தார்.

அமணன் மறுபடியும் குமணனைச் சிங்காதனத் தேற்றி அரசு புரியும்படி வற்புறுத்தினான். அன்று தொட்டுக் குமணனும், தன் வழக்கமே போல இரவலர்க்கும், புலவர்க்கும், ஏனையோர்க்கும், கொடுப்பன கொடுத்து, முன்னிலும் பதின்மடங்கு அதிகமாகத் தன் புகழை நிலை நாட்டினான்.

போன உயிர் மீண்டும் உடற் புகுந்ததே போலக் குடிமக்களும் பெரிதும் ஆரவாரித்துக் குமணனது வள்ளற் றன்மையையும் பெருங்குணத்தையும் போற்றி வாழ்ந்தனர். குமணனது கொடைத் திறம் இத்தகையதென்று நம்மால் அளவிட்டுச் சொல்ல இயலுமா?

# IV. பாரி

## 1. முல்லைக்குப் பொற்றேர் அளித்தது

செழுமைமிக்க பாண்டிநாட்டு மன்னர்கள் தமிழணங்கைப் பெரிதும் போற்றி வந்தனர். அவர்களுடைய ஆதரவினுல் தமிழ் மொழி தென்னிந்தியாவில் சிறந்தோங்கியது. முத்தமிழையும் முறையே பயின்று தம் கல்வித் திறனை நிலைநாட்டிய புலவர்களைப் பெரிதும் பேணிய வள்ளல்கள் பலர் அங்கு வாழ்ந்திருந்தனர். பாண்டிநாட்டில் இருந்த வீரர்களில் வேளாளர் மரபில் உதித்த பாரி என்பவன் ஒருவன்.

அவன் போரில் பின்னிடாப் பெற்றியோன்; எதிர்த்தவரை வென்று அடுத்தவரை ஆட்கொள்ளும் அருள்சேர் மனத்தன்; கசடறக் கற்றவன்; தன்னை நாடிய இரவலர்க்கும் புலவர்க்கும் வேண்டுவன நல்கி அவர்களை ஆதரிப்பவன். அவர்கள் புகழ்ந்து கூறும் இசை மொழியே கைம்மாறெனக் கருதும் கட்டுப்பாடுடையோன். இம்மட்டோ! முத்தமிழ் வல்ல கபிலரைத் தன்னுடைய உயிர்த் தோழராகக் கொண்டவன். தன் புகழை எங்கும் பரப்பி அவன் பறம்பு மலையில் அரசாண்டிருந்தான்.

அப் பறம்புமலை எத்திறத்தானும் மேன்மை பெற்றிருந்தது. எங்குப் பார்த்தாலும், காயா, கோங்கு, மாவம் முதலியவை அரும்பிப் பூத்து இனிய வாசனையை நல்கின. வள்ளல்களின் கருணை வெள்ளமென வற்றாத பல அருவிகள் எங்கும் பாயந்தோடிச் செழுமை தந்தன. அவ் வருவிகளின் ஒலியைக் கேட்டு முழவென மயங்கி வண்டுகள் இசை

பாடின. மலையில் வந்து சூழ்ந்து நீங்கும் மேகக்கூட்டங் களைக் கண்ட மயில்கள் தத்தம் கலாபத்தை விரித்து அகவின. வருடைகள் தாவி மிதித்துச் சிதைத்தலினால் தேனடைகளிலிருந்து தேன் ஒழுகி அருவியிற் கலந்தது.

அம் மலையின்மேல் ஓர் அரண் விளங்கியது. விசால மான அவ்வரண் நாற்புறமும் இயற்கையின் காப்புகளை மிக்குடையதா யிருந்தது. ஆதலின், உள்ளிருப்போர் ஒரு சித வருத்தமுமின்றிப் பகைவர்களைப் படைக்கலன்களால் எதிர்க்கும் தகைமை வாய்ந்திருந்தனர். அவ்வரண், மலை மேல் அமைக்கப்பட் டிருந்ததால், பகைவர்களால் ஏற முடி யாத உயர்ச்சியும், கோட்டை வாயிலைத் தவிர வேறு வழிக ளால் உட்புக முடியாத பாதுகாப்பும் வாய்ந்திருந்தது. இன் னமும் அது பகைவர்களை எளிதில் நாசப்படுத்த வல்ல பல படைக்கலன்கள் அமைக்கப்பட்டு எவர்க்கும் கைப்படாப் பெருமை பெற்றதாகும்.

ஒருநாள் பொழுது சாயும சமயமா யிருந்தது. சூரியன் மேற்றிசையில் தன் செங்கிரணங்களைப் பரப்பி நின்றான். இளவேனிற் பருவ மாதலால், குரவம் கோங்கு முதலியவை அரும்பிப் பூத்தன. வண்டுகள் மதுவுண்டு களித்துப் பாடின. தென்றலும் உல்லாசமாக வீசிக்கொண்டிருந்தது. வெய்யவனது வெம்மைக்கு ஆற்றாது வேள்பாரி தன் பொற் றேர்மீது அமர்ந்து நந்தவனத்தை நோக்கிப் புறப்பட் டான். அச் சமயம் அவனறியாது அவன் உள்ளம் பூரித் தது. நன்னிமித்தங்கள் பல நிகழ்ந்தன. காரணந் தோன் றாது அவன் பூஞ்சோலையை அடைந்தான்.

அப் பூஞ்சோலையில் பார்க்குமிடமெங்கும் நறுமலர் கள் செறிந்து விளங்கின. பழுத்த மாங்களெல்லாம் கனி களை ஏந்தி நின்றன. அவைகளை விழைந்து தாவுதல்போலக்

கொடிகள் படர்ந்தேறின. மேலும், பசுஞ்சென்ற புற்றரையைக் கண்ட பாரியும் மனமுவந்தான். புனங்காப்போன் வழி காட்டிச் செல்ல, சோலையின் நயத்தை வியந்து செல்பவன், மலைச்சாரலை நோக்கினான். அங்குப் பேரிரைச்சலும் புகைச்சலும் காணப்பட்டன.

உடனே கோபமேற் கொண்ட வள்ளல் காவலனை நோக்கி, 'காவல, இஃதென்ன விநோதம், விரைவிலோடி உண்மையை அறிந்து தெரிவி' என்று கட்டளையிட்டான்.

அப் புனங்காப்போனும், விரைந்து சென்று உண்மையை உணர்ந்து, அண்ணலை மீண்டும் அடைந்து, 'மன்னர் மன்ன, அங்கெழும் இரைச்சலும் புகைச்சலும் பகைவர்களின் செய்கை யன்று. அச் சிற்றூரில் வாழும் வேட்டுவர் தமது நிலத்தைப் பண்படுத்துகிறார்கள். தேக்கு, அகில் முதலியவற்றை வயலின்கண் எரிக்கின்றனர். அதனால்தான் புகைப் படலங்கள் தோன்றுகின்றன. மேலும், வேட்டுவர் தாம் இன்புறற் பொருட்டு முருகவேளை வழிபடுகின்றனர். அதனால்தான் பேரிரைச்சல்' என்று கூறி வணங்கி நின்றான்.

அவன் வார்த்தைகளைக் கேட்ட வள்ளல் தலையசைத்து அப்பாற் சென்றான். ஆங்கு ஓரிடத்தில் ஒரு முல்லைக்கொடி படருவதற்குக் கொளு கொம்பின்றித் தயங்கித் தென்றலிற் றுவண்டு விழ்ந்தது. அதைக் கண்ணுற்ற வள்ளல், அம் முல்லைக்கொடி அவ்வாறு தன்னிடம் சரண் புகுவதுபோல விழுந்ததற்குக் காரணம் தெள்ளிதில் அறிந்து கொண்டான். கருணை ததும்பும் அவன் உள்ளம் அம் முல்லைக் கொடியின் ஆதார மற்ற நிலைக்கு வருந்தியது. மண்ணுலகில் வாழும் ஒவ்வொன்றிற்கும் ஒரு குறை யிருப்பது இயற்கையென்பதை அவன் உணர்ந்தான். அதனால், அவன் விரைந்து சென்று கொளு கொம்பின்றி வீழ்ந்த அக் கொடி யருகில் தனது பொற்றேரை நிறுத்தி மகிழ்வடைந்

தான். பின்னர், அவன் தன் இரு பாதங்களும் சிவப்ப நடந்து சென்றான்.

பறம்புமலையின் ஒரு பாகத்தில் முருகவேள் என்னும் பெயர் பூண்ட ஒரு வேளிர் தலைவன் வாழ்ந்திருந்தான். அவனுடைய அருந்தவப் பயனே ஒருரு வெடுத்து வந்தாற் போன்ற ஒரு மகள் அவனுக்கு உதித்திருந்தாள். அவள் பெயர் நங்கை என்பது. அப் பெண்மணி, மிக்க அழகமைந்தவளாய்ப் பன்னிரண்டாட்டைப் பிராயத்தளாயிருந்தாள். அவள் கல்வி முதிர்ச்சி பெற்றவள். அவள் தன் சேடியர் புடைசூழ, மனங்களிக்க விளையாடிப் பின்னர்ப் பாரி சென்ற பூஞ்சோலையிலிருந்த ஒரு பளிங்குப் பாறை மீது அமர்ந்தாள். தென்றலும் மெல்ல வீசுதல் இவளுக்கு மிக்க இன்பத்தைத் தந்தது. அப்போது தாதியர் நங்கையை அங்ஙனமே யிருத்தித் தத்தம் மனம் சென்றவாறு தனித் தனியே சென்றனர்.

சேடியர் செல்லத் தனியளான நங்கை பொழுது போக்காகத் தனக்குத் தெரிந்த நைவளம் என்னும் பாலைப் பண்ணை ஒருவித குற்றமுமின்றி இனிமையாகப் பாடினாள்.

உடனே எங்கும் இன்னிசை மயமாயது. அப் பூஞ்சோலையிலிருந்த அனைவரும் மனம் உருகி நின்றனர். கிள்ளைகளும் குயில்களும் வெட்கி வாளாவிருந்தன. பாம்புகள் வெளி வந்து படமெடுத்தாடின.

இவ்வின்னிசையைக் கேட்ட வள்ளல் பாரி காரணந் தோன்றாது கலங்கினான். இசையெழும் திசையை நோக்கி வந்த வள்ளல் தன்னை யறியாது நங்கையிருந்த சோலையிற் புகுந்தான். அங்கும், அவ்வின்னிசை நிரம்பி யிருத்தலை யறிந்த அக் கோமான் அளவிலா உவகை எய்தினான். அவ் வின்னிசைக்குக் காரணமா யிருப்பவரை யறிய அவன் முற்பட்டான். தான் "இருப்பது விண்ணுலகமோ என்று அவன்

ஐயுற்றான். பிறகு, அவன் நங்கை யிருந்த இடத்தை யடைந்து சுவரில் தீட்டிய சித்திரமென்ன அமர்ந்து பாடும் அந் நங்கையைக் கண்ணுற்றான்.

கண்டதும் அவன் பெருவியப் படைந்தான். நங்கை ஒருவித குற்றமுமின்றி அமர்ந்து பாடுவதால் அவளைப் பாடும் பதுமையென அவன் நினைத்தான். அதனால், அவன் சிறிது அவள் அருகில் நெருங்கினான். வள்ளலைக் கண்ட நங்கை சட்டென எழுந்து நாணமீதூர நின்றாள்.

அவளைக் கண்ட வள்ளல் பலவாறு சிந்தித்தான். இயற்கை நலனெல்லாம் ஒருங்கு திரண்ட அந் நங்கை மீது அவன் காதல் கொண்டான். அதுகாறும் அவன் மணவினை யின்றி யிருந்தமையால் அவன் அந் நங்கையை விரும்பினான். ஒருசமயம் அவள் பிறரை மணந்திருந்தால் என்ன செய்வது எனக் கவலை கொண்ட வள்ளல் நங்கையின் பாதத்தை நோக்கினான். அவள் காலில் ஆழியின்மையைக் கண்ணுற்ற வள்ளல் பேருவகை எய்தினான். கடிமணம் ஆகாத அந் நங்கையைத் தான் மணக்க விரும்புவது தகுதியே என்று அவன் தீர்மானித்தான்.

நங்கையும், நாணத்தினால் வாய் பேசாது நின்றிருந்தாலும், அவ் வள்ளலைக் கடைக்கண்ணால் நோக்கினாள். வள்ளலும் அவள் கண்ணொளியைக் கண்டு அவளுடைய உள்ளப் புான்மையை நன்கு அறிந்து கொண்டான். ஆதலால், அவளது தந்தையின் விருப்பத்தை யறிந்து அவளை மணப் பதே தகுதியென நிச்சயித்தான்.

பிறகு, பறம்பிற்கோமான், தன் அரண்மனையை யடைந்து, தன் உயிர்த்துணைவரான கபிலரையும் மற்ற முதியோரையும் அழைத்துவரும்படி ஏவலாளர்க்குக் கட்டளை யிட்டான். அங்ஙனமே, சிறிது நேரத்திற்கெல்லாம், கபி லரும் மற்ற பெரியோரும், வள்ளலை வந்தடைந்தனர்.

பாரியும் அவர்களை எதிர்கொண்டு உபசரித்துத் தக்க ஆசனங்களில் இருத்தினன்.

பின்னர்க் கபிலர், வள்ளலை நோக்கி, 'அண்ணலே, எதற்காக எங்களை வரவழைத்தாய்? நீ விழைந்தவற்றைக் கூறுவாயாக' என்றார்.

அது கேட்ட வள்ளல், கபிலரை நோக்கி, 'மறை வல்லீர், நம்மை யொத்த மரபினனான முருகவேள் என்பவன் ஒருவன் நம் மலைக்குக் கீழ்ப்பால் வசிப்பதைத் தாங்கள் அறிவீர்கள்! அவனுக்கு நங்கை யென்னும் ஒரு மங்கை உண்டன்றோ? அவளை மணக்க நான் எண்ணுகின்றேன். ஆகையால், தயை செய்து தாங்கள் என்பொருட்டு அவனிடம் சென்று அக் காரியத்தை முடிவுபெறச் செய்ய வேண்டும் என மொழிந்தான்.

வள்ளலின் விருப்பத்தை உணர்ந்த புலவர்பெருமானும் அவ்வாறே ஒப்புக்கொண்டு முருகவேளை யடைந்தார். முருகவேளும் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்தான்.

பிறகு கபிலர், 'நான் ஒரு முக்கிய காரியத்தை உத்தேசித்து உன்னிடம் வந்தேன். அதைக் கேட்பாயாக. சாதாரணமாக ஒரு பெண்ணின் சுற்றத்தார் அப் பெண்ணை உயர்குடியிற் பிறந்த ஒருவனுக்கு மணம் செய்ய விரும்புவர் மருமகன், கல்வியிற்றேர்ந்தவனாயிருக்க வேண்டுமெனத் தந்தையும், பெருஞ் செல்வவந்தனா யிருத்தல் மேன்மை யெனத் தாயும் விழைவர். மணமகளோ தன் கணவன் பேரழகும் இளமையும் வாய்ந்தவனா யிருத்தல் வேண்டுமென விரும்புவள். ஆதலால், தாய் தந்தையர், இவைகள் யாவும் ஒருங்கே அமைந்த ஒரு புருடனுக்கே பெண் கொடுப்போம் என்று புகல்வர். பறம்பு மலையை அரசாளும் பாரி

வேளாளர் மரபில் உதித்தவன் என்பதை நீ நன்கு உணர்வை. அவன் எவ்வகையிலும் உயர்ந்தவனென்பதையும் அறிவாய். கல்வியின் கரையைக் கண்டவன். அதனால், அக் கல்வியைக் கலனாகப் பூண்ட பாவலரையே தன் துணைவராக மதித்து, அவர்களுக்குக் கற்பகத்தருவென விளங்குகின்றான். மேலும், தூய்மை நிறைந்த மனத்தன். பகைவரைப் புறங்காட்டியோடச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவன். ஆகையால், அப் பாரிக்கு, உன்னுடைய மகள் நங்கை என்பவளை மணம் செய்து கொடுப்பதே தக்கது. உன் விருப்பத்தைத் தெரிவிப்பாய்' என்று கூறி முடித்தார்.

புலவரது மொழிகளைக் கேட்ட முருகவேள் பேருவகையெய்தினான். முந்நூறூர்களைக் கொண்ட பறம்பு நாட்டை ஆளும் பாரிக்குத் தன் மகள் நங்கை என்பவளை விவாகம் செய்துகொடுக்க அவன் மறுப்பனோ? உடனே அவன் தன் அருந்தவப் புத்திரியைப் பாரிக்கு வதுவை செய்து கொடுக்கச் சம்மதித்தான்.

பிறகு கபிலர், முருகவேளிடம் விடைபெற்றுச் சென்று, வள்ளலைக் கண்டு நடந்தவற்றைப் புகன்றார். பாரியும் உவகை ததும்பும் உள்ளத்தனாய்க் கபிலரை வாயார வாழ்த்தினான். பின்னர்த் திருமணத்திற்கு வேண்டியவற்றைச் சித்தம் செய்யும்படி ஏவலர்க்குப் பணித்தான். மண நிகழ்ச்சியைக் குறித்து அனைவருக்கும் ஓலை போக்கினான். நகர மாந்தருக்கும் நிகழும் திருமணத்தை முரசறைந்து தெரிவித்தான்.

நகர மாந்தரும் தம் வள்ளலுக்குத் திருமணம் எனவறிந்து குதூகலித்தனர். எங்கும் மகர தோரணங்களும், பொற் கலசங்களும் பொலிந்தன. பாரியின் அரண்மனை இந்திர பவனம்போல விளங்கியது. கடல்போல முரசமார்ப்ப, ஆன்றோர் சூழவிருந்து ஆசி கூற, ஒரு சுபதினத்

தில் வேள்பாரி நங்கை என்பவளை மணந்தான். அன்று என்றுமில்லா இரவலரும் புலவரும் வள்ளலை நாடி வந்து அவன் சலியாது அளித்தவற்றைப் பரிவுடன் ஏற்றுத் தத்தம் இருப்பிடங்களுக்கேகினர்.

பின்னர் நங்கையும் பாரி வள்ளலும் அன்பின் மிகுந்தவராய் இன்புற்று வாழ்ந்திருந்தனர். நாளடைவில் நங்கை இரு பெண் மக்களைக் கரு உயிர்த்தாள். அவர்களுக்கு அங்கவை, சங்கவை எனப் பெயர்களிடப்பட்டன. அவ்விள மக்களும், ஒருவித குறைவுமின்றி நாடோறும் வளர்ந்து, விளையாட்டுப் பருவத்தை யடைந்தனர். அமிழ்தினு மினிய அவர்களுடைய மழலைச் சொற்களைக் கேட்ட பாரியும் நங்கையும் பரவசமாயினர்.

சில யாண்டுகள் கழிய அம் மக்கள் கற்பதற்கேற்ற வயதை யடைந்தனர். 'இளமையிற்கல்' என்னும் முதுமொழிப்படி அவர்களுக்குக் கல்வி கற்பிக்கப் பாரி எண்ணங் கொண்டான். உலகில் மானிடராய்ப் பிறந்தவர்களுக்கு முக்கியமானது பகுத்தறிவேயாம். அவ்வறிவே அல்லன கடிந்து நல்லன வியந்து வாழ்வதற்குச் சாதகமானது; அவ்வறிவை நன்கு விளக்குவது கல்வி யென்னும் ஆயுதமேயாம். மேலும், கண்ணுக்கு ஒளி யளிப்பது கல்வியே. ஏனைய பொருள்போலப் பிறரால் இக் கல்வியை வஞ்சித்து அபகரித்தல் இயலாது. அது பற்றியே,

"வெள்ளத்தால் போகாது, வெந்தழலால் வேகாது,
 வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் நிறைவொழியக்
 குறைபடாது,
கள்ளர்க்கோ மிகவரிது, காவலோ மிகவெளிது;
 கல்வியெனும்
உள்ளத்தே பொருளிருக்க, உலகெலாம் பொருள்
 தேடியுழல்வதேனோ?"

என்று பெரியோர் கூறியுள்ளார். நால்வகைப் புருஷார்த்தங்களையும் எளிதில் அளிக்கவல்ல கல்வியின் பெருமையை எவ்வாறு அளவிடுவது. ஒப்புயர்வற்ற இப்பொருளைப் படைத்தவனே மானிடரில் சிறந்தவனாவான். இவைகளையெல்லாம் சிந்தித்த பாரி வள்ளல், தன் இரு மக்களையும், கபிலர்பால் விடுத்து, கல்வி கற்பித்தான். அம் மக்களும், சகல கலைகளையும் தெள்ளிதில் உணர்ந்து, புலமை மிகுந்த பெண்மணிகளாய் விளங்கினர். அது கண்ட அவர்கள் பெற்றோர் பேருவகை பூத்தனர்.

## 2. புகழுடம் பெய்தல்

பறம்பு நாட்டைச் செவ்வனே பாரி அரசாண்டிருந்தான். வரையாது அளிக்கும் வள்ளலாதலால், புலவரும் கூத்தரும், பாணரும், வறியரும் அவனை நிரந்தரம் வந்து கண்டு சென்றனர். இன்னோரென வேற்றுமையின்றி அளவற்ற பொருளை அல்வழியிற் செலவிடாது நல்வழியில் பாரி அளித்து வந்தான். அதனால் அவனுடைய புகழ் எங்கும் பரவியது. முடியுடைய மன்னர் சேர சோழ பாண்டியராகிய மூவரும் பாரியின் வள்ளற் றன்மையையும், கொடையையும் கேட்டு வியப்பெய்தினர். தம்மினும் செல்வச் சிறப்பில் தாழ்ந்த பாரி புகழில் மேம்பட்டிருந்ததை அறிந்த அம் மன்னர்கள் அழுக்காறு மேற்கொண்டனர். நாளடைவில் அவர்களுடைய அழுக்காறு வாழை யிளங்குருத்தென வளர்ந்து தீராப் பகைமையை உண்டாக்கியது. ஆதலால், முடியுடை வேந்தர் மூவரும் கருணை வள்ளலாகிய வேள்பாரிமீது பொறாமைமிகுத்தனர்.

ஒருநாள் மூவரும் ஓரிடத்தமர்ந்து ஆலோசித்தனர். அப்பொழுது ஒருவன், 'பாரி பறம்பு நாட்டைமட்டும் ஆள்பவன். நாம், மும் மண்டலத்தையும் புரக்கும் பெற்

யுடையோம். செல்வத்தில் மிகத் தாழ்ந்தவனாக அவன் காணப்படினும், புகழில் நம்மினும் பதின் மடங்கு மேம்பட்டுள்ளான். எத்தகைய வீரனாயிருந்தாலும், பலர் ஒன்று சேர்ந்தால், அவன் தனிமையில் என்ன செய்ய முடியும். ஆகையால், நாம் மூவரும் ஒன்று சேர்ந்து அப் பாரியை எதிர்த்து அவனை வெல்வதே தகுதியானது. இன்றேல், அவனை வஞ்சித்து உயிரைப் போக்கவேண்டும். இவற்றை விடுத்து அவன் அற்பன் என்று வாளாவிருந்துவிடில் நமக்கே கேடு சம்பவிக்கும். எதையும் அற்பம் என்று அலட்சியம் செய்தல் தகாது. நாளடைவில் இப்போதுள்ள நமது புகழும் அடியோடு மறையும். நாமும் பெருமையிழந்து நாண வேண்டி வரும்' என்று கூறினான்.

அது கேட்ட மற்றொருவன், 'அற்பனாயிருந்தபோதிலும் அவனை எதிர்க்கத் துணிந்தால், தீர யோசித்தே செய்ய வேண்டும். ஒருவன் மீது போருக்குப் போகும்போது, தன் வலியையும் மாற்றான் வலியையும் சீர் தூக்கிப் பார்த்துத், தன் வலி மிகுந்திருந்தால் போர்புரிய நிச்சயிக்க வேண்டும். நாம் வல்லமை மிக்கோம் என அகங்கரித்து ஒன்றைச்செய்து தோல்வியுறுதல் மேம்பாடுடையதன்று. எதையும் அவசரப்பட்டு இயற்றி அல்லற்படுவது தகாது. ஆதலின், நாம் எதையும் தீர ஆராய்ந்தறிந்த பின்னரே ஒரு முடிவுக்கு வரவேண்டும்' என்று மொழிந்தான்.

அப்போது மூன்றும் அரசன், 'வெகு நன்று. அப் பாரியை நாம் அறியமாட்டோமா! அவன் நம்மினும் வலிமை மிகுந்தவனாயிருந்தாலன்றோ நாம் யாவற்றையும் ஆராய்ந்தறிய வேண்டும். சாதாரணமாக ஒரு சிங்கம், நரியை எதிர்க்கச் செல்லும்போது, எவ்வாறு சென்று அதைத் தாக்குவது என்று பல யோசனைகள் செய்யவேண்டிய அவசியம் உண்டோ! பாரியினுடைய வலிமை எவ்

வளவு? நம்மெதிரிற்படும் அப் பாரி சூரியன் முன் இரு ளொப்பான். அப் பதரைக் களைய நாம் பலநாள் தாமதித் திருத்தல் தகாது' என்று கூறி முடித்தான்.

எனவே அம் மூவரும் ஒரு மனப்பட்டுப் பாரியைத் தாக்கி எவ்வகையானும் அவனைக் கொல்வதே தகுதியென முடிவு செய்தனர். உடனே தத்தம் சேனைவீரர்களுக்குத் தம்முடைய முடிவைத் தெரியப்படுத்தி நால்வகைச் சேனையையும் திரட்டும்படி கட்டளை யிட்டனர்.

இமைக்குமுன், மலை நிகர்த்த யானைக் கூட்டங்களும், விரைந்து செல்லும் பரிகளும், நெடுந்தேர்களும், ஆயுதந் தாங்கி ஆர்ப்பரிக்கும் வீரர்களும் குழுமினர். பார்க்குமிட மெங்கும் பகலவனை மறைக்கும் குடைகளும், கொடிகளும், வெய்யவனது ஒளிபோல மின்னும் வேலும் வாளும் மிகுந் தன. மூவேந்தர் தத்தம் பொற்றேர்மீது புறப்பட்டனர். இருமருங்கும் சாமரை இரட்டினர். சங்கமும் முரசமும் இடியென ஒலித்தன. வேந்தரின் வெற்றியும் புகழும் பாடப் பட்டன. சேனைகள் கடல்போலப் பரந்து விரைந்து செல் லுதலால் எங்கும் தூசுகள் எழும்பியது. காடுகள் தூகள் பட்டன. நால்வகைச் சேனையின் ஆர்ப்பினால் நாற்றிசையும் செவிடுபட்டன.

இவ்வாறு விரைந்து வந்த வேந்தரின் தன்மையை உணர்ந்த ஒற்றர்கள் கடிது சென்று பாரியின் அவைக்களம் புகுந்து, 'அண்ணலே, நம்மேற் போர் புரிதற்கு மூவேந்த ரும் தம் நாற்படைகளுஞ்சூழ வந்துள்ளார்' என்றான்.

ஒற்றன் உரைத்தவைகளைக் கேட்டவுடன் பாரி வெகுண் டெழுந்தான். அவனிரு கண்களும் சிவப்பேறின. கையைக் கையோடு தட்டினான். மீசைகள் துடித்தன.

'என் வல்லமையை ஆராயாது இங்கு வந்த அவர்களுக் கழிவு காலமே கிட்டியதுபோலும். அவர்களை ஒரு நொடியில் நமனுலகம் அனுப்பியே அவர்களுக்குப் புத்தி கற்பித்தல் வேண்டும்' எனக் கூறினான்.

பின்னர் ஒற்றனை நோக்கி, 'நீ முன் சென்று நம் சேனைகளைக் கொண்டு அரணைக் காவல்புரிவிப்பாய். யாமும் சீக்கிரத்தில் வருகின்றோம்' எனப் பணித்தான்.

பின்னர்ப் பாரி, ஆயுதசாலை யடைந்து வீரலட்சுமியை வணங்கி, கவசமணிந்து, வில்லும் அம்பும் கொண்டு, உடைவாளுடன், புரவிமீதேறி அரணைக்காவல் செய்திருந்தான்.

எங்கும் படைக்கலன்களின் இயக்கமும், வீரரின் வஞ்சின மொழிகளும், அவர்கள் ஆர்ப்பும், பொற்றேர் ஓசையும், களிற்றின் முழக்கமும் மலிந்தன. தம்மை எதிர்த்தவர் இளைத்து நிற்பதைக்கண்ட வீரர்கள் அவர்கள் மீது படைக்கலம் விடாது அவர்களுக்குக் கூறும் இரக்கமொழிகளும் நிறைந்தன. இம்மட்டோ! யானைகள் மலையே பெயர்ந்து வந்தாற்போலப் போரியற்றின. வில்வீரர்கள் தம் திறனால் கணைமாரி பொழிந்தனர். அதனால், காலறுப் புண்டும், கையறுப்புண்டும், வயிறு கிழிந்தும் வாடினோர் பலர். துதிக்கையறுப்புண்டு துன்பப்பட்ட யானைகள் பல. அம்பேறுண்டு அழுங்கிய புரவிகள் எண்ணில. பலதேர் உடைந்தன. இன்னும் பலவித இடையூறுகள் எண்ணிறந்து நிகழ்ந்தன.

பாரியின் படை வீரரோ போரில் ஊக்கம் குறைபடாது போர் இயற்றினர். கோட்டை வாயில் அடைக்கப்படினும், பறம்பினாணிலேயே உண்ண உணவுக்கும் அருந்த நீருக்கும் பல சாதனங்கள் இயற்றப்பட்டிருந்தமையால், அவர்கள் ஒருவிதக் கவலையுமின்றி ஊக்கங் குன்றாது போர்புரிந்தனர்.

இம் முற்றுகை பலநாள் நடந்தேறியது நாட்கள், மாதங்கள், பல யாண்டுகள் கழிந்தன. அப்போது உணவுப் பொருள்கள் குறைபட்டன. புலவர் பெருமானாகிய கபிலர் நுண்ணறிவுடையோ ராதலால், கிளிப்பிள்ளைகளை வளர்த்து விடுத்து வெகு தூரத்தில் உள்ள விளை நிலங்களிலுள்ள நெற்கதிர்களைக் கொண்டுவரச் செய்தார். அதனால், குடிப் படைகள் செவ்வனே தத்தம் தொழிலையியற்றிப் பாரியின் அரண் பகைவர் கைப்படாவாறு காத்தனர்.

இவ்வாறு பல நாட்கள் கழியவே முடியுடை வேந்தர் மூவரும் தங்கள் எண்ணம் நிறைவேறாது தோல்வியுற நேர்ந்ததை நோக்கி நாணங்கொண்டனர்.

அவர்களுடைய தளர்ச்சியையும் திகைப்பையும் அறிந்த கபிலர், அவர்களை நோக்கி,

“ அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்
கடந்தடு தானை மூவிருங் கூடி
யுடன்றனி ராயினும் பறப்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே.”

என்று பாடி, ‘மூவேந்தரே! நீங்கள் ஒன்று சேர்ந்து திரண்ட படையுடன் நெடுங்காலம் போர்புரியினும் இப் பறம்பமலையைக் கைப்பற்ற முடியாது. முந்நூறூர்களையும் பரிசிலர் பாடிப் பெற்றுக்கொண்டர். ஆதலால், நீங்களும் அவ்வாறு வந்தால், இதனைக் கைக்கொள்ளலாம் போம்’ என்று பாரியின் வள்ளற்றன்மையைப் புகன்றான்.

இச்சொற்கள் வாள்பட்ட புண்ணில் வேல் பாய்ந்தாற் போல இருக்கவே மூவேந்தரும் மனம் புழுங்கினர். ஆயி

னும், தாம் இன்னது செய்வதெனத் தெரியாமல் திகைத்து நிற்கும். அவர்களைக் கண்ட பாரி, 'புரவலர்காள், ஒருவர் வல்லமையை நன்குணராது வெகுளல் தகுதியன்று. படைவலி மிக்குள்ளோம் என இறுமாந்திருத்தல் பேதைமையே! என் வல்லமையை யறியாது போரியற்றி வருந்துகின்றீர். தளர்வடைந்த உங்கள்மீது அம்பு தொடுக்க விரும்பேன். ஆகையால், இப்போது உங்களுடைய உயிரைத் தானமாகக் கொடுக்கின்றேன், பெற்றுச் செல்லுங்கள்' எனக் கூறினான்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட அம் மன்னர் மூவரும் நாணிப் புறங்காட்டிச் சென்றனர். பிறகு அவர்கள் ஓரிடத்தில் மீண்டுங் கூடி ஆலோசிப்பாராயினர்.

" 'என்னே! நாம் பாரியின் வலிமையை நன்குணராது, அவனோடு சமர் புரிந்து புறக்கிட்டோம். "நண்ணிய கருமமும் எண்ணித் துணி" என்பதை மறந்தோம். "ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு" என்னும் பழமொழியும் நம்பால் பலித்தது. யானை மண்ணைவாரித் தன் தலைமீது போட்டுக் கொள்ளுதல்போல, நம்மை நாமே இழிவு படுத்திக் கொண்டோம். இப் பாரியோ வில்லில் வல்லவன். ஒருவனே நின்று நம் மூவரையும் எதிர்த்து வெற்றிமாலை சூடினான். இவனது படையும் இவனைப்போன்ற தீரம்வாய்ந்த வீரர்களைக்கொண்டதே! அவர், நம்மவர்களுக்கு எவ்வளவு துன்பங்களை விளைவித்தனர். அவனுடைய ஆற்றலே ஆற்றல். அவனுடைய வீரமே வீரம்' எனப் பாரியைப் புகழ்ந்து தம்மை இழித்துரைத்துக் கொண்டனர்.

பல நாள் கழிந்தன. புலவர் பெருமான் கபிலர் கூறியவாறு பாரியை வஞ்சித்து அவனை வெல்ல மூவேந்தரும் நினைவு பூண்டனர். அதனால் அவர்கள், சாதாரண பரிசிலர்

போல வேடந்தாங்கி, இரவலருக்குத் தடைபடாத வாயிலை யுடைய பாரியின் அவைக்களத்தை யடைந்தனர்.

அடைந்தவர்கள் பாரியை நோக்கி, 'வள்ளலே, பெருங் கொடை யண்ணலே! நின் வெற்றியும் புகழும் எங்கும் உலவுகின்றன. நின்னைப் போற்றும் பரிசிலர் யாங்கள்' எனப் பலவாறு புகழ்ந்து பாடினர்.

அவர்களுடைய பாடலைக் கேட்ட பாரி, பெருமகிழ் வெய்தி, அவர்களை அருளின் நோக்கி முகமனுரைத்தான். பின்னர்க் களிறும், தேரும், பொன்னும், மணியும் அவர் களுக்கு அளித்து அங்கீகரிக்கும்படி இரந்து நின்றான்.

அளவற்ற பொருளை யடைந்தும் அவர்கள் முகமலர்ச்சி யின்றித் தாம் விரும்பிய பொருளை யடையாதார்போலக் குறைவுகொண்டு நின்றனர். அவர்களைக் கண்ணுற்று பாரி ஒருவாறு அவர்களை இன்னாரென்று அறிந்துகொண்டான். இயற்கைப் பரிசிலர் அல்லரென்றும், தனக்குத் தோற்று ஓடிய முடியுடை வேந்தர் மூவருமே அவர்கள் என்றும் தெள்ளிதில் உணர்ந்தான்.

ஆயினும், அவன் ஒருவித வாட்டமுமின்றி அவர்களை நோக்கிப் 'புலவீர், நீர் விரும்புவதை ஒளியாது உரைமின்! அஃது எதுவாயினும் இதுபொழுதே தருகின்றேன். இதைத் தவிர்த்துக் குறைவுபட்டு நிற்றல் எதற்காக? விரைவில் உரைமின்! உரைமின்'! என மொழிந்தான்.

அது கேட்ட வஞ்சக மிக்க அப் பரிசிலர்கள், 'வள் ளால்! யாங்கள் நின் உயிரையே விரும்பி வந்துள்ளோம். எங்கள் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது நின்பாரம்' என்றனர்.

அம் மொழிகளைக் கேட்ட பாரி பெருமகிழ்வெய்தினான். அவன் முகமும் அன்றலர்ந்த செந்தாமரையெனப் பொலிந் தது.

உடனே அவன் அன்புடன் அவர்களை நோக்கி, 'பரிசிலர்காள்! நீங்கள் எதைக் கேட்பீர்களோவென்று நான் ஐயுற்றிருந்தேன். நான் எளிதில் இன்றே தரவல்ல பொருளையே இரந்தீர்' என்று கூறினன்.

பின்னர்த் தன்னுள், 'என்னே இப் புலாலுடம்பின் தன்மை! நிலையற்ற இவ் யாக்கையைப் போற்றி யடையும் பயன் யாது? ஒன்றும் இலது. நமனொலை வந்ததும் நடுநடுங்கி இத் தேகம் அழிவுறும். இது பற்றி யன்றோ ஆன்றோர் இத் தேகத்தைக் "காலத்தச்சன் வெட்டி முறிக்கும் மரம்" என்றும் கூறியுள்ளார். ஆதலின், இவர்கள் விரும்புவதுபோல இசைந்து இப் புலால் உடம்பை நீத்து என்றும் அழியாப் புகழுடம்பைப் பெறுதலே மேன்மையுடைத்து. இனிக் காலந் தாழ்த்தாது இவர்கள் களிப்புறும் வண்ணம் செய்தலே சீரியதாகும்' என மனந் துணிந்தான்.

அதனாலவன், அவர்கள் பாற் சென்று, நகை முகத்துடன், 'பரிசிலர்காள், நீங்கள் விரும்புவதுபோல நான் உங்களுடைய பரிசிலாயினேன். என்னைக் கொண்டு சென்று களி கூருங்கள்,' என்று மொழிந்தான்.

அம் மூவேந்தரும் தாங்கொண்ட குறைவு நீங்கி மகிழ்வெய்தினர். அறியாமை மிக்க அவர்கள் அவ் வள்ளலின் மேன்மையை அறிந்திலர். தாங்கள் சூழ்ச்சியில் மிகுந்த புரவலர் என இறுமாந்தனர். அப்போது பாரியின் வீரர், நிகழ்ந்தவற்றை யுணர்ந்து, அப்பரிசிலர் கபட வேடந்தாங்கியவராதல் வேண்டுமெனத் தெளிந்து, சட்டெனவெழுந்து தம் இறையை மீட்க ஆர்ப்பரித்தனர். ஆனால், மந்திரத்தால் கட்டுப்படும் பாம்பைப்போல அவர்கள் பாரியின் விருப்பத்தின்படி வாளாவிருத்தல் அவசியமாயிற்று. அங்ஙனமிருக்கவே, பறம்பிற் கோமானாகிய பாரியைப் பரிசிலாகப்

பெற்ற அவ் வஞ்சகர் அவனைக் கொலை செய்வித்துத் தம் எண்ணம் சித்திபெற்றனர்.

பாரி விண்ணுல கடைந்ததை யறிந்த மண்ணும் மன மாழ்ந்தது. பாவாணரும் பாணரும் உயிரைப் பிரிந்த உடல்போலப் பதறினர். பறம்பு நாட்டில் துக்க மிகுந்தது.

## 3. கபிலரும் பாரி மக்களும்

தன் இன்னுயிர்க்காதலன் தன்னை விடுத்துப் பரிபவமுடை கச் சென்றதை யறிந்த நங்கை மனங் கவன்றாள். நன்னெறியே ஒருருவான தன் கணவனை வேந்தர்கள் வஞ் சித்தன ரென்றும், அதனால், தன் கணவனுக்கு என்ன நேர்ந் ததோ வென்றும் வியாகூல மடைந்தாள். அதற்கேற்ப அவளுக்குத் துர்ச்சகுனங்களே நேர்ந்தன. அவளுடைய வலக்கண்ணும் வலத் தோளும் துடித்தன. அவளுடைய மனத்தில் குழப்பம் மிகுந்தது. துணையைப் பிரிந்த அன் றிலைப் போல அவள் மனம் புழுங்கினாள்.

அப்போது ஓர் ஒற்றன், பாரிக்கு நேர்ந்த விபத்தை யும், அவன் புகழுடம்போடு விண்ணேறியதையும் உணர்ந்து, கண்ணீர் சோர விரைவில் அரண்மனையிற் புகுந்தான்.

அவனைக் கண்ணுற்ற பறம்பிற் கோமாட்டி, பின்னும் அதிக திகில் கொண்டு, நிகழ்ந்தவற்றை உரைக்குமாறு வேண்டினாள். அவன் உரைக்க முடியாமல் நாக் குழறினான். கனிந்த உள்ளத்துடன் கண்ணீர் மல்கிய வண்ணம், 'அன்னையே! என்னவென் றுரைப்பேன். பகைவர் கையகப் பட்ட நின் காதலன் இம் மண்ணுலகை நீத்தார்' என்றான்.

அவ்வுரை செவி புகாமுன், வேல் பாய்ந்த மயில்போல நங்கை திடீரென மண்மீது சாய்ந்து, பிறகு உணர்ச்சி

பெற்று வாய்விட்டுக் கதறினாள். தன்னைத் தன்னந் தனியே தவிக்க விட்டுச் செல்லுதல் முறையோ வென்று அவள் அரற்றினாள். உண்மை யுணர்ந்த புலவர் பெருமான் கபிலரும் மக்கள் இருவரும் ஆற்றொணாத் துயருழன்றனர்.

பிறகு, நங்கை கணவனை யிழந்த தான் "கைம்பெண்" என்று பிறரால் இழித்துரையாடப் பெறாமல் கணவனோடு இறத்தலே மேன்மையெனத் தீர்மானித்துத் தன் கருத்தைத் தன் மக்களிடமும் பிறரிடமும் கூறினாள்.

அதையுணர்ந்த அம் மக்கள் பெரிதும் வருந்தி அன்னை முகம் நோக்கி, 'அன்னாய்! நாங்கள் பெண் மக்கள். எவ்வளவு கல்வி கற்றறிந் திருந்தபோதிலும், நாங்கள் ஒரு ஆதரவும் இன்றி உம்மையும் துறந்து எப்படி உயிர் வாழ முடியும்? எங்கள் இன்னுயிரன்ன தந்தையும் எங்களைவிட் டேகினார். ஆதலால், உம்மையே களைகணாகக் கருதியுள்ள எங்களைப் பரிதவிக்க விடுத்து, நீங்களும் உயிரிழத்தல் முறையோ? பெண் மக்கள் பிறர் அகம்புகும் வரையில் பெற்றோர் பாதுகாப்பில் தானே யிருக்கவேண்டும்? இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்தால் எங்களை விடுத்து நீங்கள் செல்லுதல் தகுதியாகா தென்று தோன்றவில்லையா? தயைகூர்ந்தருள் புரியவேண்டும்' என இரந்தனர்.

அம் மக்களைக் கண்ட நங்கை மனம் வருந்தி அவர்களை அருகணைத்து, 'என் செல்வப் புத்திரிகாள், என்மீது கொண்டுள்ள உண்மை யன்பால் நீங்கள் ஏதோ சிலவற்றைக் கூறுகின்றீர்கள். உலகில் பெண் மக்களுக்குக் கணவனைவிடச் சிறந்த தெய்வம் வேறொன்றும் இல்லை. உயிருள்ளளவும் தன்னை மண முடித்த கொழுநருக்கு வேண்டுவன நல்கி உபசரிப்போரே கற்புடையரெனப் படுவர். இத்தகைய பத்தினிப் பெண்டிர், தம் கணவன் உயிர் துறந்

தால், அக்கணமே தாமும் உயிர்விடுவர். இவ்வுலகமே அவர்களுக்கு வெறுப்பாகும். உற்றாரும் மற்றோரும் வேம் பாவர். அதனால், தாமும் தீப்புகுந்து உயிர் துறப்பர். இவற்றையெல்லாம் அறியாதவரைப் போல நீங்கள் வருந்துவது அழகன்று. இனி, எனது காவலனை இழந்த யான் உயிர் வாழ முடியாது. என்னைத் தடுக்காதீர்கள்' என்று பலவாறு தேறுதல் கூறினாள்.

முடிவில் நங்கை, தன்னுடைய மக்களைக் கபிலரிடத்தில் அடைக்கலமாக விடுத்து, எவர் உரைப்பதையும் கேளாமல் தீக்குளித்து உயிர் விடுத்தாள்.

பெற்றோரை யிழந்த அப் பெண்மணிகளின் துயரத்தை அளவிட்டுச் சொல்லுதல் இயலுமோ? ஒப்பிலாத் துயருழன்ற அம் மக்களைப் பரிவுடன் நோக்கிப் புலவர் பெருமான் கபிலர், 'பெண்மணிகளே! கடந்தவற்றைக் குறித்து வருந்துவதில் பயனென்ன! நிலையற்ற வாழ்வின் தன்மை இதுவாகும். பல்கால் புலம்பினும் மரித்தோர் மாநிலத்தில் வாரார். ஆதலால், துன்பத்தை நீக்கி என்னுடன் வருவீர்களாக. இனி, ஒரு கணமேனும் இங்குத் தங்குதல்கூடாது' என மொழிந்தார்.

பின்னர், அவ்விரு மக்களோடும், பறம்பு நாட்டை விடுத்து வேறு நாடடையக் கபிலர் புறப்பட்டார். அங்ஙனம் புறப்பட்டவர் தம் இன்னுயிரனைய அவனை யிழந்தமைக்கு அவர் வருந்தினார். அன்றியும் அப் பறம்பு மலையைப் பார்த்துப் பார்த்து அதை விட்டுப் பிரிய மனமின்றி நின்றார். தன்னை விடுத்துப் பாரி இறந்ததை நினைத்து மனமுருகினார். சிறப்பு மிக்க பறம்பு மலைமீதும் அச் சமயம் தமக்கு விருப்பமற்றதை நினைந்து அவர் பெரிதும் மனமுளைந்தார். முந்நூறூர்களையும் பரிசிலாளருக்கே கொடுத்

துப் புகழ்பெற்ற பாரிக்கு அத்தகைய கொடுந் துன்பம் சேர்ந்ததற்கு அவர் மனம் நைந்தார். 'அறநெறி கடைபிடிப்போர் வெற்றி பெறுதல் உண்மையாயிருக்க, அல்லன கனவிலும் கருதா வள்ளலாகிய பாரி மரித்தது ஊழ்வலியாலோ' என்று எண்ணினார். தம்மைப் பின் பற்றி வரும் மெல்லியலார்க்குத் தேறுதல் கூறிய வண்ணம் கபிலர் ஓர் ஊரை யடைந்து ஒருவன் வீட்டில் ஒரு புறத்தில் தங்கியிருந்தார்.

அன்றிரவு வெண்மதியம் தண்கதிர் பரப்பித் தோன்ற பாலெனை நிலவு எங்கும் பரந்தது. நீர் நிலைகளும் தடாகங்களும் பளிக்குப் பாறையெனப் பொலிந்தன. அருகிருக்கும் மரங்களின் இலை வெளிகளில் விழும் நிலா வெளிச்சம் காற்றால் சிதறுண்டு தரையில் விழுந்து தவழ்ந்து மின்மினியென விளங்கியது. எவரும் வியக்கத்தக்க நிலாத் தோற்றத்தைக் கண்ட மகளிர் பலர், உண்பன உண்டு, உடுப்பன உடுத்துத் தாதியர் புடை சூழ, நிலா முற்றத்தில் அம்மனையாடிப் பின்னர் இன்னிசை பாடினர்.

இவர்களுடைய ஆடல் பாடல்களை யறிந்த பாரி மகளிர், தம்முடைய பறம்புமலையும், அதன்கண் விளங்கிய பூஞ்சோலையும், தடாகமும், பளிங்குமேடைகளும் அச்சமயம் கனத்தோற்றமென மறைந்தமைக்குப் பெரிதும் வருந்தினர். தாம் முன்னர்த் தம் பெற்றோரோடிருந்து வெண்ணிலவில் யாதொரு குறைவுமின்றிப் பொற் கிண்ணத்தில் பாலமுதுண்டு, பாங்கியர் பலர் புடைசூழ, நிலா முற்றத்தில் விளையாடியதையும், இப்போது இருமுது குரவரை யிழந்து, ஏனைய செல்வத்தையும் துறந்து கொளுகொம் பற்ற கொடிகளெனத் தயங்கி, கூழமுதுண்டு இருப்பதையும் காண அவர்களுக்கு ஆற்றொணாத் துயர் பெருகியது. மேலும், தாம் சயனித்த பஞ்சணையே கனவாகவும், தரையே

நனவாகவும், கையே தலையணையாகவும் இருத்தல் கண்டு மனம் வெதும்பினர். அதனால்,

" அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேம்எங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே

என்று பாடினர்.

பிறகு, அவ்விருமக்களும் ஒருவருக் கொருவர் தேற்றுதல் கூறி யிருந்தனர்.

அப்போது கபிலர், தம் இணையற்ற துணைவனை பாரியின் நற்குணங்களையும், அவனது வெற்றியையும், கருணையையும் சிந்தித்து வருந்துவா ராயினர். தம் நண்பர் இன்புற்றிடில் தாமும் இன்புறுதலும், அவர் துன்புற்றிடில் தாமும் துன்புறுதலும் நண்பர்களின் குணமாகும். அவ்வாறின்றி, உயிர்த் துணைவன் பாரி இறந்தும், தாம் மட்டும் உயிர் நீங்காமல், உண்டு உடுத்து வாழ்ந்திருப்பதற்குத் தம்மைத் தாமே வெறுத்துக் கொண்டார். தம்மையே கொழுகொம்பாக நினைத்துள்ள பாரி மகளிரை அனாதைகளாக விட்டுச்செல்ல அவர் மனந் துணியவில்லை. தாய் தந்தையரையும், அளவில் செல்வத்தையும் துறந்து வருந்தும் அவர்களைக் காப்பாற்ற அவர் உறுதிகொண்டார். அதனால், அவர்களுக்குத் தக்க மணாளனைத் தேடி வதுவைசெய்து வைத்து அவர்களை உயர் பதவியில் நிறுத்தத் தீர்மானித்தார்.

மறுநாட் காலையில் பகலவனும் செங்கதிர் பரப்பித் தோன்றினன். உலகில் மக்கள் தத்தம் தொழிலை வழுவின்றி நடத்தச் சென்றனர். துயிலெழுந்த பாரி மகளிரைக் கண்டு கபிலர் அவர்கள் கடந்த இரவில் மனம் வாடி வருந்தியுள்ளார் என அறிந்தார்.

அதனால், அவர் அவர்களை நோக்கி, 'மக்காள்! சென்ற இரவு நீங்கள் வருந்தியிருத்தல் வேண்டும். அதை உங்கள் முகத் தோற்றம் நன்கு தெரியப்படுத்துகிறது. இனி, வாடுதல் விட்டொழியுங்கள். வள்ளல் பாரிக்குப் பதில் நான் இருக்கின்றேன். நான் உயிரோடிருக்கும் அளவும் நீங்கள் கவலையற்றிருங்கள்' எனக் கூறினார்.

அவ்வுரைகளைக்கேட்ட பாரி மகளிர், கபிலரை வணங்கித், 'தந்தைபோல்வீர்! தங்களுடைய ஆதரவினால்தான் யாங்கள் இதுகாறும் உயிர் பெற்றுள்ளோம். இன்றேல், முன்னரே எம் பெற்றோர் சென்ற உலகத்திற்கு யாங்களும் சென்றிருப்போம். தங்களுடைய அமுதவாக்கின் பான்மையே எங்கள் துக்கத்தை ஆற்றுகின்றது. ஆயினும், பேதைமைமிக்க நாங்கள் அடிக்கடி வருந்துதலுக்குத் தாங்கள் மன்னிக்கவேண்டும்,' என வணங்கினர்.

பிறகு, கபிலர் அவர்களைப் பார்த்து, 'பெண்மணிகாள்! உங்களைத் தக்க மணாளனுக்கு மணம் செய்து கொடுத்து உங்களை நன்னிலையில் நான்காணவேண்டும். உலகில் மக்களைப் பெற்றோர் ஆண் மக்களுக்குக் கல்வியைக் கசடறக் கற்பிக்க வேண்டும். பெண் மக்களுக்குக் கல்வியோடு நில்லாமல், தக்க கணவரையுந் தேடி மணம் புரிவித்தல் வேண்டும். இதுவே அவர்களுக்குற்ற கடனாகும்' என்று கூறினார்.

பின்னர், அவர்களை அழைத்துச் சென்று அவர் வச்சிர நாட்டை யடைந்தார். அவ் வச்சிர நாட்டை மகாநாடு என்றும் கூறுவர். அந் நாட்டை விச்சிக்கோன் என்னும் சிற்றரசன் ஒருவன் அரசாண்டிருந்தான்.

புலவர் பெருமானாகிய கபிலர் அவனை யடைந்து, 'மன்ன! நான் ஒரு பரிசிலாளன். இப் பெண்மணிகள் இருவரும் பறம்பு நாட்டைப் புகழ்பட ஆண்ட பாரியின் மகளிர்.

இவரை நீ தடையின்றி மணத்தல் வேண்டும்' என்று வேண்டினார்.

கபிலர் மொழிகளைக் கேட்ட விச்சிக்கோன் அவர் விரும்பியபடி நடக்க இணங்கவில்லை.

அதுகண்ட கபிலர் அவனை நோக்கி, 'அரசே! தன்னை நாடி வந்தவருக்கு இன்பந் ததும்பக்கொடுத்து மகிழ்விக்கும் பெருங் குணத்தோன் என நான் உன்னை நினைத்து உன்னிடம் வந்து இரந்தேன். ஆனால், புலவர் முகம் காணப் பெறாத நன்னன் வழி நீயும் நிற்கின்றாய். அந் நன்னனைப் பாட விரும்பி ஔவையார் அவன் ஆண்ட பல்குன்றக்கோட்டம் என்னும் நாட்டை யடைந்து அவனைப் பாடினார். அம் மன்னன் மூதாட்டியின் பெருமையை யுணராதவனாகையால் வாளா விருந்தான். அதுகண்ட தமிழ் மூதாட்டி, "நன்ன! நன்று நன்று நின் பெருமை" என்று கூறி மறுபடியும், "எம்மை இகழ்ந்து பழியைத் தேடிக்கொண்டாய். உன் குணமறியாது யான் உன்னைப் பாடியது என் குற்றமே. நீ குருடனல்லன். ஆனால், புலவர்கள் பாடும் பாட்டும் உரையும் பயின்றறியாத ஓட்டைச் செவியைப் படைத்துள்ளாய்" என்னும் கருத்தையுடைய,

"இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்று நின்குற்றம்—பொருடேரும்
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள."

என்னும் கவியைப் பாடினார். விச்சிக்கோனே! யான் உன்னைப் பாடியதும் என் குற்றமே. நன்னன் பெண்கொலை செய்த பாவி. அவனுடைய மாஞ்சோலையில் காய்த்த மாங்கனியொன்று காற்றில் அறுப்புண்டு அருகில் ஓடும் ஆற்றில் விழுந்து கரையில் ஒதுங்கியது. அப்போது நீராடச் சென்ற ஒரு பெண் அக் கனியைக் கண்டு விரும்

புற்றுத் தின்றாள். இவ் விஷயத்தை ஏவலாளர் மூலமாக உணர்ந்த நன்னன் அப் பெண்மணியை அக்கணமே கொலை புரியும்படி கட்டளை யிட்டான். அஃதுணர்ந்த அப் பெண்ணின் தந்தை மனங் கவன்று நன்னனை அடைந்து, 'மன்னா, என் மகள் அறியாது செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண்டும். அவள் தின்ற மாங்கனி தங்களுக் குரியதென்று அவள் அறிந்திலள். அவள் செய்த குற்றத்திற்கு அபராதமாக எண்பத்தொரு யானைகளையும், அவள் நிறை பொன்னும் இப்பொழுதே தருகின்றேன்' என்று பணிவுடன் பகர்ந்தான். நன்னனோ இரக்கம் என்பது சிறிதுமின்றித் தான் இட்ட கட்டளையை மாற்ற விரும்பவில்லை. அப் பெண்மணியும் அரசனது கனியைத் தின்ற குற்றத்திற்காக உயிரிழந்தாள். இத்தகைய கொடுமை மிக்க மன்னன் வழிவந்த நீயும் எவ்வாறு இரந்தோர்க் குதவுவை' என இகழ்ந்து வெளிச் சென்றார்.

அங்ஙனஞ் சென்றவர் காடுகளையும் ஆறுகளையும் கால்வாய்களையும் கடந்து அரைய நகரை யடைந்தார்.

அப்போது அவரைப் பின்தொடர்ந்த பாரி மகளிர், 'அன்புடையீர், இந் நகரின் பெயர் யாது? இதை யார் அரசு புரிந்து வருகின்றனர்? இவைகளை எங்களுக்கு அருள் கூர்ந்தருளல் வேண்டும்' என்று கேட்டனர்.

உடனே கபிலர், 'மக்காள் இந் நகரின் பெயர் அரையம் என்பது. இது சிற்றரையம், பேரரையம் என இரு பிரிவினை யுடையது. இந் நகரைப் பரிபாலிப்பவன் இருங்கோவேள் என்பான். அவன் வேளிர் குலத்துதித்தவன். அவன் ஒரு சமயம் காட்டில் வேட்டையாடச் சென்றான். அங்குத் தவம்புரிந்திருந்த ஒரு முனிவரை ஒரு புலி துன்புறுத்த எத்தனித்தது. உடனே அம் முனிபுங்கவர் பயந்து அப் புலியைக்

கொல்லுமாறு அரசனை வேண்டினர். அரசனும் அப் புலியை அக்கணமே கொன்று புலிகடிமால் எனச் சிறப்புப் பெயர் பெற்றனன்' என்று கூறினர்.

பிறகு, கபிலர் அவர்களோடு இருங்கோவேளின் அரண்மனை வாயிலை யடைந்து அங்கு நின்ற பணியாட்களை நோக்கிக் 'காவலர்களே! நான் வந்திருப்பதை அரசனுக்குத் தெரிவிப்பீர்கள்' என்று கூறினர்.

அவர்களும் விரைந்து மன்னன் பாலடைந்து, 'அரசே, புலவர் பெருமான் கபிலர் இரு பெண்மணிகளோடு நம் வாயிலில் நிற்கின்றார்; தங்களைப் பார்க்க விரும்புகிறார்' என மொழிந்தார்கள்.

அது கேட்ட இருங்கோவேள், தானே நேரிற்சென்று புலவர் பெருமானை முகமனுரைத்து அழைத்து வந்து தக்க ஆசனத்திலிருத்தி, அவரை நோக்கி, 'தமிழ் வல்லீர், அடியேன் மீது கிருபை பூண்ட தங்கள் அருளே அருள். இன்றே நான் நோற்ற நோன்பின் பலன் வந்தெய்தியது' என்றான்.

கபிலர், பன்முறை இருங்கோவேளையும் பாரிமக்களையும் பார்த்துப் பின்னர் அவனை நோக்கி, 'மன்ன, என்னுடன் இருக்கும் இப் பெண்மணிகள் யாவரோவென்று நீ ஐயுறல் வேண்டா. இரவலர்க்குத் தன் நாட்டையும், நகரத்தையும், ஏனைய பொருள்களையும் அட்டின்றிக் கொடுத்துத் தன் புகழை எண்டிசையும் பரப்பிய பறம்பிற் கோமான் பாரியின் மகளிர் இவர்கள். முடியுடை மூவேந்தர் வயப்பட்டுப் பாரி உயிரிழந்ததை யறிந்த பறம்பிற் கோமாட்டி இம் மக்களை என்னிடம் அடைக்கலமாகக் கொடுத்துத் தீப்பாய்ந்தாள். ஆதலான், தற்சமயம் நானே இம் மகளிர்க்குத் தந்தை யாவேன். யான் இவர்களை உனக்கு மணம்முடிக்கக் கருதி

யுள்ளேன். தடை கூருது நீ இவர்களை அங்கீகரித் தருளல் வேண்டும்' என்ருர்.

உண்மையுணர்ந்த இருங்கோவேள் தன்னுள், 'பாரி யின் புகழ் எங்கும் பரந்தது. அவனை யிழந்ததாலும், தம் தாயை யிழந்ததாலும், மனம் நொந்துள்ள இம் மங்கையரை மணப்பது எவ்வாற்ருனும் சிறந்ததே. இவர்களும் சீரிய ஒழுக்கம் வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனல், முடியுடை வேந்தர் மூவரும் இப் பாரியை வெறுத்து அவனைக் கொன்றனர். நாம் இம் மங்கையரை மணந்தால் அம் மூவேந்தரும் நம்மீது கோபங் கொள்வர். உத்தமரான இக் கபிலர் வார்த்தையை மறுத்துரைத்தால் நாம் இவருடைய கோபத்திற் காளாக வேண்டும். எப்புறம் சென்ருலும் துன்பம். என்ன செய்வது?' எனச் சிந்தித்துப் பேசா திருந்தான்.

பிறகு, ஒருவாறு, துணிவுகொண்டு, வருவது வரட்டு மென்று, கபிலரை நோக்கி, 'புலவர் பெருமானே! நான் உள்ளதை உரைக்கின்றேன். என்மீது சினங் கொள்ளல் வேண்டா. இம் மங்கையர் பாரியின் மகளிராயிருக்கின்ற னர். பாரியோ மூவேந்தராலும் பகைக்கப்பட்டவன். நான் இவர்களை மணக்கின் அம் மூவேந்தர்களுடைய பகை மையை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். ஆத லால், நான் இவர்களை மணத்தலால் என்ன பிரயோசனம்? யாவும் அறிந்த தாங்கள் இவ் விஷயத்தைச் சிந்தியுங்கள். ஆகையால், இதை நீத்து வேறு எதை விரும்பினும் நான் செய்யச் சித்தமா யுள்ளேன்' என்று கூறினன்.

அது கேட்ட கபிலர் கோபங்கொண்டு அவனை உறுக்கி நோக்கினர்.

அம் மன்னனும் அவருடைய கோபத்தைக் கண்ணுற்றுத் திடுக்கிட்டு மனங்கலங்கினன். அவனுடைய முகத் தோற்றத்தினல் அவன் உள்ளப் பான்மையை நன்குணர்ந்த கபிலர், தம்முடைய சினத்தை மாற்றி அருளோடு அவனை நோக்கி, 'மன்ன, நீ இவ்வாறு அம் மூவருக்கும் பயப்படுதல் அழகன்று. எத்தனை பேர் வந்தாலும் என்ன? பாரி ஒருவனே அவர்களை எதிர்த்து வெற்றிமாலை சூடவில்லையா? அஞ்சா நெஞ்சம் படைத்திருப்பதே வீரர்க்கு அழகு. ஆண்மை யற்றோரே அஞ்சுவர். இவ்வச்சமே நம்மைத் துன்பத்திற் குள்ளாக்கும். ஆதலின், இனிமேலாவது என்னுடைய சொற்படி நடந்து புகழ் அடைவாயாக. காலந் தாழ்த்தாது இவர்களை அங்கீகரித்துக்கொள்' எனக் கூறினர்.

இருங்கோவேள், துணிவு பெறாமல், 'பெருமானே, என் மனம் இவ் விஷயத்திற் செல்லவில்லை. தயை செய்து என்னை மன்னிக்க வேண்டும்' என்று மறுவலும் அம் மகளிரை மணக்க மறுத்தான்.

கடைசியாகச் செவிடன் காதில் ஊதிய சங்கநாதம் போலத் தான் உரைத்த வார்த்தைகள் இருங்கோவேளிடத்துப் பயனற்றுப் போயினமையை அவர் உணர்ந்தார். அதனல், அவர் அவன்மீது வெறுப்புற்று, மக்களிருவரும் பின் தொடர வெகு தூரம் நடந்து சென்று, பெண்ணை யாற்றங் கரையிலுள்ள திருக்கோவலூரை யடைந்தார். பின்னர்த் தமக்குத் தெரிந்த ஓர் அந்தணர் வீட்டை யடைந்து அவரிடம் பாரி மக்களை அடைக்கலமாக வைத்து அவர்களுக்குத் தக்க மணாளன் கிடைக்கும் வரையில் அவர்களை அங்கு வைத்து ஆதரிக்கும்படி வேண்டினர். அவ்வந்தணனும் அதற்கு ஒப்புக்கொண்டான். கபிலரும் பாரி மக்களிடம் விடைபெற்றுச் சென்றார்.

## 4. பாரி மகளிரின் மணவினை

புலவர் பெருமான் கபிலர் தம்மை விட்டுச் சென்றதும், பாரி மகளிர் கொழுகொம்பற்ற கொடிகளென வாடி அம் மறையவர் அகத்தே வாழ்ந்து வருவாராயினர். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. அப்போது தமிழ் மூதாட்டியாராகிய ஔவையார் பரிசில் பெற்றுச் சோணாட்டினின்றும் திரும்பினார். முடியுடை வேந்தர் மூவராலும் பாரிக்கு நேர்ந்த விபத்தை அறிந்த ஔவையார் மிக வருந்தி திருக்கோவலூரை நோக்கி வந்துகொண்டிருந்தார். அச் சமயம் மழை பெய்ததனால், ஔவையார் நனைந்து குளிரால் வருந்தி பாரிமக்கள் வசித்திருந்த மனையை யடைந்தார். ஔவையாரைக் கண்ட பாரிமகளிர் அவரைப் பரிவுடன் உபசரித்துத் தங்களோடு தங்கி யிருக்குமாறு வேண்டினர். ஆதரவற்ற நிலைமையிலிருந்த அவர்களுக்காக மனமிரங்கி ஔவையார் அங்குத் தங்கினார். பிறகு, குளிரால் வருந்தும் ஔவையாருக்குக் கொடுப்பனகொடுக்க இயலாமல், தமது நீலச் சிற்றாடை ஒன்றைக் கொடுத்தனர்.

அன்புடன் அளித்த அச் சிற்றாடையை ஏற்று ஔவையார் அம் மக்களை நோக்கி, 'அன்புடை மக்காள்! நீங்கள் உங்களுடைய தந்தையைப்போல வள்ளற்றன்மை மிகுந்தவர்களாகக் காணப்படுகின்றீர்கள். "கொடையும் பிறவிக் குணம்" என்பது உண்மைதானே. உங்கள் குலத்திற் கடுத்த செய்கையையே நீங்கள் செய்தீர்கள். இன்னும், இப்பொழுது நீங்கள் அளித்த இச் சிற்றாடைக்கு ஈடானவற்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

'முன்னொருநாள் உங்கள் தந்தை பாரியிடம் பரிசு பெறச் சென்றிருந்தேன். என்னை அன்புடன் வரவேற்ற பாரி என்னை விடுக்க மனமின்றிப் பரிசில் கொடாமல்

பல நாட்களைப் போக்கினர். ஒருநாள் பரிசில் அளித்து என்னைப் போக விடும்படி நான் வேண்டினேன். என் சொல்லைத் தள்ளமாட்டாத பாரியும், திரண்ட பொருள்களைக் கொடுத்து என்னை வழிகூட்டி அனுப்பினர். பின்னர்த் தம் ஆட்களை ஏவி நான் கொண்டு சென்ற பொருளை அபகரித்தார். அவ்வாறு செய்தால் நான் மீண்டும் வருவேன் என்று பாரி எண்ணியதை நான் உணராமல், மீண்டும் அவரை யடைந்து நிகழ்ந்தவற்றைக் கூறினேன். மீண்டும் நான் வந்தமைக்கு வெளிப் புறத்தில் வெறுப்பும், அகத்தில் உவப்பும் கொண்ட பாரி, நெடுநாள் என்னைப் போற்றிப் பின்னர் முன்னினும் பதின்மடங்கு அதிகமாகத் திரவியம் கொடுத்துப் போகவிடுத்தார்.

'பிறகு, பழையனூர்க்காரியைப் பாடி அவன் ஈந்த பரிசிலோடு, அவனிடம் விடைபெறற்பொருட்டு, கொல்லையில் களையெடுக்கும் இடத்தில் நின்ற அவனை அணுகினேன். என் எண்ணத்தை உணர்ந்த அவன், என்னைப் போக விடாமல், களை களைந்து செல்லும்படி கூறி, ஒரு களைகோலை என்னிடங் கொடுத்தான். அதனால், நான் உடனே விடைபெற முடியாமல், பலநாள் தங்கி அவனோடு அளவளாவிப் பின்னர் விடைபெற்றுச் சென்றேன்.

'மற்றொருநாள் சேரமான் ஒரு விருந்து நடத்தினன். அதற்கு நானும் போயிருந்தேன். அப்போது அங்குப் புதியவனொருவன் வந்தான். அவனுக்கு இடங் கொடுக்க வேண்டிச் சேரமான், தன் அன்பிற்குரியவர் பிறரின்மையால் என்னை வரும்படி கூப்பிட்டான். அவன் குறிப்பறிந்த யானும் எழுந்து, என் இடத்தை அப் புதியவனுக்கு அளித்துப் பின்னர்ச் சேரனோடு உண்டு களித்தேன்.'

'அன்பு மிக்க இம் மூன்று செய்கைகளும், நீங்கள் இன்று எனக்குத் தந்த இந்த நீலச் சிற்றாடைக்கு ஒப்பாகும்' எனக் கூறினார்.

ஔவையாரின் வார்த்தைகளைக் கேட்டுப் பாரி மக்கள் வணங்கி, 'அருளுடையீர்! தாங்கள் விரும்பும் விதமாக யாங்கள் என்ன செய்ய வல்லோம். எங்களுக்கென்று வைத்துள்ள இலைக்கறியைச் சாதாரண உணவென்று இகழாது உண்டு மகிழுங்கள்' எனக் கூறி இலைக்கறியைப் பரிமாறினர்.

அன்புடன் அளித்த அவ்விலைக்கறியைப் பன்முறை சுவைத்துண்ட ஔவையார், 'இதை இலைக்கறி யென்று எவ்வாறு கூறுவது? நற்சுவை பொருந்த நெய் பெய்து பாகம் செய்த இவ்வமுதை இலைக்கறியென்றீர்கள். இவ்வமுதைச் சமைத்த உங்கள் கைகளில் கடகம் விளங்குவதாக' என்று வாழ்த்தினர்.

பின்னர்ப் பாரி மகளிரை எவ்வகையிலேனும் மேன்மைபடுத்த எண்ணங்கொண்ட ஔவையார், அத் திருக்கோவலூரை அரசாண்டிருந்த தெய்வீகன் என்பவனை அடைந்து பாரி மகளிரை மணக்கும்படி கூறினர்.

தமிழ் மூதாட்டியின் சொற்களைக் கேட்ட தெய்வீகன் வணங்கி, 'தங்கள் சொல்லை மறுப்பது என்றால் இயலுமா? நான் தங்கள் சித்தப்படி நடக்கச் சித்தமாய் இருக்கின்றேன். ஆனால், பாரியோ மூவேந்தரால் வெறுக்கப்பட்டவன். அவன் மகளிரை நான் மணப்பின் அவ் வேந்தர்கள் என்னையும் வெறுத்து, எனக்குத் தீங்கு புரியத் துணிவர். ஆதலால், அம் மூவரும் என் மணப் பந்தரில் வந்திருந்து

தம் சம்மதத்தை வெளியிட்டால், நான் பாரி மகளிரை மணக்க ஒருவிதத் தடையுமில்லை' என்றான்.

உடனே ஔவையார் அவன் விருப்பத்தின்படியே சேர சோழ பாண்டியரைத் திருமணத்திற்கு வரவழைக்க ஒப்புக் கொண்டார். பிறகு, தெய்வீகனுக்கும் பாரி மகளிருக்கும் திருக்கோவலூரில் திருமணமென்று மூவேந்தருக்கும் ஓலை போக்கினார்.

மணவோலை கண்ட அக்கணமே, மூவேந்தரும் நால் வகைச் சேனைகள் புடைசூழத் திருக்கோவலூரைச் சார்ந்து தெய்வீகனது அரண்மனையை யடைந்தனர். ஔவையார் அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்து ஆசனங்களில் இருத்தினார்.

பிறகு, அவர்கள் ஔவையாரை நோக்கி, 'தமிழ் மூதாட்டியே, இதோ உள்ள பனந்துண்டம் தழைத்துப் பூத்துக் காய்த்துப் பழந் தந்திடில், தெய்வீகன் பாரி மகளிரை மணக்கலாம்' என்று கூறினர்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட ஔவையார், அவ்வாறே அப் பனந்துண்டம்,* தழைத்துப் பூத்துக் காய்த்து மூவேந்தருக்கும் பழந் தரும்படி,

" திங்கட் குடையுடை சேரனுஞ் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் றார்மணப் பந்தரிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்துக்
* * * * குரும்பைவிட்டு
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே "

என்று பாடினார்.

உடனே பனந்துண்டம், குருத்தீன்று, குரும்பை விட்டு, முற்றிப் பழுத்து நின்றது. அதைக் கண்ட

மூவேந்தரும் வியந்து பாரி மகளிரைத் தெய்வீகன் மணப்ப தற்குச் சம்மதித்தனர்.

பிறகு, தெய்வீகனுக்கும் பாரி மகளிருக்கும் மணவினை சிறப்பாக நடந்தேறியது. மணத்திற்கு வந்திருந்த மக்க ளுக்குப் பொன்னளிப்பதற்காக ஔவையார், வருண பக வான் தண்ணீர் நீத்துப் பொன்மாரி பொழிய வேண்டு மென விரும்பி,

" கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவற்—பெருமணத்து
நன்மாரி தாழ்க்கொண்ட நன்னீரது தவிர்த்துப்
பொன்மாரி யாகப் பொழி "

எனப் பாடவே, அவ்வாறே மேகம் பொன்மாரி பொழிந் தது. வறியோரும் பிறரும் பொன் காசு பொறுக்கி மகிழ் வெய்தினர்.

பின்னர், உணவும் ஆடையும் அளிக்க நினைத்து ஔவையார்,

" பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி யாடையாம்
அன்னுள் வயலரிசி யாகுமூர்—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்குந் திருக்கோவ லூர் "

என்று பாடினார்.

அப்போதே, வயல்களில் அரிசியே விளைய, பருத்திச் செடிகள் ஆடையாய்க் காய்த்தன. மக்கள் அரிசியும் ஆடையும் கொண்டு மகிழ்ந்தனர்.

அதன் பின்னர், அருகிலோடும் பெண்ணை யாற்றில் நெய் பால் பெருகி வரும்படி நினைத்துத் தமிழ் மூதாட்டி யார்,

" முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்தி வருநெய்பா றலைப்பெய்து—குத்திச்
செருமலை தெய்வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவிற் கொண்டோடி வா "

எனப் பாடினார்.

அவ்வாறே பெண்ணை யாற்றில் நெய் பால் பெருகித் திருக்கோவலூர் வரையில் ஓடி வந்தது.

திருமணத்திற்கு வந்திருந்தோர் பலரும் களிப்புடன் மணம் முடிந்த பிறகு தத்தம் இருப்பிடங்களுக்கேகினர். ஔவையார் தெய்வீகனுக்குத் தக்க புத்திமதிகள் கூறி, அறவுரையும் அரச நீதியும் உரைத்துப் பாரி மகளிரை அவன்பால் விடுத்துச் சென்றார்.

அங்கவையும் சங்கவையும், தம் மணாளனை அன்புடன் நேசித்து, மலரும் மணமும் போலவும், பாலும் நீரும்போலவும் மனம் ஒருப்பட்டு வாழ்ந்திருந்தனர்.

முற்றிற்று

# புதிய உப பாடப் புத்தகங்கள்

---

பூ. அ. பாஷிய மையங்கார் அவர்கள் பி. ஏ., எல். டி.
இயற்றியது.

முகல்மன்னர் வரலாறு
(பிற்பகுதி) விலை **0-10-0**

---

கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் இயற்றியது
முத்தேவர் சரிதை விலை 0—10—0

---

வி. எஸ். சுப்ரமணிய ஆச்சாரி அவர்கள் இயற்றியது
அநுமத் விஜயம் விலை 0—10—0

---

தி. ர. சாரங்கபாணி பிள்ளை அவர்கள் பி. ஏ., இயற்றியது
பக்தவிஜய கதைக் கொத்து மலர் 1. 0—6—0
பக்தவிஜய கதைக் கொத்து மலர் 2. 0—8—0
பக்தவிஜய கதைக் கொத்து மலர் 3. 0--10—0

ரா. லோகநாதம் பிள்ளை.
பிரசுரகர்த்தர், 305 வால்டாக்ஸ் ரோட்டு,
சென்னை

Printed by P. R. Rama Iyar & Co., Madras.